
86708

# தேர்ந்த கட்டுரைகள்

தேசிய நூலகப் பிரி
மாநகர நூலக
யாழ்ப்பாண



2232

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வெளியீடு: 10

JPL
C2232

விடுதலைப் புலிகள்
வெளியீட்டு வாரியம்
தமிழீழம்
01 - 06 - 92

# தேர்ந்த கட்டுரைகள்

22332 C.C
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
1992
86708
PUBLIC LIBRARY JAFFNA.
KOHA JPL

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வெளியீடு: 10

தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டு வாரியம்
தமிழீழம்
01 - 06 - 92

86708 C C

320.512/2

KOHA JPL 86708

# பொருளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. ''கம்யூனிசம் அமெரிக்காவிலும் முளைவிடும்!'' | — | 01 — 02 |
| 2. மக்களும் நினைவுகளும் பற்றி ஜே.ஆர். | — | 03 — 10 |
| 3. தீண்ட முடியாதவர் ஒருவரும் இல்லை | — | 11 — 14 |
| 4. குழப்பத்திலுள்ள ஓர் இராணுவம் | — | 15 — 21 |
| 5. ஒரு படைவீரனின் அந்தரங்கக் கதை | — | 22 — 24 |
| 6. மீன்பிடி கடற்பரப்பைப் புலிகள் குழப்புகிறார்கள் | — | 25 — 29 |
| 7. தாய்லாந்தின் இராணுவத் தலைவர் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார் | — | 30 — 32 |
| 8. சீனாவின் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள்; மூன்று தடைகளையும் தகர்த்தெறிதல் | — | 33 — 36 |
| 9. தனிமையில் லெனின் | — | 37 — 39 |
| 10. நான் எனது சகோதரனுக்கு எதிரானவன் | — | 40 — 42 |
| 11. சுவாமி விபுலானந்தர் மொழிபெயர்த்த ''யூலியஸ் சீசரில்'' ஒரு பகுதி | — | 43 — 45 |
| 12. நாம், உலகில் கூடிய மர்மங்களையே காண்கிறோம். குறைந்ததல்ல. | — | 46 — 51 |
| 13. வளைகுடா போரைவிட எதிர்காலப் போர்கள் அதி தொழில் நுட்பம் வாய்ந்தவை | — | 52 — 54 |
| 14. சுவாமி விபுலானந்தரின் மொழிபெயர்ப்புபற்றிய கருத்துக்கள் | — | 55 — 61 |
| 15. மாற்றங்களின் மத்தியிலும் இராணுவம் நடைபோடுகிறது | — | 62 — 65 |

16. மாயமாக மறைந்த கப்பல் — 66 — 68
17. இக்கட்டான / தடுமாற்ற நிலையிலிருக்கும் கிளர்ச்சியாளர்கள் — 69 — 71
18. எதிர்வரும் தேர்தல்களில் சிறுபான்மையினர் — 72 — 74
19. பெரிய பணிகள் அதிக செலவினங்கள், குறைந்த மாற்றங்கள் — 75 — 77
20. வெலிக்கந்தையில் குரூரம் — 78 — 82
21. கோபசேவ் தான் சீர்குலைப்பதனை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை — 83 — 94
22. 4. உண்ணாநோன்பு கொண்டு உயிர்விட்டான்! இதைக்கேட்ட சான்றோரும் உயிர்விட்டனர்! என் மகளைப் பிரிந்த யடனோ? — 95 — 100
23. செனவிரத்தின — ரமேசு இரு சிறிலங்கர்களின் கதை — 101 — 108
24. சிதறல்கள் — 109 — 111
25. மன்னர் துட் (Tut) டின் கல்லறையில் இருந்து 22 நூற்றாண்டுகளுக்குப்பின் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் — 112 — 115
26. ஆப்கானிஸ்தானில் புதிய பரிணாமம் ஆட்சிக் கபையும் அதிருப்திக்குழுவும் போர்க்கோலம் — 116 — 120
27. சிறுபான்மையினருக்கு சுயாட்சி — 121 — 126

# "கம்யூனிசம் அமெரிக்காவிலும் முளைவிடும்!"

-கவிஞர் இன்குலாப்.

"ஒரு தாதி என்ன செய்தாளாம் தெரியுமா? குழந்தையை வாளியில் வைத்துக் கழுவிவிட்டு அந்த அழுக்குத் தண்ணீரைக் குப்பையில் ஊற்றும்போது குழந்தையையும்சேர்த்துக்கீழே கொட்டி விட்டாளாம்" இது லெனின் அடிக்கடி மேற்கோள் காட்டும் ஒரு ஜெர்மனியப் பழமொழி.

இன்றைக்கு ரஷ்யா இதைச் செய்திருக்கிறது. அழுக்குத் தண்ணீரைக் கீழே கொட்டுவதற்குப்பதில் குழந்தையைக் கொட்டி விட்டு உட்கார்ந்திருக்கிறது.

தன் 'கிளாஸ்நாட்' மூலம் கொர்பசேவ் தனக்கு எதிரானவர்களைத் தான் அம்பலப்படுத்துகிறார். எல்சினை கதாநாயகனாக்கத்தான் இந்த கிளாஸ்நாட் பயன்பட்டிருக்கிறது. எல்சின் ஒரு கம்யூனிஸ்டா என்பது கூட அல்ல. அடிப்படையில் அவர் ஒரு நல்ல மனிதர்தானா என்ற கேள்வி இன்று என் மனதில் தலைதூக்கி இருக்கிறது. மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட ஒழுக்கம் கெட்ட மனிதராக இருப்பாரென்று எண்ணுகிறேன் இவர் பதவியில் வந்து உட்காருவது ரஷ்ய மக்களிடம் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

ஒரு அரசு எப்படி அமையவேண்டும் என்பதை அந்த நாட்டு மக்கள் தான் முடிவு செய்யவேண்டும். ஆனால் இந்த அரசு எப்படிப்பட்டதென்று கருத்துச்சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது உலகக்குடிமகன் என்ற முறையில் ரஷ்ய மக்கள் ஜனநாயகத்தைக் கேட்கிறார்கள் என்ற கோரிக்கையில் நியாயம் இருக்கக் கூடும். ஆனால் அவர்கள் கேட்பது அமெரிக்க ஜனநாயகமாக இருக்குமானால் நான் வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. ரஷ்யர்களும் சுரண்டலாளர்களாக மாறிவிட்டார்கள் என்பதைத்தவிர.

அமெரிக்காவினுடைய ஒரு குடிமகனுடைய மேம்பட்ட வாழ்க்கை, ஜெர்மனியர்களுடைய ஒரு சில மேம்பட்ட வாழ்க்கை தான் ஜனநாயகம். அதுதான் தனக்கும் வேண்டுமென்று அடம் பிடித்தால், அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து அரசுகள் நடத்தக்கூடிய உலகக் கொள்ளையில் மூன்றாம் உலக நாடுகள் மீது நடத்தக்கூடிய கொள்ளையில் சோவியத் மக்களும் சேர்ந்து

கொண்டார்கள். இவர்கள் கேட்கும் சுகம் என்பது மூன்றாம் உலகநாடுகளிலிருந்து சுரண்டப்படும் லாபத்தில் வருவது. இவர்கள் கேட்கும் ஜனநாயகம் தவறானது. போலித்தனமானது. தவறான முறையில் சோவியத் மக்கள் வழிகாட்டப்பட்டு இன்று குற்றத்தன்மை சார்ந்தவர்களாகி விட்டார்கள்.

லெனினை - மார்க்ஸை மறுதலிக்கலாம் அவர்கள். ஆனால் லெனினையோ மார்க்ஸையோ அவமானப்படுத்துவதை மூன்றாம் உலக மனிதன் என்ற முறையில் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. லெனினும், மார்க்சும் உங்களுக்குத் தேவை இல்லாவிட்டால் எங்களிடம் ஒப்படையுங்கள் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஒரு உன்னதமான மனிதர் என்ற வகையில் லெனினை பாதுகாப்பது என்னுடைய கடமை.

நயவஞ்சகத்தின் முழு வடிவமாகத்தான் நான் எல்சினையும், கோர்பசேவையும் பார்க்கிறேன். என்றாலும், கோர்பசேவ் நீக்கப்பட்டமுறை தவறு. ஒரு சோசலிச அரசாங்கத்தை நிலை நிறுத்த அரண்மனை புரட்சியல்ல முறை. மாறாக மக்களை ஆயத்தப்படுத்தியிருக்க வேண்டும். இது திரிபுவாதிகளுக்கிடையே நடந்த அதிகாரப் பங்கீடு. கோர்பசேவும், இந்த எட்டுப் பேரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். இவர்களில் சிலர் தற்கொலை செய்து கொண்டதைப்பார்க்கும்போது மெய்யான ஈடுபாட்டோடும் சிலர் இருந்திருக்கக்கூடும்.

இந்தச் சரிவை, பின்னடைவை கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று கூறுவது பொய். இது அவசரக் கணிப்பு. கனவு காண்கிறார்கள். ஒரு கோடியே நாற்பது லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட கட்சியில்பாதிப் பேராவது கம்யூனிச சித்தாந்தத்தில் ஈடுபாடு உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் அடுத்து என்ன செய்யப்போகிறார்களென்று தெரியவில்லை. சோவியத்தில் மட்டுமல்ல அமெரிக்காவிலும் கம்யூனிசம் முளைவிடும்.

(சுபமங்களா அக்டோபர் - 91)

# மக்களும் நினைவுகளும் பற்றி ஜே. ஆர்.

(சண்டே ரைம்ஸ்- 12. 04. 1992.)

நான் டட்லி சேனநாயக்காவின் 1965-70 வரையான அரசியலில் ஓர் மந்திரியாக இருக்கையில் 1966ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கொழும்பு பல்கலைக்கழக அறிவியல் மாணவர் மன்றத்தில் ஆற்றிய உரையின் போது ..... இலங்கைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஏற்படுத்த வேண்டுமென முதன் முறையாக கூறியிருந்தேன்.

சிலநாடுகளில் நிறைவேற்றுனர் மக்களாலேயே நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டசபையின் பதவிக்காலத்தில் அதன் ஆதரவில் தங்கியிருக்கமாட்டார். புதிய பிரான்சின் அரசியலமைப்பு சட்டம், பிரித்தானிய- அமெரிக்க அமைப்புக்களின் கலப்பாகும். அத்தகைய நிறைவேற்றுனர் ஓர் வலிமை வாய்ந்தவர், குறிப்பிட்ட காலத்திற்கு அதிகாரத்தில் இருப்பவர் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர். கசப்பானவை என்றாலும் சரியான முடிவுகளை தமது பாராளுமன்ற கட்சியின் கண்டனங்களுக்கு அஞ்சாது எடுக்கக்கூடியவர். இது எனக்கு இன்று நாம் முகங்கொடுக்கும், ஓர் வளர்ந்து வரும் நாட்டின் பாரதூரமான பிரச்சினைகளுக்கு அவசிய தேவையாகப்பட்டது.

அடுத்து நான் இந்த பிரச்சினை பற்றி குறிப்பிட்டது எதிர்க்கட்சியில் இருக்கும் போதாகும். திருமதி பண்டாரநாயக்காவின் அரசு 1972ஆம் ஆண்டு குடியரசு சட்டவமைப்பை கொண்டு வருவதற்கு, அரசியல் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவது பற்றி ஆலோசிக்கும் வேளையில் தான் இதைச் செய்தேன்.

அரசியல் சட்ட நிர்ணயசபையில் இக்கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவுக்கு முன் வைத்தேன். கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அதை ஏற்றுக் கொள்ளாத டட்லி சேனநாயக்கா இன்றைய உலகில் மிகப் பலம்வாய்ந்த நாடாகவுள்ள அமெரிக்கா அத்தகைய நிலையை நிறைவேற்று செயலுரிமை கொண்ட ஜனாதிபதி அமைப்பினால் தான் பெற்றுக் கொண்டதை மறந்துவிடக்கூடாது எனக்கூறினார்.

## ஆதரவற்ற நிலை.

1971 யூலை 2ஆம் திகதி அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் வெஸ்மினிஸ்ரர் அமைப்புக்கு பதிலாக நிறைவேற்று செயலுரிமை ஜனாதிபதி முறையை பிரேரிப்பதற்கு எனக்கு ஒப்புதல் கிடைத்தது. என்னுடன் எதிர்க்கட்சியில் இருந்த பிரேமதாசா அதை ஆமோதித்தார். எங்களுக்கு ஆதரவு இல்லாததால் இப்பிரேரணை தோல்வி கண்டது.

வெஸ்மினிஸ்டர் அமைப்பு முறையான அரசியல் அமைப்பில் உள்ள நிலையற்ற தன்மை காரணமாகத்தான் ஜனாதிபதி முறை ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு ஒரு காரணம் 1948இல் சுதந்திரமடைந்த நாள் தொடக்கம் எமது நாட்டை எடுத்துப் பார்ப்போம்.

1947ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு கட்சியும் போதிய பெரும்பான்மை பெறவில்லை. அதிககூடிய எண்ணிக்கை உறுப்பினர்களைக் கொண்ட டி. எஸ். சின் கீழான ஐ. தே. கட்சியை தேசாதிபதி அரசாங்கத்தை அமைக்கும்படி கோர, அவரும் அவ்விதம் செய்தார். 21 சுயேச்சை அங்கத்தவர்களின் ஆதரவோடு கூடிய பாராளுமன்ற பெரும்பான்மையைக் கொண்டு தமது வேலைகளை செய்து வந்தார். இச்சுயேச்சைக்குழு இதன் மூலம் தமது விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொண்டது. அரசாங்க பிரேரணைகளுக்கு எதிராக வாக்களித்து அரசை கவிழ்க்கக் கூடிய நிலையில் சுயேச்சைகள் இருந்தார்கள். "தேசத்தின் தந்தை" என்ற நிலையில் பிரிட்டிஷ்சாரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றவர் என்ற முக்கியத்துவத்தினாலும் அவருக்கு இருந்த செல்வாக்கும் ஆளுமையும் சுயேச்சைகளின் ஆதரவைப் பெறுவதற்கு பெருமளவு உதவிற்று.

1952 மார்ச்சில் டி. எஸ். சேனநாயக்கா இறந்ததையடுத்து புதிய பிரதமரான டட்லி சேனநாயக்கா பொதுத் தேர்தலை ஒருமாத காலத்திற்குள் நடாத்தி 2/3 பெரும்பான்மையை பெற்றார். அப்படியிருந்தும் அரசாங்க பாராளுமன்ற கட்சிக்குள் பெரும் குழப்பங்கள் நிலவிற்று. சில மந்திரிகள் ஒன்று சேர்ந்து டட்லி சேனநாயக்கா அரசாள்வதற்கான நிலையை சிரமத்துக்குள்ளாக்கினார்கள்.

1953இல் டட்லி சேனநாயக்கா பதவி விலகியதைத் தொடர்ந்து சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமரானார். அவ

ரும் கட்சிக்குள் சிரமத்திற்குள்ளானபடியால் 1956 பெப்ரவரி மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்தினார். அது பாராளுமன் றத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு 15 மாதங்களுக்கு முன் நடத்தப்பட்டது.

எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா 1956ஆம் ஆண் டுத் தேர்தலின் பின் ஏனைய கட்சிகளின் உதவியுடன் அரசாங் கத்தை உருவாக்கினார் அவர் கூட்டு அரசாங்கத்தை அமைப்ப தற்கு உதவிய கட்சிகள் வெவ்வேறு திசைகளில் செயற்பட்ட தால் அவருக்கும் அரசை நடாத்துவது சிரமமாயிற்று. நீண்ட கால பாராளுமன்ற ஒத்திவைப்பு அவருக்கு கைகொடுக்கவில்லை. 1959 செப்டெம்பர் அவரின் சாவுடன் சிக்கல்கள் மோசமாகி, அவரின் வாரிசமான டபிள்யூ தகநாயக்காவால் மூன்றரை மாத கால ஆட்சியின் பின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

## பெரும் எண்ணிக்கை

இக்கலைப்பைத் தொடர்ந்து 1960 ஏப்ரலில் ஒரு "தொங்கு பாராளுமன்றம்'' தெரிவு செய்யப்பட்டது. ஐ.தே.கட் சியை தலைமைதாங்கிய டட்லி சேனநாயக்காவிற்கு கூடிய உறு ப்பினர்கள் இருந்த போதும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கவில்லை. ''சிம்மாசன பிரசங்கத்தின்'' நன்றி தெரிவிக் கும் பிரேரணையில் தோல்விகண்டதால் அவர் பாராளுமன்றத் தைக் கலைத்தார்.

1960ஆம் ஆண்டு யூன் தேர்தலின் போது திருமதி பண் டாரநாயக்காவின் கட்சியில் பெரும்பான்மை உறுப்பினர்கள் வெற்றி பெற்றார்கள். பாராளுமன்றம் ஓர் நன்மையும் ஏற்ப டாத நீண்டகால ஒத்திவைப்பின் 1964 டிசெம்பரில் அரசா ங்கம் தோல்வியுற்றதால், தனது பதவிக்காலம் 1965இல் முடி வடைவதற்குமுன் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

1965 ஏப்ரல் தேர்தல் டட்லி சேனநாயக்காவை பாராளு மன்றத்தில் பெரும்பான்மையுடன் அரசமைக்கவழிவகுத்தது' அவர் 1965 முதல் 1970 வரை முழுப்பதவிக்காலத்திற்கும் நாட்டை ஆண்டார். 1948இல் சுதந்திரம் பெற்ற பின்னர் இதுதான் ஓர் அரசியல் கட்சி அதன் பதவிக்காலமான ஐந்து ஆண்டுகளும் ஆட்சி செய்தது.

திருமதி பண்டாரநாயக்கா 1970 பொதுத் தேர்தலில் பல கட்சிகளின் உதவியோடு வெற்றிபெற்று ஒரு கூட்டரசாங்கத்தை

நிறுவினார். அவர் 1975இல் தனது முடிவடையும் ஐந்து வருட ஆட்சிக்காலத்தை மேலும் இரு ஆண்டுகளுக்கு கூட்டாட்சி அங்கத்தவர்களின் உதவியோடு நீடித்தார். அவ்வாட்சிக்காலத்தில் அங்கத்தவர்களில் சிலர் அதன் பின்னர் வெளியேறியதால் அவரும் 1977இல் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

1977யூலை தேர்தலில் 5/6 பெரும்பான்மையுடன் ஐ.தே. கட்சி வெற்றி பெற்று நான் பிரதமர் ஆனேன். 1977 யூலை ஆகஸ்ட் மாதத்தில் அரசு அமைக்கப்பட்ட சில மாதங்களில் மந்திரிசபையினதும் பாராளுமன்ற குழுவினதும் ஒப்புதலுடன் 1978 இல் அரசியலமைப்பு பிரேரணை மூலம் நிறைவேற்று செயலுரிமை கொண்ட ஜனாதிபதி முறைமையை ஏற்படுத்தினோம். பல கட்சிகளும் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்றக் குழுவின் பொது அமர்வுகளின் பின் இம்மசோதா 2/3 பங்கு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

வெஸ்மினிஸ்டர் அமைப்பு முறையிலான அரசாங்கத்தில் 1947-1972 வரையும் பின்னர் குடியரசாகி 1972-1977 வரையும் நிறைவேற்று செயலுரிமை பாராளுமன்றத்தில் தங்கியிருந்தது. அவ்வதிகாரம் பிரதம மந்திரியாலும் மந்திரிசபையாலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. சட்டமன்றில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இருந்தாலே ஒருவர் பிரதம மந்திரியாகத் தெரிவாகலாம். ஐக்கிய ராஜ்யத்தில் அந்த ஆதரவைப் பெறாதவரை முடிக்குரியவர் பதவி விலகும்படிகோரி, இன்னொருவரை பிரதமராகும்படி கேட்கலாம் அல்லது பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். சில திருத்தங்களுடன் இம்முறை ஐக்கிய ராஜ்யத்தின் கீழிருந்து தற்போது சுதந்திரமடைந்துள்ள பல நாடுகளிலும் தம்மைத்தாமே ஆளும் டொமினியன் அந்தஸ்துள்ள நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றது. நாம் 1972இல் குடியரசானாலும் எம்மிடமும் இது போன்ற அரசியலமைப்பே இருந்தது.

## ஆதிக்கம்

நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பு அமெரிக்காவிலும் பின்னர் டிகோலின் தலைமையில் பிரான்சிலும் நடைமுறையில் இருந்தது. பிரித்தானியரை தோற்கடித்த பின்னர் அமெரிக்க அரசியல் யாப்பை தயாரித்தவர்கள், முழு நாட்டவராலும் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை நிறைவேற்றுனராகவும், மக்கள் பிரதிநிதிகள் சபையையும் சேனேட்டையும் கொண்ட சட்டமொன்றை, மக்கள் தெரிவின் மூலம் சட்ட இயற்றுனராகவும்

அமைத்தனர். ஜனாதிபதி சட்ட மன்றத்தின் உறுப்பினரல்லாத எந்த அமெரிக்க குடிமகனையும் தமது மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளலாம்.

ஓர் சுதந்திரமான நீதித்துறை, ஜனாதிபதியின் செயலுரிமைகளினால் ஊறு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளக் கூடிய சட்டமன்ற செயலுரிமைகளும் சுதந்திரமாகச் செயற்படும் பத்திரிகைத்துறையும் இவையே, அரசியலமைப்பை ஜனநாயக ரீதியில் நடைமுறைப்படுத்த வழிவகுக்கிறது.

டிகோலின் பிரான்சு அரசியல் யாப்பும் சில மாற்றங்களுடன் இதே நடைமுறையை பின்பற்றியது. உதாரணமாக ஜனாதிபதி தமது மந்திரிசபையை, சட்ட மன்றுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் இருந்து அமைத்துக்கொள்ளவேண்டும். அவ்விதம் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது சட்டமன்ற உறுப்பினராக இருப்பதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

மாற்றத்தைச் செய்யும் அதே வேளையில் அரசியல் யாப்பு தொடர்ச்சியையும்பேணியது.சிலநாடுகள் எழுத்திலானயாப்புகளை கொண்டவை.சில மரபுகளை பின்பற்றின.சில நாடுகளுக்கு இரண்டும் இருக்கவில்லை. ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், சிறிலங்கா இந்தியாவும் வேறு நாடுகளும் எழுத்திலான யாப்புக்களை கொண்டவை. ஐக்கிய இராச்சியம் எழுத்திலான யாப்பில்லாத நாட்டிற்கு ஓர் நல்ல உதாரணம். அங்கு அது இணக்கத்தினாலும் மரபுகளினாலும் சந்தர்ப்பத்திற்கேற்றசட்ட வாக்கங்களாலும்ஆளப்படுகிறது. சில நாடுகளுக்கு அரசியல் யாப்பு இல்லை.அவை சர்வாதிகாரிகளாலும் இராணுவத்தினாலும் ஆளப்படுவதால் அப்படி யாப்பு இல்லாமல் இருக்கின்றது.

சிறிலங்கா,ஆசிய பேரரசுகளான சிங்கள மற்றும் திராவிட முடியாட்சிகளின் கீழும் 1815 வரையும் பின்னர் 1972 மேற்கு நாடுகளின் கீழும் இருந்தது.அதுவரை உலகின் பழமைவாய்ந்த முடியாட்சிகளில் ஒன்றாகவும் கி.மு.600 முதல் தொடர்ச்சியான வரலாறு கொண்டவர்களாகவும் இருந்தோம், விஜய அரசன் முதல் இரண்டாவது எலிசபெத் மகாராணி வரையும் பின்பு 1972ல் குடியரசானோம்.

1815 முதல் 1931 வரை எல்லா நிறைவேற்று அதிகாரமும் முடிக்குரியவர் சார்பாக தேசாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1931ல் டொனமூர் சட்ட அமைப்பினால் நிறைவேற்று செயற்குழு முறையும் சட்டமன்றினால் இரு வேறுகடமைகளுக்கும்

வழிவகுக்கப்பட்டது. ஒன்று, சட்டசபையாக சட்டவாக்கமும் மற்றது சட்டசபையினால் தெரிவான தமது உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்று குழுக்களின் அவ்வதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. மந்திரிகள் இக்குழுக்களின் தலைவர்களாக தெரிவானார்கள். சட்டசபையின் எல்லா உறுப்பினர்களும் வாக்கெடுப்பினால் தெரிவானவர்கள். ஆசியாவில் இலங்கைமக்களே முதலில் வாக்குரிமை பெற்றார்கள்.

## பிரித்தானியமுறை

1947இல்சோல்பரி அரசமைப்பினால் வெஸ்மினிஸ்டர் முறையில் பிரிட்டனின் நடைமுறையைப் பின்பற்றி சட்டமன்றில் பெரும்பான்மைக்கு தலைமை வகித்தவர் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். இந்நியமனத்தை மகாதேசாதிபதி வழங்கினார். 1948 பெப்ரவரியில் பிரித்தானிய மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்ட சுதந்திரசட்டவாக்கத்தினால் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டது. இதனால் பிரிட்டிஷ் பொதுநலவமைப்பில் சுதந்திரமும் தன்னுரிமையும் பெற்ற நாடாக இலங்கை சேர்ந்து கொண்டது.

1972-ல் அரசியல் சட்டநிர்ணயசபை கூடி, பரிசிலித்து புதிய யாப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் இலங்கை குடியரசாகியது. ஆனால் வெஸ்மினிஸ்டர் முறையை தொடர்ந்தும் வைத்திருந்தது.

1978 பெப்ரவரியில் ஐம்பது சதவீத பெரும்பான்மையால் முழுநாட்டினாலும் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுடனும்சட்டவாக்கஅதிகாரம்பெற்ற தெரிவு செய்யப்பட்ட சட்டமன்றுடனும் ஓர்முழுமாற்றம் இடம்பெற்றது.

1978 அரசியல்யாப்பு ஜனநாயகநாட்டிற்கு பொருந்தக்கூடியதாக இயற்றப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி ஏப்ரகாம் லிங்கனின் 1863 இல் கெட்டிஸ்பேர்க்கில் தீர்க்கமான வெற்றியீட்டிய சமஷ்டிப்படைகளின் இறந்தோருக்கான நினைவரங்கைத் திறந்து வைக்கையில் பேசிய பேச்சில் குறிப்பிட்டார். ''ஜனநாயகம் என்பது மக்களால், மக்களுக்காக மக்களாலேயே தெரிவு பெற்றது'' என விபரித்தார்.

1-ம்அத்தியாயம் 3ம் பிரிவு மக்களின் இறைமையை பிரகடனப்படுத்துகிறது. பிரிவு 4 அது எவ்விதம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என கூறுகிறது.(அ) சட்டவாக்க அதிகாரம் மக்களால்தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட பாராளுமன்றத்தாலும் சர்வஜனவாக்கெடுப்பு மூலமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (ஆ) நிறைவேற்று அதிகாரம் மக்களால் தெரிவுபெற்ற குடியரசின் ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (இ) நீதித்துறை அதிகாரம் சட்டயாப்பினால் உருவாக்கி அமைக்கப்பட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது சட்டவாக்கத்தினால் உருவாக்கி அமைக்கப்பட்ட நீதிமன்றுகள் போன்றவற்றால்நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப்பிரிவில் அடிப்படை உரிமைகளும் வாக்குரிமையும் அடங்கும்.

மந்திரி சபை ஜனாதிபதியின் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதம மந்திரியையும் ஏனைய அமைச்சர்களையும் கொண்டதாக அமையும்-அத்தி-8 பிரிவு 43:44.

மக்களின் இறைமையையும் சில அடிப்படை உரிமைகளையும் கொண்ட பிரிவுகளை, பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றி அவற்றை சர்வஜனவாக்கெடுப்பில் மக்கள் அங்கீகரித்தால் அன்றி மாற்ற முடியாது. ஜனாதிபதியின்பதவிக்காலத்தையும் பாராளுமன்றத்தின் ஆயுளையோ ஆறு ஆண்டுகளுக்கு மேல் நீடிப்பதாயின் இது போன்ற அங்கீகாரம் தேவை இது ஓர் தனித்துவமான அம்சம்.ஏனெனில்முழுபாராளுமன்றமும் அவ்வித நீடிப்பை ஆதரித்து வாக்களித்தாலும் ஓர் சர்வஜன வாக்கெடுப்பின் போது மக்களை அதை அங்கீகரிக்காவிடில் அது ஒரு சட்டவாக்கம் ஆகாது. உலகின் எந்தவொரு நாட்டிலாவது சட்ட மன்றினால் மக்களுக்கு எவ்வித தனித்துவமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கவில்லை இந்த அதிகாரத்தின்மூலம் தான்1977இல் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் ஆயுளை மேலும் ஆறு ஆண்டு காலத்திற்குமக்கள் நீடித்தார்கள். இதன்முன் நடந்த நீடிப்புகள் எல்லாம் உதாரணத்திற்கு 1975ல் நடந்தது போன்றவை. பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினால்மட்டுமேயும் அல்லது சுதந்திரத்திற்கு முன்னர் விசேட சட்ட வாக்கத்தின் (Orber incouneil)மூலமும் ஆகும்.

## நிறைவேற்று அதிகாரங்கள்.

அரசாங்கம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, பாராளுமன்றத்திலிருந்து தேர்ந்து



மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

தெரிவு பெற்று பாராளுமன்றிற்கு கூட்டு யொறுப்பாகவும், மறு மொழி கூறவேண்டிய நிலையிலுமுள்ள மந்திரிசபையிலும் தெளிவாக தங்கியுள்ளது. ஜனாதிபதியே இவ் அமைச்சரவைக்கு தலைமை வகிப்பார். (அத்தி- 8)

6ஆம் அத்தியாயத்தில் 27- 29 பிரிவுகளில் பின்வருவன எடுத்துக் கூறப்பட்டுள்ளன. (27- 2 பிரிவை நான் காட்டவேண்டியுள்ளேன்) இந்த பொருளாதார சமூக கொள்கைகள் நிறைவேற்றப்படக்கூடுமானதால் அது சமாதானத்தையும் சுபீட்சத்தையும் கொண்டுவரும். ஆனால் பயங்கரவாதமும் வேறுவகையான வன்முறைகளும் இதற்கு தடையாக உள்ளன. அதுவுமல்லாமல் 1960 யூனிலிருந்து 1964 வரையும் 1970- 77 வரையும் இப்பொழுது சோவியத் ஒன்றியம் கூட கைவிட்ட, பொதுவுடைமை அடிப்படைகளை பின்பற்றிய அரசாங்கங்கள் இருந்தன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 1977 தொடங்கி 83வரை இக்கொள்கைகளிலிருந்து அரசியல் யாப்பில் காட்டியுள்ளபடி திறந்த பொருளாதார திட்டமும் அது போன்ற ஏனைய கொள்கைகள் மூலமும் மீட்சிப்பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் 1983 தொடக்கம் பயங்கரவாதம் தலைதூக்கி எம்மை பயங்கர சூறாவளி போல் தாக்கிக் கொண்டிருக்கிறது.

*கடந்த கால*
*சரித்திரங்களை விட*
*எதிர்கால கனவுகளையே*
*நான் பெரிதும்*
*விரும்புகிறேன்,*

*- தாமஸ் ஜெபர்சன்*

*துக்கங்கள் உங்கள் தலைக்கு*
*மேல் பறந்து*
*கொண்டிருக்குமானால் அதை*
*உங்களால் தடுக்க முடியாது.*
*ஆனால் உங்கள் தலைமுடியில்*
*அவைகள் கூடுகட்டுவதை நிச்சயம*
*நீங்கள் தடுக்க முடியும்.*

*- சீனப்பழமொழி*

# தீண்டமுடியாதவர் ஒருவரும் இல்லை

(நியூஸ்வீக் - 30-3-1992)

அரசியல் ஆட்சிபீடத்தை உருவாக்கியவர் ஒருவரின் படுகொலை பயப்பிராந்தியை தேர்தலை அண்டியுள்ள இத்தாலி முழுவதும் பரப்பிற்று.

கொலை ''மாபியா''வினால் செய்யப்பட்டது என்பது தெளிவாக தெரிந்தது. காலை 9-30 க்கு நகரை அண்டிய நவ நாகரீக பலர்மோவிலிருந்து செயலகத்திற்கு தன்னைக் கூட்டிச் செல்ல சம்மதித்த இருவருடன் சல்வரோர் லீமா தன்வீட்டிலிருந்து வெளியேறினார். எங்கிருந்து வந்தனர் என்று தெரியாத வகையில் தலைக் கவசத்தால் முகங்களை மூடிய இருவர் உந்துருளியில் விரைந்து வந்து காரை சுற்றி வளைத்தனர் காரின் டயர்களையும் துப்பாக்கி வேட்டுக்கள் பதம்பார்த்தன. ''பரிசுத்த தாயே'' என்று விக்கிதார லீமா முன்பக்க ஆசனத்திலிருந்து, இறங்குகையில் மேல் அங்கி கதவில் சிக்கியும் விடுவித்துக் கொண்டு மறைவதற்கு ஓடினார். காலம் கடந்து விட்டது. கொலைஞரின் ஒருவனின் வேட்டு அவரை வீழ்த்தியது. கொலைஞரில் இன்னொருவன் சலனமின்றி இரத்தப் பெருக்கெடுக்கும் லீமாவின் உடலருகில் சென்று கழுத்தின் பின்புறம் மேலும் ஒரு 38 கலிபர் வேட்டைத் தீர்த்தான் - மரபுவழி கடைசிவேட்டு.

சல்வோ லீமாவின் கொலை ஒரு சாதாரண ''மாபியா' அழிப்பாகாது. இம்முறை கொலையுண்டவர் ''ஆட்சியை அமைக்கும் ஆற்றல் உடையவர்'' ''உதவி ஆளுநர்'' என்றெல்லாம் விபரிக்கப்பட்ட சிசிலியின் மிக புகழ்பெற்ற அரசியல் வாதியாகும். ஆளும் கிறிஸ்தவ ஜனநாயக கட்சிக்கும் பிரதமர் கியூலோ அன்ரியோட்ரிக்கும் அத்தீவின் குறைந்த பட்சம் காற்பங்கு வாக்குகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய மனிதராக அவர் இருந்தார். மார்ச் 12 இல் ஏற்பட்ட அவரது சாவு தீர்க்கமான தேசிய பொதுத்தேர்தல் நடப்பதற்கு சரியாக மூன்று வாரங்களுக்கு முன் நடந்தது. அது ஓர் தனித்துவமான நிகழ்ச்சி அல்ல. அதற்கு ஒரு நாளுக்கு முன் ஜனநாயக இடது அணியைச் சேர்ந்த (முன்னாள் பொதுவுடமைக்கட்சி) ஒரு மாநகராட்சி உறுப்பினர் நேபிள்சுக்கு தென்பகுதி நகரம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இப்படி கொல்லப்பட்டவர் ஓர் தீவிர 'மாபியா' எதிர்ப்பு தீவிரவாதி. லீமா இறப்பிற்கு சில மணித்தியாலங்களின் பின் பிரசல்சிலுள்ள இத்தாலிய சோசலிச கட்சியின் கிளையின் தலை

வரும் வெட்டிக் கொல்லப்பட்டார். கடந்த வியாழனன்று ரோமிலுள்ள உள்துறை அமைச்சு நாட்டின் பிராந்திய காவல் துறைத் தலைவர்களை ''அரசை சீர்குலைக்கும் சதி''க்கு எதிராக பாதுகாப்பை பலப்படுத்தும்படி கேட்டுக்கொண்டது.

இத்தாலியின் அரசியல் தலைவர்களில் அநேகர் ஒரு சதிப்புரட்சி உருவாகிறது என்ற எண்ணத்தை எள்ளி நகையாடினார்கள். சிசிலிய ''மாபியா''வும் அதன் சிறு நகர்ப்பிரிவான கமோராவும் கட்டுமாணத்துறை போதைப் பொருள் வியாபாரம் ஆகியவற்றை எதிர்க்கும் எந்தவொரு அரசியல்வாதியும் இறுதித்தாக்குதலுக்கு ஆளாவர் என்ற தீர்க்கமான எச்சரிக்கையை விடுத்துள்ளனர் என்பதை அவர்களால் நிராகரிக்க முடியாது. இக்கொலைகள், குற்றவியலையும் ஊழல்களையும் அரசியல் கோட்பரப்புகையில் முதன்மைப்படுத்தி உள்ளன. இவை பெரிய அரசியல் கட்சிகளுள் இருக்கும் ''மாபியா'' எதிர்ப்பாளர்கள் சில ஆண்டுகளாக இத்தாலிய ''மாபியா''வின் பாரிய ஆற்றலை முறியடிக்க மெதுவாக ஒன்றுசேர்வதைப் பாழடிக்கும்.

''மாபியா'' கொலைகள் உண்மையில் புதியவையல்ல. ஆனால் இவ்வமைப்பு லீமா போன்ற புகழ்மிக்க அரசியல்வாதியை முன்னர் அழித்ததில்லை. அவர் பலமோவின் மாநகராட்சியின் முன்னாள் உறுப்பினரும் முதல்வரும் ஆவார். அத்துடன் தேசிய பாராளுமன்றத்தின் மூன்னாள் உறுப்பினராகவும் வரவு செலவுத்திட்ட, நிதி அமைச்சுக்களின் உதவி செயலரும் 1979 முதல் ஸ்ரஸ்மமக்கிலுள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தின் கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி உறுப்பினருமாவார். 1950துகளின் முற்பகுதியில், ''மாபியா''வும் உயர் அரசியல்வாதிகளும் சலுகைகள் செல்வாக்குகள் ஆகியவற்றை வியாபாரம் செய்து தங்களது பரஸ்பர ஆட்சியின் தொடர்ச்சியை பாதுகாக்கும் சிசிலியின் நேர்மைற்ற மூன்றாம் கட்டம், என கூறப்படும் அமைப்பின் முக்கிய ஆற்றலாக லீமா இருந்தார் என ஊகிக்கப்பட்டார். (இதுபற்றிய தொடர்புகள் எவையும் நிரூபிக்கப்படவில்லை) இக்கும்பல் அவரை பகைப்பதற்கு அவர் என்ன செய்தார்? ஒருவருக்கும் நிச்சயமாக தெரியாது ஒரு புதிய ''மாபியா'' எதிர்ப்புக் கூட்டான 'லாரெற்றே' (ஒருவலை) என்பதில் மேலாளர் ஒருவரான காமெயின் மன்குசோ 'லீமா' மாபியா' ஆனென இல்லாவிட்டாலும் ''மாபியாவிற்கு மிக நெருக்கமானவர் என்று எல்லோருக்கும் திறம்படத் தெரியும் என்றார். அவருடைய கொலை மூலம் எவரும், எவ்வளவு உயர்நிலையில் இருந்தாலும் அல்லது எவ்வளவு நெருங்கி இருந்தாலும் தப்பமுடியாது தீண்ட முடியாதவர் என்று எவரும் இல்லை.

223326 C



இத்தகவல் ஏற்கனவே மிகச் சிக்கல் நிறைந்த தேர்தல் முறை ஒன்றை மேலும் குழப்பும். அங்கு 247 கட்சிகளிலிருந்தும் 11,000 வேட்பாளர்களிலிருந்தும் ஏப்ரல் 5-ல் நடக்கவிருக்கும் தேர்தலில் தெரிவு செய்யப்படவேண்டும். மரதன் ஓட்டக்காரர், சில ஆபாச திரைப்பட நடிகைகள், ஒருசில குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகள் பெட்டோ முசோலினியின் பேத்தியும் இவர்களில் அடங்குவர். இத்தாலியின் விகிதாசார அடிப்படையிலான வாக்களிக்கும் முறையின் காரணமாக அந்நாட்டின் புதிய பாராளுமன்றத்தில் இல்லத்தரசிகளின் கட்சி இளைப்பாறியோர் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் நாட்டின் செழிப்பான வட பகுதியை வளம்குன்றிய தெற்கிலிருந்து பிரிப்பதற்கு கோரும் லோம்பாட் சழகத்தின் பிரிதிநிதிகளும் இடம்பெறுவர்.

## நிதி நிலைமை வீழ்ச்சி.

நீரோட்டத்தில் உள்ள கட்சிகள் வாக்காளர்களை உங்களுக்கு தெரிந்த பேய்களுடன் 'நின்று கொள்ளுங்கள்' என்று கோட்பரப்புகை செய்கிறார்கள். 1945லிருந்து கிழடுதட்டிவரும் சிலவர் ஆட்சிமுறையில் இத்தாலியை ஆண்டுவரும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, பெட்டினோ கிராக்கியின் சிறிய ஆனால் வலிமை வாய்ந்த லோசலிசகட்சி, இன்னும் சில சிறிய நடுநிலைக் கட்சிகளும் இவையாகும். இது நடந்தால் கிராக்கி 1983 -87 வரை பிரதமராயிருந்ததுபோல் திரும்பவும் பிரதமராகலாம். அத்துடன் கோடை காலத்துடன் காலியாகும் ஜனாதிபதிப் பதவிக்கு அன்றியோற்றியும் போட்டியிடலாம் தற்போது பெரிய மாற்றம்கண்டுள்ள பொதுவுடைமைக்கட்சி செயலுரிமையைக் கைப்பற்றாது இருப்பதற்கே வரலாற்று ரீதியாக கிறிஸ்தவ ஜனநாயக கட்சியும் சோசலிச கட்சியும் இணைப்பைப் பேணிவருகின்றன. அந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் கிறிஸ்தவ ஜனநாயக சோசலிசதலைமை நாட்டை ஒழுக்கம், நீதி ஆகிய விடயங்களில் வீழ்ச்சியின் விளிம்பிற்கு கொண்டுவந்துள்ளது என நம்பினாலும் இக்கூட்டுதொடரலாம். அநேகமாக தொடரலாம்.

தனது பொருளாதார நிலைமையை சீர்செய்யாவிடில் ஐரோப்பிய வண்டி''யை இத்தாலி தவறவிட்டுவிடும் என கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி பிரமுகர்கள் கூட கூறுகிறார்கள் நாட்டின் தேசியகடன் ஆண்டு உள்ளூர் உற்பத்தியையும் மிஞ்சியுள்ளது அத்தியாவசிய சேவைகளான ரயில்பாதை, தபால்துறைகள் இயங்குவதில்லை. பணம் படைத்தோரும் ஏழைகளும் ஒரேவித

PUBLIC LIBRARY

மாக வரி ஏமாற்றில் ஈடுபடுவது ஓர் பொழுது போக்காகிவிட்டது. சல்வோ லீமா ஈவிரக்கமற்றவகையில் கொல்லப்பட்டது நிலைமையை மேலும் மோசமாக்குகிறது குறுகியகால கண்ணோட்டத்தில், இத்தாலிய அரசியலை மூர்க்கத்தனமானதாகவும் அபத்தமானதாகவும் ''மாற்றும்'' நீண்டகால நோக்கில் உண்மையில் அரசியலமைப்பு, பொருளாதார, ஒழுக்க சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உருவாக்குவதாகவும் அமையும்.

---

*சில ஓவியர்கள் இருக்கிறார்கள்*
*அவர்கள் சூரியனை ஒரு மஞ்சள்*
*புள்ளி ஆக்கி விடுகிறார்கள்*
*ஆனால் சில ஓவியர்கள் தங்கள்*
*கலைத்திறனால் சிறு மஞ்சள்*
*புள்ளியையே சூரியனாக்கி*
*விடுவார்கள்.*

*- பாப்லோ பிக்காலோ*

*மிதமிஞ்சிக் குடிக்கிற ஒரு*
*மனிதனைப் பார்த்து*
*'மனிதனாக இரு' என்று*
*நான் கூற முடியும்,*
*ஆனால், ஏராளமான*
*மனிதர்களை விழுங்கும்*
*முதலையிடம் 'நீ*
*முதலையாக இரு' என்று*
*நான் கூற முடியாது.*

*ஜி. கே. செஸ்டர்டன்*

# குழப்பத்திலுள்ள ஓர் இராணுவம்

(நியூஸ் வீக் 30-03-1992)

(பெருவின் ஆயுதப்படைகள், சம்பளப் பற்றாக்குறையால் ஏற்பட்ட பாரிய கட்டுப்பாட்டு அமைதியின்மையினால் தளபாட சீரற்ற நிலை, உரிமை மீறல் கரந்தடிப்படையினரின் பேரச்சம் தரும் தாக்குதல் போன்றவற்றில் சிக்குண்டுள்ளன.)

ஓர் இராணுவச் சிப்பாயின் வாழ்க்கை இலகுவானதல்ல புக்குயோவிலுள்ள அன்டியன் (Andean) நகரிலுள்ள பெருவின் இராணுவ துருப்புக்களின் நிலையோ மிகவும் பரிதாபத்திற் குரியது. சென்டிரோ லுமினோசோ Sendero Luminoso - Shining-Path பிரகாசமானபாதை) என்ற மாவோவாத புரட்சியாளருக்கு எதிரான போரில் உணவு காலணிகள் ரவைகள் வாகனங்கள் போன்றவற்றின் கடும் தட்டுப்பாட்டோடு 23 அமெரிக்கடாலர் களை மாத்திரம் மாதச் சம்பளமாக பெறுகிறார்கள். ஆச்சரியப் பட முடியாதவாறு அவர்களின் போர்த்திறனும் குறைந்துவரு கிறது. புக்கியோவை ஜனவரி இரவொன்றில் கரந்தடி அணி யொன்று தாக்கியபோது ஒருபடைவீரனாவது அசையவில்லை. இச்சம்பவம் பற்றி அறிந்த பெருவிய காங்கிரஸ் உறுப்பினர்கள் துருப்புக்கள் தமது வானொலியைக் கூட போரிடும் படியான அறிவிப்பு தமக்கு கிடைக்காதிருப்பதற்காக வேணுமென்று இயங் காமல் செய்தார்கள் என்று கூறினர். பயங்கரவாதிகள் வங்கி யொன்றிற்கும் நகரமண்டபத்திற்கும் குண்டுவைத்தும் மூன்று காவல்துறையினரைக் கொன்று ஒரு தொகை ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டும் ஓடினார்கள்.

பொருளாதார பிரச்சினை போதைப்பொருள், போக்கு வரத்து, மேற்குலக பிராந்தியத்திலேயே மிகவும் காட்டுமிராண் டித்தனமான பயங்கரவாதம் ஆகியவற்றில் மூழ்கியிருக்கும் பெரும் தேசம் தென் அமெரிக்காவின் நோயாளியாக இருக்கிறது. இவ்வளவிற்கு ஊடாகவும் தம் சமூகத்தை பாதிக்கும் எல்லா வியா திகளிலிருந்தும் விதிவிலக்காக உள்ளவர்கள் தமது 120 ஆயிரம் ஆட்களை கொண்ட ஆயுதப்படைகள்என்று / பெருவிய மக்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இனியும் அப்படியிருக்க முடியாது. பன்னிரண்டு ஆண்டுகாலப்போரின் பின்னரும் சுமார் 23 ஆயிரம் பெரும்பாலும் பொதுமக்களின் சாவுக்கு பின்னும் பெருவின் துருப் புகள் சம்பள பற்றாக்குறையால் ஏற்பட்ட கட்டுப்பாடு அமைதி யின்மை தளபாடங்களில் சீரற்ற நிலை உரிமைமீறும் தந்திரோ

பாயங்கள் 'பிரகாசமானபாதை''யினரின் பயங்கரத் தாக்குதல்கள் போன்றவற்றில் சிக்கியுள்ளனர். லிமாவின் தேசிய பாதுகாப்பு ஆராய்ச்சி கழகத்தைச் சேர்ந்த முன்னாள் கேர்ணல் ஜோஸ் பெயி லத்தி ''ஆயுதப்படையினர் ஒருபோதும் இப்படியான மோசமான நிலையில் இருக்கவில்லை'' என்று கூறுகிறார்.

## பயங்கரமும் போதைப்பொருள் கொக்கேயினும்

பெருவிய இராணுவம் ஊக்கமிழக்கும் செயற்பாட்டை உண்மையாக எதிர்கொள்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு, முத லாம் உலக இராணுவங்களையே வட அயர்லாந்தில் பிரிட்டனும் வியட்நாமில் ஐக்கிய அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானில் சோவி யத் ஒன்றியமும் - களைக்க வைத்துள்ளது. வளர்ச்சியடையாத பெருதேசப்படைகள் ''பிரகாசமான பாதை''யினரை மாத்திர மன்றி கஸ்ரோவாத துப்பக் அரும புரட்சிகர இயக்கத்தினரை யும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இரண்டு இயக்கங்களும் ''பிரகாசமான பாதை''யினரும் கட்டுப்பாடற்ற முறையில் பயங்கரச் செயல்களில் ஈடுபடுவதோடு மாத்திரமன்றி பெருவின் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுள்ள சட்டவிரோத கொக்கேயின் தொழிலதிபர்களுடன் இணைந்து செயல்படுகிறார் கள். இப்பயமுறுத்தல்களுக்கு இராணுவம் பரந்துபட்ட காடு களுக்குள்ளும் உயர்மலைப்பிரதேசத்திலும் சிக்கல் நிறைந்த சேரிப் பட்டினங்களிலும் முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

இராணுவம் இன்னமும் தன்னிடமுள்ள வளங்களை நன்கு பயன்படுத்தவில்லை. 1968-80 வரை ஆட்சி நடத்திய இடதுசாரி இராணுவ அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்ட அநேகமானவை சோவியத்தின் உற்பத்திகளான உலங்குவானூர் திகள் டாங்கிகள் வானூர்திகள் சுடுகலங்கள் ஆகியவையே பெரு விடம் உள்ளன. ஆனால் உலங்குவானூர்திகளைத் தவிர மற்றும் கனரகஆயுதங்கள், நடமாட்டத்திலும் மக்கள் ஆதரவிலுமே வெற்றி த கியுள்ள இப்போராட்டத்திற்கு உதவமாட்டா. பெரு தேசத்தின் எல்லைகளுக்கு வரக்கூடிய பயமுறுத்தல்களை அடிப் படையாகக் கொண்டே இராணுவப்பயிற்சியும் திட்டமிடலும் பெருமளவில் தங்கியிருக்கிறது. செலவினங்களின் முன்னுரிமைகளும் இவ்வடிப்படையிலேயே உள்ளன. இராணுவம் தனக்கான நிதி ஒதுக்கீடுகளில் 15 சதவீதத்தையே பயங்கரவாத எதிர்ப்பு நடவ டிக்கைகளுக்கு செலவிடுகிறது. (இராணுவத்தின் இரகசியமான

முழு ஒதுக்கீடு 400 மில்லியன் அமெரிக்கடொலரிலிருந்து 630 மில்லியன் டொலர் வரை எனக் கணிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.)

இராணுவத்தின் துருப்புகளிலும் தளபாடங்களிலும் அரைவாசியிலும் குறைவாகவே தொழில் திறன் கொண்டவையாக இருக்கின்றன. கடந்த டிசம்பர்வரை பெரு நாட்டிலுள்ள சோவியத் தயாரிப்புக்களான 60 உலங்கு வானூர்திகளில் 1/3 பங்கு தான், உற்பத்தி நாட்டில் உதிரிப்பாகங்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய தட்டுப்பாட்டினால் வானில் செலுத்தக்கூடியவையாக உள்ளன. சற்றிப்போவிலுள்ள மேஜர் கார்லோஸ் மெண்டிசின் 230 துருப்புகள் 19,000 சதுர கிலோ மீட்டர் காட்டைரோந்து செய்யவேண்டும். அவர்களுக்கு மிக அருகாமையிலுள்ள உலங்கு வானூர்தி களம் 80 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. அவர் கூறுகிறார்: என்னிடம் ஒரு வாகனமும் இல்லை ஈருருளி தன்னும் இல்லை.

## டாக்சிகள் ஓட்டுதல்

நிதி கட்டுப்பாடுகளினாலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினாலும் துருப்புகளின் சம்பளங்கள் மிகவும் குறைந்துள்ளன. ஓர் போர் முனையில் கடமையாற்றும் மேயைக்கு மாதத்திற்கு 230 அமெரிக்க டொலர்களுக்கு சமமான தொகையும் சிரமபணிக்கான கொடுப்பனவாக பத்து அமெரிக்க டொலர்களுக்கு சமமான தொகையையும் பெறுகிறார். அனேக முழுநேர படைவீரர்கள் வேறொரு தொழிலையும் செய்யவேண்டியவர்களாய் உள்ளனர். உயர்தர இராணுவ கலாசாலையில் பயிலுவோர்களில் மேலாளர்கள் இரவுவேளைகளில் டாக்சி ஓட்டிவிட்டு அடுத்த நாள் வகுப்பு நேரங்களில் நித்திரை ஆகிறார்கள் என்று கேர்ணல் பெயில்ற்றி. கூறுகிறார். மற்றவர்கள் ஊழல்களில் ஈடுபடுகின்றார்கள். கீழ்மட்ட, நடுத்தர மேலாளர் உணவை திரும்பவிற்பது, பற்றுச்சீட்டுகளை மாற்றுதல்கள்' இராணுவ கழகங்களுக்கு ஒப்புதல் வழங்கும் சீட்டுகளை விற்பது போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். சில உயர் மேலர்ளர் பெரிய ஊழல்களான சப்பாத்து மருந்துகள் உதிரிப்பாகங்கள் போன்றவற்றை விபத்து அல்லது விமான தளங்களில் போதைப் பொருள் நடமாட்டத்திற்கு பாதுகாப்பு அளித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று பெருவிய இராணுவ வல்லுனர்கள் கூறுகிறார்கள். ''நாம் எல்லாம் குற்றம் புரியும்வரை நல்லவர்கள் 500 அமெரிக்க டொலர்களுக்கு குற்றம் புரிவோம்'' என்று ஓர் உயர் இராணுவ மேலாளர் நியூஸ்வீக்கிடம் தெரிவித்தார். ' சகல சிவிலியன் மேலாளர்களும் லஞ்சம் பெறுகிறார்

கள். என்னுடைய ஆட்களிடம் அப்படி செய்யவேண்டாம் என்று எவ்விதம் கூறுவது. அவர்கள் அப்படி இருந்தால் பட்டினி இருக்க வேண்டும்.

இதேவேளையில் போரிடும் இடங்களிலுள்ள துருப்புக்களுக்கு நாளொன்றுக்கு 95 சதம் செயலவாகும் கஞ்சியிலதான் உயிர் வாழ்கின்றார்கள். சிறைச்சாலையில் வழங்கப்படும் பங்கீட்டு உணவுக்கு செலவிடப்படும் பணத்திலும் 5 சதம் குறைவானதே இது. யுனின் மாகாண காடுகளில் ரோந்து செல்லும் போது துருப்புகள் கிழிந்த காற்சட்டைகளுடனும் டென்னிஸ் சப்பாத்துக்களுடனும் செல்கிறார்கள். வடபகுதி காட்டுப்புற நகரமான ஈக்குரோஸில் படைகளுக்கு சேர்க்கப்பட்டோர் பயிற்சிகளில் வெறும் கால்களுடன் கலந்து கொள்கிறார்கள். பொதுவாக துருப்புகள் தமது பழைய பெல்ஜிய FAL துவக்குகளுக்கு 13 ரவைகளையே கொண்டு செல்கிறார்கள். கீழ்மட்ட துருப்புக்களின் நழுவல் நின்றபாடில்லை.

அநேக மேலாளர்கள் வெளியேறத்தான் பார்க்கிறார்கள் 1991ல் 10 சதவீதமான 15 ஆயிரம் மேலாளர்களும், மேலாளர் அற்றோரும் வயது வருமுன்பே இளைப்பாறினார்கள். தன்னுடன் இராணுவ கழகத்தில் கல்வி பயின்ற 27 பேரில் எழுவர் நழுவி விட்டனர் என்று ஜாக்ரோரிஸ் கூறுகிறார். கூடியளவில். தேவையான இராணுவ மருத்துவர்களும் மேல்மட்ட இராணுவ சிறப்பு மேலாரும் விலகும் சாத்தியக்கூறு உடையவர்களே இதேவேளை மேற்கு முனையிலுள்ள கொரிலோசின் இராணுவ கல்லூரியில் போருக்கு முந்திய காலத்தில், ஆண்டு சராசரி 2000 ஆக இருந்த புதிதாக சேருவதற்கான விண்ணப்பங்கள் 1991ல் 500க்கும் குறைவாக உள்ளது. 'ஒருவருக்கும் சேர விருப்பமில்லை. பொருளாதார ஊக்குவிப்பு இல்லை. அத்துடன் இறக்கவும் நேரிடலாம்'' என்று ஒரு உயர்மட்ட இராணுவ பகுதியைச் சேர்ந்தவர் கூறினார்.

உண்மையும் அப்படித்தான். 1990ல் இறந்த படையினர் தொகை 106. சென்ற ஆண்டு இறந்த படையினரின் தொகை 156 ஆக உயர்ந்துள்ளது. இரு கரந்தடிக் குழுக்களினாலும் திட்டமிடப்பட்ட படுகொலைகள் தமது அமைப்பு தங்களின் உயிர்களை பாதுகாக்கும் திறன் உண்டென்ற நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் என்ரிக்லோபேஸ் அன்புஜார் 1990ல் லீமாவில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். 1988க்கு பின்னர் அவ்விதம் விதிக்கு ஆளான பன்னிருவரில் இவரும் ஒருவர் சமீபத்தில் ஒரு மூத்த

இராணுவ மேலாளர் தம்மை இனங்கண்டு கொள்வார்களோ எனும் பயத்ினால் லீமா நகரூடாக வாகனத்தை செலுத்தி போகும் போது தமது சீருடைக்கு மேலாக ஓர் அங்கிமைதி (சேட்) அணிந்து சென்றதை ஓர் நியூஸ்வீக் நிருபர் கண்டார்.

நெருக்கடி நிமித்தம் உதவி வேண்டி ஜனாதிபதி அல் பேட்ரோ பிஜிமேதரி ஐக்கிய அமெரிக்காவை நாடுகிறார். ஜன வரி மாதத்தில் திட்டமிடப்பட்ட 24 மில்லியன் டொலர் அமெ ரிக்க உதவியிலிருந்து வாஷிங்டன் பத்து மில்லியன் அமெரிக்க டொலர்களைத் கொடுத்துள்ளது. இவ் பணம் வான்படையின் அமெரிக்க உற்பத்தி வானூர்திகளுக்கு உதிரிப்பாகங்கள் வாங்கவும் பெருவின் கடற்படை அணிக்கு தளபாடங்கள் சேர்ப்பதற்கும். இராணுவ பொதுசன நல்லுறவு பேணும் நடவடிக்கைகளுக்கும் செலவாகும், இவ்வுதவிக்கும் ஓர் நிபந்தனை உண்டு. அமெரிக்க உதவி போதைப்பொருள் நடமாட்ட எதிர் நடவடிக்கைக்குத் தான் பயன்படவேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது.

## உரிமை மீறும் மேலாளர்கள்.

அமெரிக்காவின் கூடுதலான உதவிக்கு மனித உரிமைகள் பிரச்சினை தடையாகவுள்ளது. 1990 யூலையிலிருந்து 91யூலை வரை ''காணாமற் போன'' மற்றும் கொலை செய்யப்பட்டோ ரின் தொகை 237 என்றும் இன்றும் பலர் சித்திரவதைக்குள்ளா னார்கள் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆயுதப்படையி னரையும் காவல்துறையையும் குற்றம்சாட்டியுள்ளது. பெருதே சத்தின் இராணுவத்திற்கு போதைப் பொருள் எதிர் நடவடிக் கைகளுக்கு கூட உதவுவதற்கு அமெரிக்க காங்கிரசின் முக்கிய உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கொடுக்கப்பட்ட 10 மில்லியன் டொலர்கள் கூட லீமா நகர் மனித உரிமை நிபந்தனைகளை அனுசரிக்கிறதென வாஷிங்டன் உறுதிப்படுத்தி யதன் பேரிலேயே வழங்கப்பட்டது. காங்கிரஸ் செப்டெம்பரில் நிபந்தனை வைத்ததன் பின் காணாமல் போதல் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு குறைந்த வீதத்திலேயே நடைபெற் றுள்ளது என பெருநாட்டின் மனித உரிமைக்குழுக்கள் கூறுகின் றன. அண்டியன் கிராமமான சாந்தபராவில் 15 குடிமக்களை கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு லெப்டினனும் 5 துருப் புக்களும் இராணுவ நீதிமன்று முன் நிறுத்தப்பட்டனர். மனித உரிமை கருத்தரங்குகளில் மேலாளர்கள் பங்குபற்றினார்கள்

"பியுஜிமோரியின் கீழ் மனித உரிமைகள் பற்றிய முன்னெடுப்புகள் ஏற்பட்டுள்ளதாக நாம் எண்ணுகிறோம்" என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு மேலாளர் ஒருவர் கூறுகிறார். ஆனால் விமர்சகர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் மேலாளர்களைப் பாதுகாக்கும் இராணுவ பண்பாட்டை பியுஜீமோரா கைவிடவில்லை என்று கூறுகிறார்கள். இராணுவ நீதிமன்றம் மற்றைய இராணுவ விளக்க மன்றங்களை போன்று இரகசியமாகவே நடைபெறும். சாந்தபாயராவில் இடம்பெற்ற படுகொலைகளை உயர்மட்ட மேலாளர்கள் உத்தரவிட்டார்களா அல்லது அவை நடைபெற்றபின் மூடிமறைக்கப்பட்டார்களா என்பவற்றை தீர்மானிக்க விசாரணைகள் நடைபெறா. பெருவின் ஊழல் நிறைந்த பயமுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட நீதிநிர்வாக அமைப்பு சீர் திருத்தப்படும்வரை காணாமல் போதல் நிற்காது கடந்த பத்து ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட 7 ஆயிரம் கரந்தடிப் படை சந்தேக நபர்களில் பிரமிக்கத்தக்க 85·/· சதவீதத்தினர் நீதிமன்களினால் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று சிவில் மேலாளர்கள் கூறுகிறார்கள். இக்காரணத்தினால் கைதுசெய்யப்படும் புரட்சிக்காரர்களைத் தாம் கொலை செய்வதைத் தவிர வேறு வழிதெரியவில்லையென அனேக படையினர் கூறுகின்றனர்.

இவ் இன்னல்களுக்கு மத்தியிலேயும் ஆயுதப்படையினர் மக்களின் நல்லெண்ணம் கொண்டவர்களாக உள்ளனர். செப்டெம்பர் மாதத்தில் அப்போயோ நிறுவனம் நடத்திய கணிப்பில் லீமா நகரின் அரைப்பங்கு மக்கள் தமக்கு ஆயுதப்படையினரில் 'நம்பிக்கை' உண்டெனதெரிவித்துள்ளனர். நூற்றுக்கணக்கான கிராம பகுதிகளில் விவசாயிகள் இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று கரந்தடிப்படையினரின் ஊடுருவலை தடுக்கும் நோக்குடன் தம்முள்ரோந்து நடவடிக்கைகளை ஏற்படுத்தியுள்ளார்கள். அத்துடன் இராணுவமும் தன்னகத்தேயுள்ள மாவீரர்களைப் பற்றியும் பெருமைப்படலாம். கடந்த செப்டெம்பரில் "பிரகாசமான பாதை"யினர் வலிலெமரேல்டா எனும் கிராமத்தில் அசானின் இந்தியர்கள் ரோந்து செல்லுகையில் ஒளித்திருந்து தாக்கினார்கள். ஒரு இந்தியனுக்கு காயம் ஏற்பட்டது. ஆனால் அவனின் சகாக்களில் ஒருவனாவது வயலைத் தாண்டிச் சென்று அவனை காப்பாற்ற முன்வரவில்லை. காப்டன் ஜோஸ் அங்கலிஸ் டயஸ் அவனைத்தானே காப்பாற்ற தீர்மானித்தார். அவர் ரவையால் தாக்குண்டு பின்னர் இறந்தபோதும் காயமுற்றவனை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டுவந்தார்

ஆயுதப்படையினர் பின் தாக்குதல்களைச் செய்வார்கள் என்ற அச்சத்தினால் தான் இப்பொழுதும் அநேக விவசாயிகள் ஆயுதப்படையினருடன் ஒத்துழைக்கிறார்கள். போரில் வெற்றி யடைகிறோம் என்று கூறிக்கொண்டு குடிமக்களின் உரிமைகளை இராணுவத்தினர் பாதிப்பார்கள் என்று பெருநாட்டு அரசியல் வாதிகள் அச்சமடைந்துள்ளார்கள். நவெம்பரில் ஆணையின்றி தேடுதல் செயலுரிமை, தனியார் சொத்தை ஒடுக்கும் செயலுரிமை ''தேசிய பாதுகாப்பு அமைப்பை'' பற்றி தகவல் கொடுப்போரை சிறையிடுதல் போன்ற செயலுரிமைகளைப் படைத்தளபதிகளுக்கு கொடுக்கக் கூடிய வகையில் 30 ஜனாதிபதி செயலாணைகளை பியூஜிமோரி பிரப்பித்தார். அது ஓர் சதிப்புரட்சியே என்கிறார் - முன்னைய காங்கிரஸ் உறுப்பினரான காலோஸ் ரப்பியா ''அதன் பின் சிவில் அரசாங்கமே இருந்திருக்காது. இராணுவத்தினரை சாந்தப்படுத்துவதற்கு குடிமக்கள் ஒத்துழைப்பு திட்டமொன்றிற்காக மேற்குறித்த அநேக ஆணைகளை காங்கிரஸ் பின்னர் தள்ளுபடி செய்தது. பெருநாட்டின் தலைவர்கள் விரைவில் ஒன்று சேர்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். நியூஸ்வீக் ஓர் பெருவிய தளபதியிடம் இன்றைய நிலைப்பாட்டில் இராணுவம் வெல்லுமா என்று வினவிய போது, அவர் இல்லை என தலையசைத்தார்.

---

டி. வி. வந்தவுடன் பில்லி வைல்டர்
என்ற அமெரிக்க திரைப்பட
இயக்குநர் சொன்னது -
''அப்பாடா இதுநாள் வரை
சினிமாதான் கீழ்த்தரமான கலை
என்று கூறப்பட்டு வந்தது;
அதைவிட கீழ்த்தரமான கலையாக
இப்போது டி. வி. வந்துள்ளது
எனக்கு சந்தோஷம்''

# ஒருபடை வீரனின் அந்தரங்கக் கதை

நியூஸ்வீக் 30-03-1992

ஜெமி பெரேஸ் (புனைபெயர்) என்பவர் பெருவிய இராணுவத்தில் முன்பு முன்னுக்கு வரக்கூடிய ஓர் இளம் மேலாளர் போர் பட்டறிவு பெற்றவரும் மேல்மட்ட பயங்கரவாத எதிர் நடவடிக்கை பிரிவின் ஓர் உறுப்பினருமாகும். உயர் மேலாளராக பதவி உயர்வு பெற்றும், அவர் மனம் அமைதியிழந்தும் தளர்ச்சியுற்றும் காணப்பட்டார். பிரகாசமான பாதை Sendero Luminoso கரந்தடிப்படையணி) இவரின் வீட்டை நோட்டமிட்டதுடன் படுகொலைப் பயமுறுத்தலும் விட்டிருந்தனர். இவரின் மாதாந்த சம்பளமான 125 டாலர்களும் குடும்ப செலவுக்கே போதாது. அத்தோடு தூரவுள்ள போர் நடக்கும் பகுதிகளுக்கு அடிக்கடி செல்லும் போது தனது குடும்பத்தில் அக்கறையில்லாது விடுமாப்போல் தோன்றியது. அத்துடன் அவனின் மனச்சாட்சியை உறுத்திக் கொண்டிருந்தது ஒன்றிலிருந்து-மறைமுக நுண்ணிய செயற்பாடுகள் அவற்றில் சந்தேகத்திற்குரிய கரந்தடிப்படையினரை அவர்களின் வீடுகளிலிருந்து பிடித்துச் சென்று 'அழிப்பது, போன்ற கட்டளைகளை நிறைவேற்றுவது சென்ற ஆண்டு இராணுவத்தை விட்டு நழுவி விடவும் தீர்மானித்தார் என்று குடும்பத்திற்கு திங்கு வந்து சேர்வதை தான் விரும்பவில்லை அல்லது கொலையாளியாகவும் மாறவில்லை'' என கூறுகிறார்.

பெரேஸின் கதை, பெருவி சேனையிலுள்ள மேலாளர்களிடையே ஏற்பட்டுள்ள மனநிலை நெருக்கடிகள் பற்றி ஆராயப்படவேண்டியதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். பிரகாசமான பாதையினருக்கு எதிராக இராணுவத்தினர் உண்மையாக போராடும் முறைகளை ஒரு அசாதாரண உள்நேர்க்காளரின் விபரிப்புமாகும். இம்முன்னாள் மேலாளர் நியூவீக்கிடம் ஓர் புனைபெயராலேயே தான் இனங்காணப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் பேசுகையில் தாம் பிரகாசமான படையினாலும் இராணுவத்தாலும் தாக்கப்படலாம் என அஞ்சுவதாகக் கூறினார். பெருவிய மற்றும் இராஜதந்திர நிபுணர்களினதும் சர்வதேச மனித உரிமை குழுக்களினதும் தகவல்களின்படி இம்முன்னாள் மேலாளரின் வாழ்க்கைக் குறிப்புகளிலுள்ள முக்கிய விபரங்கள் ஒத்துப்போவதாக நியூஸ்வீக் உறுதிப்படுத்தியுள்ளது.

அன்டியன் போர் (Andean) பகுதிகளில் தான் இருந்த காலத்தில், குறிப்பிடப்பட்ட கரந்தடிப்டையினர் அல்லது

கரந்தடிப்படை அனுதாபிகளை கைதிகளாகப் பிடிப்பதிலும் பார்க்க, பிடித்து கொல்லும்படி அடிக்கடி கட்டளைகள் இடப் பட்டதாக பெரேஸ், சொன்னார். இராணுவ புலன் விசார ணைப் பிரிவுகளால் திரட்டப்பட்ட தகவலின் அடிப்படையி லேயே இலக்குகள் தெரிவாகின. இப்படியான தண்டனை களைச் செயல்படுத்திய போர் வீரர்கள் இதுபற்றி தங்களை எது வித குற்றச்சாட்டுக்களிலிருந்து மேலாளர்கள் காப்பாற்றுவார்கள் என்னும் நம்பிக்கையில் செய்தார்கள் என்றார் பெரேஸ். ''ஒதுக்கப்பட்ட வேலைகளை அமைதியாக நிறைவேற்று, அது பற்றி அதிகம் பேசாதே'' என்ற இராணுவ மனோநிலையையும் அவர் விளக்கினார்.

## எரிதல்.

தங்களை சாட்சிகள் அடையாளம் கண்டு பத்திரிகைக்குத் தெரிவிக்கவோ மனித உரிமை குழுக்களுக்கு அறிவிக்கவோ முடி யாதவாறு படையினர் இச்செய்கையில் ஈடுபடும் போது முக மூடியணிந்து கையுறைகளுடன் செல்வர். பிரகாசமான பாதை யினர் செய்தனர் என்று நம்பும்படியாக சாதாரண மக்களின் உடையில் படையினர் செல்வதுண்டு. 1990ல் தனக்கு அளிக் கப்பட்ட சிறப்புப் பயிற்சியின் போது எரிப்பது அல்லது ஆற் றிலோ,, வாவியிலோ வீசுவது போன்ற முறைகளில் உடல்களை இல்லாமல் செய்யலாம் என்று பெருவிய இராணுவ பயிற்சியா ளர்கள் பயிற்றுவித்தனர் எனக் கூறினார். மேலாளரின் ஒப்பு தலுடன் அடிப்பது, மின்சாரம் பாய்ச்சுவது, தண்ணீரில் அமுக் குவது போன்றவற்றால் கரந்தடிப்படையினரிடமிருந்து, சந்தேக நபர்களிடமிருந்து தகவல்களைப் பெறுவது வழமையாக நடை பெற்று வந்தது என்று பெரேஸ் தெரிவித்தார். சில கைதிகளின் கட்டுப்பாடு பிரமாதமாயிருந்தது என்றும் கூறினார்.

''நீங்கள் அவர்களைக் கொல்லுகிறீர்கள் இருந்தும் அவர் கள் பேச மாட்டார்கள்'' என்றும் பெரேஸ் கூறினார். 1990ல் தனக்கு கிடைத்த சிறப்புப் படைப்பயிற்சியின் போது தன்னை அடித்ததாகவும் தனக்கு மின்சாரம் பாய்ச்சப் பட்டதாகவும் மணித்தியாலக்கணக்கில் இருட்டறையில் அடைத்துவைத்ததா கவும் நீரில் மூழ்கடித்து இறக்கக்கூடிய அளவுக்கு தன்னை அமுக் கியதாகவும் இவற்றை செய்தபின் தனது மேலாளர் ''இவ்வி தந்தான் ஒரு விசாரணையை நடத்துவது'' என்று கூறினார் என்றும் பெரேஸ் சொன்னார். அவ்வித பயிற்சிகள் வழங்கப்படு வது உண்மையென ஓர் மூத்த மேலாளர் ஏற்றுக்கொண்டா

லும் அதன் நோக்கு துன்புறுத்தச் செய்யும் பயிற்சி அல்ல என்றும் கூறினார். மேலும் அவர் ''எதிரியின் துன்புறுத்தல்களை தாங்கிக் கொள்வதற்காகவே அவர்கள் பயிற்றப்படுகிறார்கள்'' பிரகாசமான பாதையினர்தான் மிகப்பெரும்பான்மையான மனித உரிமை மீறல்களை பெரு நாட்டில் செய்கிறார்கள் என்றும் அரசாங்கப் படையினரால் நடாத்தப்படும் கொலைகளும், துன் புறுத்தல்களும் உத்தியோக பூர்வ கொள்கையை மீறும் ஒரு சிறுபான்மையினரின் செயல்பாடாகும் என்பதே அவரின் கருத் தாகும்.

இப்படியான தந்திரோபாயங்கள் பற்றிய அவரது சந்தே கங்களின் மத்தியிலும் பேரேஸ் தான் விட்டுவிலகியது சொந்த காரணங்கள் என்றும் தனது அமைப்பு என்று கூறிக் கொள்ளும் இராணுவத்தை தரக்குறைவு செய்யும் நோக்கம் தனக்கு இல்லை என்றும் கூறுகிறார். தான் விட்டுவந்த அநேக தோழர் களைப்போல் பிரகாசமான பாதையினரின் பயங்கரவாதம் தான் இராணுவத்தினரை ஆத்திரப்படுத்தி அவர்களை இப்போது செயல்படும் வகையில் செயல்பட தூண்டுகிறதென்றும் வெளி யார்கள் படையினர் கரந்தடிப்போரில் எதிர்நோக்கும் இக் கட்டான நிலையை உணர்ந்துகொள்ள முடியாதிருக்கிறார்கள் என்றும் கூறுகிறார். உமது சகா கொல்லப்பட்டுள்ளதைக் கண்டு அவரை கொன்றவனை (கரந்தடிப்படையினரை) கைது செய்தால் அம்மனிதனை நீங்கள் மன்னிக்கமாட்டீர்கள் என்று சொல்கிறார். 'அவனை கொல்லத்தான் வேண்டும்'' இவரை பொறுத்த அளவில் இக் கொல்லுதல் கொல்லப்படுதல் எனும் நிலை இறுதியில் அவரால் தாங்கமுடியாததாகிவிட்டது.

---

பணம் என்பது உரத்தைப்
போல ஒரே இடத்தில்
குவித்து வைக்காமல்
பரவலாகத்
தூவப்படும்போதுதான்
அது பலன் அளிக்கிறது.

-பேகன்

# மீன்பிடி கடற்பரப்பைப் புலிகள் குழப்புகிறார்கள்

சென்னையிலிருந்து- மதன்மோகன் ராவ்
சண்டே ரைம்ஸ்-12 04.1992

நாகபட்டினம் குவைத்தே மிலாத் மாவட்டத்தின் அக்கரைக் கோட்டையிலிருந்து ஆறு தமிழ்மீனவர்கள் மார்ச் 16-ல்மர்மமான முறையில் காணாமற் போனமையும் இதுவரை அவர்களைப் பற்றி தகவல் ஏதும் கிடைக்காமையும் அவர்களை புலிகள்கடத்திச்சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இங்குள்ளஓர் இராசதந்திரி "கச்சதீவு மற்றும் மீனவர்கள் பிரச்சினைகளில் புதுடெல்கிக்கும் கொழும்புக்கும் இடையில்இருந்துவரும்முறுகல்நிலை காணாமற்போன மீனவர்களின் விடயம். (சிறிலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்டனர் என்று நம்பப்படும்)இரு நாடுகளுக்கிடையேயும் பதற்ற நிலையை மேலும் அதிகரிக்கும்" எனக்கூறினார்.

தமிழ் நாட்டிற்கும் புதுடில்லியிலுள்ள நடுவன் அரசிற்கும் இடையேயுள்ள விரிசல் நிலையைத் தொடர்ந்துவைத்திருப்பதற்கு விருப்பம் கொண்டவர்கள் மீனவர்களின் காணாமற்போனமையை உருவாக்கியிருக்கக் கூடுமென எண்ணுபவர்களும் இருக்கிறார்கள்.

புதுடெல்கிக்கும் கொழும்புக்கும் புதுடெல்கிக்கும் சென்னைக்கும் இடையேயான தொடர்புகள் விரிசல்பட்டிருப்பது ஒரு கட்சியினருக்குமாத்திரம்-தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு மாத்திரம் நன்மைதரும் என்று இங்குள்ள அரசியல் பார்வையாளர்கள் கூறுகிறார்கள்.

"விடுதலைப் புலிகள் மீனவர்களை கடத்திச் சென்றுவிட்டு அந்தப்பழியை சிறிலங்கா கடற்படையினர் மேல் சுமத்தியிருக்கலாம். தமிழ் நாட்டிலுள்ள மீனவர்களும் மக்களும் இக்கூற்றை முழுதாக நம்புவார்கள்" என்று ஒரு இராஜதந்திர வட்டாரம் கூறுகிறது.

இந்த ஆறு மீனவர்களும் காணாமற் போய்விட்டனர் என்று கூறிய நாளிலிருந்து ஏற்பட்ட செயற்பாடுகளுடன் பார்க்கும்போது இதை நியாயப்படுத்தலாம். உலங்கும் வானூர்தி மூலம் கடற்பரப்பில் நடத்தப்பட்ட தேடுதல் பலன் அளிக்கவில்லை. சிறிலங்கா அர

சாங்கம் அம்மீனவர்கள் தம் பாதுகாப்பில் இல்லை என்று திடமாகக் கூறியுள்ளார்கள். மார்ச் 24 ம் திகதி கோடிக்கரையில் ஒதுங்கிய இருவரின் சடலங்கள் காணாமற்போனோரினது என எண்ணப்பட்டது. பின்னர் நடாத்தப்பட்ட விசாரணைகள் மூலம் அவை காணாமற்போன மீனவர்களின் உறவினர்களினால் அவர்களுடையது அல்ல எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

## மீன்பிடி உரிமைகள்.

இந்திய மீனவர்களை தேவையின்றி துன்புறுத்துவதில்லை எனும் தமது வாதத்தைப் பலப்படுத்துவதற்கு சிறிலங்கா கடற்படையினர் கொழும்பிலிருந்து அங்குள்ள பத்திரிகையாளர் குழுவொன்றை பாக்கு நீரிணைக்கு கூட்டிச் சென்று சிறிலங்கா கடற்படை படகுகள் நிலைகொண்ட இலங்கைக் கடற்பரப்பிற்குள் அதிகளவு தூரம் வந்து நின்று எவ்வித தடங்கலுமின்றி மீன்பிடித்துக் கொண்டிருக்கும் பல இந்திய மீன் பிடிப்படகுகளை காண்பித்தனர்.

விடுதலைப் புலிகள் இந்திய மீனவர்களை முன்னர் கடத்திச் சென்றுள்ளனர். (பல தடவைகளில் 800-க்கு மேற்பட்டோரை) விடுதலைப் புலிகள் "ஈழக்கடற் பரப்பில்" தனித்துவமான மீன்பிடிக்கும் உரிமைகள் தமக்கு உண்டென்று விரும்புவதுமல்லாமல் "ஈழ" மீனவர்களின் வலைகளை இந்திய மீனவர்கள் வெட்டிவிட்டு செல்கிறார்கள் என்றும் கூறுகின்றனர்.

இது ஒருபோதும் உண்மையல்ல. ஏனெனில் இந்திய இலங்கை மீனவர்கள் அருகருகே நின்று, சர்வதேச கடற்பரப்பு எல்லைகளை கருத்தில் எடுக்காமல் மீன்பிடித்து வந்துள்ளனர். இது மேலாளர் எல்லைகள் பற்றி பொருட்படுத்தாத வரை நடந்துவந்தது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ளவிட சிறிலங்காவிற்குள்ளும் அங்கிருந்து வெளியேயும் பொருட்களைக் கடத்திச் செல்வதற்கு இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகள் பாவிப்பது தெரிந்ததே. அது மட்டுமல்லாமல் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றாதவர்களும் அல்லது "கெட்டித்தனமாய்" நடப்பவர்களும் தீவிரவாதிகளால் கொலை செய்யப்படுவதும் தெரிந்ததே. விடுதலைப் புலிகளால் கொடுக்கப்படும் தண்டனை கடுமையானதும் உடனடியானதுமாகும். எதிரி அல்லது எதிரி எனக் க... டுபவர் படகில் ஆழ்கடலுக்கு இட்டுச் செல்லப்பட்டு கொல... செய்யப்

பட்டு வயிறு கிழிக்கப்பட்ட நிலையில் கடலில் வீசப்படுகிறார். சுறாக்கள் இறந்தவரின் உடலின் எவ்வித தடையங்களையும் விட்டு வைப்பதில்லை. இப்படி இம்மீனவர்களுக்கும் நடந்திருக்கலாம் என இங்குள்ள உயர்வட்டாரங்கள் கூறுகின்றன.

## கண்டன ஊர்வலம்

மீனவர்கள் காணாமற்போனமை தொடக்கத்தில் தமிழ்நாட்டில் சிறப்பாக அரசியல் வட்டாரங்களில் பெருமளவு அக்கறையை உண்டாக்கியது. முதன் மந்திரி, பிரதம மந்திரிக்கு முழுமையான தேடுதல் கோரி ''டெலெக்ஸ்'' அடித்தார். கச்சதீவு பிரச்சினையும் திரும்பவும் வெளிக்கொணரப்பட்டது. அதன் பின்னர் அனேகமான ஒன்றும் நடக்கவில்லை. நாகபட்டின மீனவர்கள் தொழிலுக்கு மார்ச் 21இல் இருந்து செல்லாதுவிட்டனர். இவ்வியக்கமும் ஒரு வாரத்தின் பின்னர் தானாகவே நின்றுவிட்டது.

மீனவர் காணாமற் போனமை தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு சார்பான மீன் நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தமை ஆச்சரியமானதே. ''அகில இந்திய மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு'' என்ற போர்வையின் கீழ் சென்னையில் புரட்சிகர இளைஞர் கழகத்தின் 70 உறுப்பினர்கள் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். இக்கண்டன ஊர்வலம் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை (தடா) சட்டத்தின் கீழ் கைது செய்வதை எதிர்த்ததுபோல் காட்டிக் கொண்டாலும் உண்மையில் பிரிவினை வாதத்தை முன்னெடுப்பதாகவும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தேடுவதாகவும் அமைந்தது. கூட்டத்தில் இடம்பெற்ற பேச்சுக்கள் இவ் உண்மையை வெளிக்காட்டின.

முன்பு, தமிழ்நாட்டில் இரு விடுதலைப் புலிகள் முதன் மந்திரி ஜெயலலிதாவைபடுகொலை செய்யும் ஏற்பாட்டில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டது. அத்தோடு ராஜீவ்காந்தி மற்றும் பத்மநாபா படுகொலை வழக்கின் காவல் வைக்கப்பட்டுள்ளோரை சிறை உடைப்புக்கள் மூலம் விடுவிக்க முயல்வதாகவும் அறிவிக்கப்பட்டது இன்றியமையாத அமைப்புக்களை சதிமுயற்சி மூலம் சேதமாக்குவதும் நோக்காயிருந்தது.

பத்மநாபா படுகொலை வழக்கு விசாரணைகளில் ஓர் முன்னணி இந்திய அமைப்புக் குழுவே விடுதலைப் புலிகள் சார்பாக

86708

சம்பந்தப்பட்டிருக்கலாம் என தெரியவருகிறது. தமிழ்நாடு காவல் துறை அதிபர் எசு.சிறிபால் அது ஓர் கலப்பு குழுவாக இருக்கலாம் என நம்புகிறார்.

## பயிற்சி

விடுதலைப் புலிகள் பிரமுகர் கிட்டுவுக்கு நெருங்கியவரும் விடுதலைப் புலிகள் புலன் விசாரணை தலைவர் பொட்டு அம்மானால் பயிற்சி அளிக்கப்பட்டவருமான ரவிச்சந்திரன் என அழைக்கப்படும் ரவி, தமிழ் தேசிய மீட்புப்படையின் தலைவர் என தமிழ்நாடு காவல்துறை நம்புகிறது. அத்துடன் 30 முதல் 40 வரையினருக்கு விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்தில் பயிற்சி அளிக்கப் பட்டதாக நம்பப்படுகிறது.

அண்மையில், ஓர் உயர் காவல்துறை மேலாளர் ''அநேகமானோர் கைதாகி உள்ளனர். இன்னும் 10 அல்லது 15 பேர் வரை உள்ளனர்.'' என்று கூறினார். கைதான தேசிய மீட்புப் படையினரிடம் பிஸ்டல்கள், வெடிமருந்துகள், மின்சார டிற்றநேற்றர்கள் (Detonators) பெருந்தொகை பணம் வாகனங்கள் ஆகியனவும் இருந்தன. இவர்களிடம் இப்பொழுதும் இயங்கு நிலைகளிலிருக்கும் கருவிகள் உட்பட வானொலி கருவிகள் இருந்தன. வெளியில் இயங்கிக் கொண்டிருக்கும் தொலை தொடர்பு கருவிகள் யாழ்ப்பாண தமிழர்களால் இயக்கப்படுகின்றன என அவர்களின் உச்சரிப்புக்கள் நன்றாக எடுத்துக்காட்டுகின்றன.

தொடர்பு சாதனங்கள் மூலம் விடுதலைப் புலிகளை சார்ந்தோர்கள் தமது கருத்துக்களை வெளியிட தொடங்கியுள்ளனர். டெல்லி மற்றும் பம்பாயிலிருந்து வெளியாகும் ''சண்டே ஒப்சேவர் பத்திரிகைகளில் சமீபத்திய கட்டுரையில் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொலை செய்யவில்லை என்றும் சிறிலங்கா அரசாங்கம் செய்திருக்கக் கூடும் என்றும், தகுதியற்றதாயும், திறமையற்றதாயும் வாதிக்க முற்பட்டிருந்தது. முன்பு விடுதலைப் புலிகளின் கருத்துக்களை கூறுவோர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்துவந்த காவல்துறையினர் இப்போது சிறிது விட்டுக் கொடுப்பது போல் தோன்றுகிறது. அண்மையில் பஞ்சாப்பிய விடுதலை வீரர் பகத் சிங் நினைவுக் கூட்டமொன்றை நடத்த விடுதலைப்புலிகள் சார்ந்த ஒரு அமைப்பிற்கு பகத்சிங்கை பற்றி மாத்திரமே பேச வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் தரப்பட்டது. ஆனால் ''நக்கீரன்' போன்ற சஞ்சிகைகளுக்கு விடுதலைப்புலிகள் சார்ந்த இலக்கியங்களை பிரசுரிக்க இடமளிக்கப்படுகிறது.

இப்படியிருந்தும் விடுதலைப் புலிகளுக்கோ பிரிவினைவா தத்திற்கோ தமிழ்நாட்டில் ஆதரவு பெருமளவில் இல்லை. தி.மு.க தடா சட்டம் தமக்கு எதிராக பாவிக்கப்பட்டு தமது கழகம் தடை செய்யப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறது.

## சாட்சியம் இல்லை

அண்மையில் ஜெயலலிதா சிறப்பு விசாரணை குழு(SIT)விடு தலைப் புலிகளுடன் நெருக்கமான "சில அரசியல்வாதிகள்" ஏன் விசாரிக்கப்படவில்லை என்று கேட்டுள்ளார். இது தி.மு.க நாடா ளுமன்ற உறுப்பினர் கோபாலசாமி பகிரங்கக்கூட்டங்களில்திரும்ப திரும்ப தி.மு.க அரசை கலைப்பதற்கு காரணமான ராஜீவ்காந்தி தமிழ் நாட்டிற்கு வந்தால் உயிருடன் திரும்பமாட்டார் என கூறி யதையே குறிக்கிறது. இவ்விடயம் விசாரணை செய்வோரின் கவ னத்திற்குக் கொண்டுவரப்பட்டதென ஜெயலலிதா கூறியுள்ளார். ஆனால் அவர் மேல் குற்றம் சுமத்த சாட்சியம்இல்லையெனகூறப் பட்டதாம். தமிழ் நாட்டு முதல் அமைச்சர் மட்டுமல்லாமல் வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டப்பேரவைஉறுப்பினர்களும் தி.மு.க.தலைவர் பலரை கைதுசெய்யும்படியும் தி.மு.க.வைதடை செய்யும் படியும் கோரியுள்ளார்கள். தி.மு.க இவ்விதம் நடந்துவிடு மோ என அஞ்சுகிறது. முன்னர் 1963 ல்பிரிவினைவாத கோட்பரப் புகையை தடை செய்யும் சட்டம் ஒன்று வந்தபோது, இறைமை யுள்ள தமிழ்நாடு கோரிக்கையை முன் வைத்திருந்த தி.மு.க உட னடியாக அக்கோரிக்கையை கைவிட்டது.

தி.மு.க விடுதலைப் புலிகள் பற்றி பேசாது இருக்க பாட் டாளி மக்கள் கட்சி அவர்களுக்காக குரல் கொடுக்கிறது. இக்கட்சி யும் தி.மு.க வினரைப் போல் மதிப்பற்ற கட்சியாகும். அவர்கள் அரச பொறுப்பை ஏற்றுக்கொள்ளதற்கு தகுதி அற்ற சர்ச்சைக ளில் ஈடுபடும் குழுவென கருதப்படுகிறது. அவர்கள் செல்வாக்குப் பெற்ற இடங்களில் கூட 6% சதவீதத்திற்கு குறைவான வாக்கு களையே பெற்றிருக்கின்றார்கள்.

குறிப்பு:-விடுதலை இயக்கம் ஒன்றிற்கு எப்படி திட்டமிட்ட ரீதியில் இந்திய பத்திரிகையாளர் மாசு கற்பிப்பவர் என்பதற்கு இக்கட்டுரை சிறந்த எடுத்துக்காட்டாகும். (இந்திய மீனவர்கள்சிறி லங்காப் படையினரால் கொல்லப்படுவதுஎல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.) இதை தெரிந்து கொண்டும் இந்திய மீனவர்கள் வயிறுகிழிக்கப்பட்டு சுறாவுக்கு உணவாக்கப்படுகின்றனர் என எழுதப்பட்டதின் பின்னால் உள்ள மிகக் கேவலமான உள்நோக் கங்களை நாம் இனம் கண்டு கொள்ளவேண்டும். ★

# தாய்லாந்தின் இராணுவத் தலைவர் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார்

(டெய்லி நியூசு 7-4-92)

தாய்லாந்தில் இராணுவத்தை ஆதரிக்கும் பாராளுமன்றக் கூட்டாட்சியினர் எதிர்ப்புக்களும், ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் தோன்றும் எனத் தெரிந்தும் இராணுவத் தலைவரான ஜெனரல் சுசிந்தா கிறபிறயூன் (Gen. Suchinda Krapra oon) அவர்களைப் பிரதம மந்திரியாகச் சென்ற ஞாயிறன்று நியமித்துள்ளனர்.

ஞாயிறு இரவு அரண்மனை மண்டபத்துக்கு (Grand Palace) அருகே கூடிய நூறு பல்கலைக்கழக மாணவர்கள் தேர்தல்மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒருவரே இந்த உயர்ந்த பதவிக்கு நியமிக்கப் படவேண்டுமெனக் கோரினர்.

தேசிய பாதுகாப்பின் நிமித்தம் ஜெனரல் சுசிந்தா தான் இப்பதவிக்குச் சிறந்தவர் என ஐந்து கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியின் தலைவரான திரு. மொன்றி பொங்பானிச் கூறுகின்றார்.

சமூக முன்னணிக்கட்சியின் தலைவரான (Social Action Party) திரு. மொன்றி திரு. சுசிந்தாவை நியமித்ததனால் எது வித பாதிப்பும் ஏற்படுமெனத் தான் எதிர்பார்க்கவில்லை எனக் கூறுகின்றார்.

''நாங்கள் தேர்தலில் வெற்றிபெற்ற ஒருவரையே பிரதம மந்திரியாக்க எண்ணினோம். ஆனால் தற்போது எல்லோரும் ஏற்றுக்கொள்பவரும், நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் எல்லோராலும் மதிக்கப்படுபவருமான ஒருவர் தேவை'' எனக் கூறுகின்றார் சாட் தாய்க்கட்சியைச் (Chart Thai Party) சேர்ந்த திரு. சனோதியன்தொங் அவர்கள்.

இந்தப் பதவியைத் திரு. சுசிந்தா ஏற்றுக்கொள்ளுவாரா என அவருடைய கருத்தைக் கேட்டறிவதற்கு அவரை உடனடியாகச் சந்திக்க முடியவில்லை.

இராணுவத்தை ஆதரிக்கும் கூட்டணிக் கட்சிகளுக்குப் பாராளுமன்றத்தில் சிறுபெரும்பான்மையே இருப்பதால், மார்ச்

மாதம் 22 ந் திகதி தொடக்கம் தாய்லாந்தின் அரசியல்வாதி களும், இராணுவத் தலைவர்களும் மாறி மாறி இரகசியக் கூட் டங்களை நடத்திய வண்ணம் இருக்கின்றனர்.

தேர்தலில் போட்டியிடாத ஒரு இராணுவ ஜெனரலைப் பிரதம மந்திரி பதவிக்கு நியமிக்கப் போவதாக கூட்டணியினர் அறிவித் திருந்த போதும். மக்களின் எதிர்ப்புக் காரணமாகப் பொதுமகன் ஒருவர் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

இப்படித் தெரிவு செய்யப்பட்ட பொதுமகனான திரு. நாறொங் வொங்வாங் (Narong Wongwang) அரசியலைத் தொழிலாகக் கொண்டதோடல்லாமல் மரவியாபாரத்திலும், புகையிலை வியாபாரத்திலும் பெரும்பணத்தை ஈட்டியவர். அவர் 1991 ம் ஆண்டு அமெரிக்காவுக்குச் செல்வதற்காக பயண அனும திச் சீட்டுக்கு விண்ணப்பித்தபோது, அனைத்துலக போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புள்ளவர் என அமெ ரிக்கா சந்தேகித்ததனால் ஒப்புதல் மறுக்கப்பட்டது எனப் பின்னர் தெரியவந்தது. ஆனால் தனக்குப் போதைப்பொருள் கடத்தல் கா்ரர்களுடன் எதுவித தொடர்பில்லை என அவர் மறுத்துள் ளார்.

1991 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்பட்ட சதிப்புரட்சி யின் பின்னர் நாட்டை ஆட்சி செய்துவரும் காபந்து அரசாங்க மான இராணுவத்தின் தேசிய சமாதான பாதுகாப்புச்சபை (National Peace Keeping Council) சனிக்கிழமையன்று திரு. நாறொங் அவர்களின் பெயரை நிராகரித்ததோடு, கூட்டணியில் உள்ளோ ரில் வேறு பெயர்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தது.

பிரதம மந்திரிப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவரின் பெய ரைப் புதிய அரசியல் யாப்பின்படி அரசர் பூமியால் அதுல்யா டெச் அவர்களுக்குச் சமர்ப்பிக்கவேண்டிய இராணுவ ஆட்சிக் குழுத்தலைவராக இருக்கும் ஜெனரல் சா்தோர்ண் கொங்சொம் பொங் மற்றைய இராணுவத் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே பெயரை அறிவிக்கமுடியும் எனச் சென்ற ஞாயிற்றுக் கிழமை கூறியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் மேஜர் ஜெனரலும், பாங்கொக்கிலுள்ள எல்லாத் தேர்தல் தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ள பாலங் தர்மக்கட்சி (Palang Tharma Perty) யின் தலைவருமான சம்லொங் சிறிமுவாங் இரா ணுவ ஜெனரல் ஒருவரைப் பிரதம மந்திரியாக்குவது, நாட்டில் மூசகக்கிளர்ச்சிகள் தோன்ற வழிவகுக்கும் எனக் கூறியுள்ளார்.

நான் எனது மூத்த இராணுவ நண்பர்களை இது விடயமாக எச்சரித்துள்ளேன் எனத் தேர்தலின் பின்னர் அவர் கூறினார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரையே பிரதம மந்திரியாக நியமிக்க வேண்டுமெனத் தாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தப் போவதாக மாணவப் புரட்சியாளர்கள் சென்ற ஞாயிறன்று கூறியுள்ளனர்.

தாய்லாந்தின் அரசியல் யாப்பின்படி இராணுவத் தலைவரும், மூத்த படைத்தலைவருமான திரு சுசிந்தா பிரதம மந்திரியாய் பதவி வகிக்கலாம். ஆனால் முதலில் அவர் இராணுவத்திலிருந்து விலகவேண்டும்.

ஆட்சியமைக்கும் முயற்சியில் முட்டுக்கட்டை ஏற்பட்டதால் தோன்றிய சிறிய ஒற்றுமையைக் கூட்டணியின் தீர்மானம் காட்டுகின்றதென சதிப்புரட்சி மூலம் பதவியை இழந்த முன்னாள் பிரதம மந்திரி திரு. சதிச்சாய் சூன்காவன் (Chatichai Choonhavan) பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார்.

திரு. சுசிந்தா அவர்களின் அதிகமான ஆதரவாளர்கள் இராணுவத்தில் முக்கிய பதவிகளை வகித்துவருவதால் நாட்டில் உறுதிப்பாட்டைக் கொண்டு வர அவரால் முடியுமெனத் தான் கருதுவதாக திரு சதிச்சாய் தனது 72 வது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு வருகை தந்தவர்களுக்குக் கூறினார்.

அரசியல் யாப்பின்படி திரு. சுசிந்தாவைப் பிரதம மந்திரியாக நியமிப்பது கூட்டணியினரின் கடமை என எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் தலைவர் திரு. சுவான் லிக்பாய் கூறியுள்ளார்.

இராணுவத் தலைவரை பிரதம மந்திரியாக்குவது தாய்லாந்தில் நீண்டகால உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் என்பதைத்தான் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், அது தற்போதைக்கு அவர்களிடையே நிலவும் அரசியல் முட்டுக்கட்டைகளைத் தீர்க்கவே உதவும் எனவும் அவர் கூட்டணியினரின் தீர்மானம் பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

திரு. சுசிந்தா பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டால், முழு செயலுரிமையுள்ள முடியாட்சி தாய்லாந்திலிருந்து அகற்றப்பட்ட 1932 ம் ஆண்டுக்குப் பின் இராணுவத்திலிருந்து நேரடியாகப் பிரதம மந்திரிப் பதவி வகிக்கும் எட்டாவது ஆட்சித் தலைவராக இவர் இருப்பார். ★

# சீனாவின் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள்:

# மூன்று தடைகளையும் தகர்த்தெறிதல்

-சீ பின் — ஐலன்ட் 23-4-92

இந்த வருடம் சீனா, தனது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்குள் இருக்கும் முக்கிய மூன்று தடைகளையும் தகர்த்தெறிய முனைப்புடன் செயற்படப்போகின்றது. இம்மூன்று தடைகளும் பின்வருமாறு :-

1) பாதுகாப்பான பதவிகளை வகிக்கும் நிறுவன மேலாளர்கள் (அதிகாரிகள்)
2) ஆயுட்கால தொழில்வாய்ப்பு.
3) செயற்திறனைக் கருத்தில் கொள்ளாத ஊதியம்.

சாதாரண கணக்கீட்டின்படி பாரிய, நடுத்தர நிறுவனங்களில் மூன்றில் ஒரு பகுதி நட்டத்தில் இயங்குவதாகத் தெரியவருகிறது.

இந்த நட்டத்தில் இயங்கும் அரச பொருளாதார நிறுவனங்களை மீட்டெடுப்பதாயின், அவைகளின் நிர்வாக முறைகளில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் எனப் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஒரு நிறுவனம் நட்டத்தில் இயங்குவதாகத் தெரியவந்த போதும் அந்த நிறுவனத்தின் மேலாளர்கள் தொடர்ந்தும் அதே பதவிகளில் சொகுசாக இருந்து வருகின்றார்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு அதே பதவிகளுக்கு மாற்றப்படுகின்றனர். தொழிலாளர்கள் தொடர்ந்தும் தங்களது ஊதியங்களையும் விருப்பக் கொடுப்பனவுகளையும் பெற்றுவருகின்றனர். இது தான் இங்கே இருக்கும் தர்மசங்கடமான நிலையாகும்.

இப்படிப்பட்ட நிறுவனங்களில், முன்னேற்றகரமான கொள்கைகளை வகுத்து நட்டத்தை இல்லாமற்செய்ய சிறிய அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாமல் இருக்கின்றது. இந்த நிறுவனங்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தின் கையிருப்புகளில், கைவைக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந்த நடைமுறையை இப்படியே தொடரவிட்டால் நட்டங்கள் பெருகுவதோடல்லாமல் அரசாங்கக் கையிருப்புக்களும் தேய்ந்துபோகும் அபாயங்கள் ஏற்படும். இதனால் முக்கியமான இந்த மூன்று தடைகளையும் தகர்த்தெறியவேண்டும்.

பாதுகாப்பான பதவிகளை வகிக்கும் நிறுவன மேலாளர் இயக்குனர்களும் முகாமையாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படவேண்டுமென்று பொருளாதார மறுசீரமைப்பு அரச ஆணைக்குழுவின் பொருளாதார நிபுணரான திரு. கோயின் பியோ (Cao yin Biao) கூறுகின்றார். இவ் மேலாளர்களினதும், தொழிலாளர்களினதும் செயல் திறனடிப்படையிலும் நிறுவனங்களின் செயற்திறனடிப்படையிலுமே பதவி உயர்வு, பதவி குறைத்தல், பதவிநீக்கம் ஆகியன தங்கியிருக்க வேண்டும்.

திறமையற்ற மேலாளர்களின் பதவிகளைக் குறைத்துத் தொழிலாளர்களாகச் செயல்படச் செய்தும், முகாமைத்துவத் திறமை வாய்ந்த தொழிலாளர்களைத் தலைமைப் பதவிக்கு பதவி உயர்த்தவும் வழிவகுக்கப்படல் வேண்டும்.

முழுத் தொழிலாளர்களையும், மேலாளர்களையும் ஒரு பொது ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்துவதனால் இரண்டாவது தடையான ஆயுட்காலத்தொழில் வாய்ப்பு என்ற குறைபாட்டை நீக்கிவிடலாம் எனத் திரு. கோ மேலும் கூறினார்.

ஊதியங்களையும், விசேட கொடுப்பனவுகளையும் கொடுப்பதில் இருக்கும் இடையூறுகளை நீக்குவதற்கு இரு மாற்றங்கள் தேவைப்படுகின்றன. நிறுவனத்தின் வருமானத்தைப் பொறுத்தும் ஊதியம் வழங்குதல் மற்றும் தொழிலாளர்களின் பொறுப்பிலும் செயல்திறன் அடிப்படையிலும் ஊதியம் வழங்குதல் ஆகிய முறைகளைக் கையாளவேண்டுமெனத் திரு. கோ கூறினார்.

கிழக்குச் சீனாவிலுள்ள சியாங்கு மாகாணத்தின் (Jiangsu Province) சூசௌ (Xuzhou) நகரத்திலுள்ள கைத்தொழில் நிறுவனங்கள் இந்த மூன்று தடைகளையும் தகர்த்தெறியக் கடுமையாகப்பாடுபட்டன.

1991 ம் ஆண்டின் இரண்டாவது அரைவருட ஆரம்பத்தில் இந்த சூசௌ நகரம் முதலாவது தடையைத் தகர்த்தெறிந்து

தனது தொழில்பேட்டைகளிலுள்ள முகாமைத்துவ மேலாளர் களைமுனைப்புடன் செயல்படவும் அவர்கள் தங்கள் பொறுப்புக் களை உணர்ந்தும் நடக்கவும் வழி வகுத்தது.

சென்ற செப்தம்பர் மாதத்தில் 2ம் துணை இயக்குனர்களைப் பதவிநீக்கம் செய்ததோடல்லாமல் 6 இயக்குனர்களைத் துணை இயக்குனர்களாகப் பதவி இறக்கம் செய்தது.

இரண்டாவது தடையை நீக்கும் பொருட்டு, சூசௌ மாநகர நிர்வாகம் தகமையற்ற தொழிலாளர்களைத் தொடர்ந்து பதவி யில் வைத்திருக்க ஒப்புதல் தரவில்லை. தகைமையற்ற தொழி லாளர்கள் பயிற்சிக்காகத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அனுப் பப்பட்டதுடன், பயிற்சிக் காலத்தில் அவர்களது ஊதியமும் குறைக்கப்பட்டது. ஒரு ஆண்டு பயிற்சியின் பின்னரும் அவர்கள் தகுதிபெறாதிருப்பின், அவர்கள் பதவிநீக்கம் செய்யப்படுவர் என அறிவுறுத்தப்பட்டனர்.

மூன்றாவது தடையை நீக்கும் வகையில் சமதொழிலுக்குச் சம ஊதியம் என்ற நிலைப்பாட்டை நீக்கி தொழிலாளர்களின் செயல்திறனுடன் அவர்களுடைய ஊதியத்தை தொடர்புபடுத் தியது.

கடுமையான தொழிலைச் செய்யும் தொழிலாளர்களுக்கும், தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர்க் கும் ஊதியங்களும் மேலதிகக் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப் பட்டன.

1991 ம் ஆண்டு முதல் அரையாண்டின் இறுதியில் சூசௌ நகரத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கு 27 மில்லியன் யுவான் (Yuan - 4 மில்லியன் டாலர்கள்) நட்டம் ஏற்பட்டது. இந்த மூன்று தடைகளையும் தகர்த்தெறிந்தபடியால் ஆண்டு முடிவல் இத் தொழிற்சாலைகள் 70 மில்லியன் யுவானை (12.8) மில்லி யன் டாலர்கள்) இலாபமாகப் பெற்றன.

இந்த மூன்று தடைகளையும் நாடு பூராவும் தகர்த்தெறி வது அவ்வளவு சுலபமாக இருக்கமாட்டாது இதை நடைமுறைப் படுத்தத் திடமான உள்நோக்கமும், திட சங்கற்பமும் தேவை.

முதலாவதாக இந்தச் சீர்திருத்தத்தை நிறுவனங்களின் மேலா ளர் தரப்பில் மாத்திரம் செய்யாது அவர்களுடன் அரசாங்க மேலாளர் தரப்பிலும் செய்யப்படவேண்டும். சீனாவிலுள்ள

அனேகமான மேலாளர் தங்களது பதவிகளை ஆயுட்காலப் பதவிகளாக நினைக்கின்றனர்.

இந்நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்கள் இதுவரைகாலமும் அந்நிறுவனங்களின் முதலாளிகளாகக் கணிக்கப்பட்டு வந்தமையால் இவர்களை நீக்குவதும் கடினமாகவிருக்கும்.

இத்தொழிலாளர்கள் தங்கள் தொழில்களை ஆயுட்காலத் தொழில்கள் எனவும் நிலையான ஊதியம்பெறும் தொழில் எனவும் நினைக்கின்றனர். சிலர் பொது உடைமைக்கொள்கையின் தத்துவத்தில் ஒன்று என இதைத் தவறாக நினைக்கின்றனர்.

மாற்றங்கள் ஏற்படவேண்டுமானால் தொழிலாளர்கள் மத்தியில் மனமாற்றங்கள் தேவை. சமூக உறுதிப்பாடு பேணப்படுவதற்கு, தொழிலை இழக்கும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் சமூக அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இந்த மூன்று தடைகளையும் தகர்த்தெறிவது கடினமானதாக இருக்கும் என்பது உண்மை. ஆனால் சூசௌவின் முன்மாதிரியை எடுத்துக்காட்டாக வைத்து இதை முழு நாட்டிலும் செயல்படுத்தவேண்டும். ★

பெர்னார்ட் உஷா பற்றி
ஆஸ்கார் ஒயில்ரு சொன்னது.

"அவருக்கு உலகத்தில்
விரோதிகளே இல்லை ஆனால்
அவருடைய நண்பர்கள் அவரை
விரும்புவதில்லை."

# தனிமையில் லெனின்

(டெயிலி நியூஸ் 20-4-92)

திரு. லெனின் (Lenin) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'பிராவ்டா' (Pravda) செய்திப் பத்திரிகை அவரைத் தனிமைப்படுத்தப் பட்டவராகவும், வெறுப்புற்ற உழைப்பாளியாகவும் ருசிய அரசாங்கத்தால் ஏளனஞ் செய்யப்படுவது போன்று ஒரு கேலிச் சித்திரத்தைத் தனது முதல் பக்கத்தில் சனிக்கிழமையன்று வெளியிட்டுள்ளது.

பொதுவுடைமைக் கொள்கையைக் கைவிட்ட பின் ருசியா எவ்வளவு தூரம் மாற்றமடைந்துள்ளது என்பதை இது காட்டுகின்றது.

பொதுநல நோக்குடைய மக்கள் பொதுத் திட்டங்களில் இலவசமாகச் சேவைபுரியும் நாளாகத் திரு. லெனின் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ''சப்பொட்னிக்'' (Subbotnik) என அழைக்கப்படும் வேலை நாளான சனிக்கிழமையன்று மேற்குறிப்பிட்ட கேலிச்சித்திரம் வெளிவந்துள்ளது.

அடுத்தவார இறுதியில் நடைபெறவிருக்கும் கிறிஸ்தவர்களின் உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர் - Easter) பெருநாளுக்கு மதிப்புக் கொடுக்கத்தக்க வகையில் இந்த சப்பொட்னிக் சனிக்கிழமை முதன் முதலாக ஒதுக்கப்பட்டிருந்தது.

கிறிஸ்தவர்களின் முக்கிய விடுமுறை நாளாக இப்பொழுது கணிக்கப்படும் உயிர்த்த ஞாயிறு பண்டிகைத் திருநாளை ருசிய திருச்சபை 70 ஆண்டுகளில் இரண்டாம் முறையாக ஏப்ரல் மாதம் 26ந் திகதி கொண்டாடவுள்ளது.

ருசிய நாட்டை உருவாக்கிய நாத்திகரான திரு. விளாடிமிர் லெனின் பிறந்த ஏப்ரல் மாதம் 22ந் திகதியைக் கௌரவிக்கும் முகமாகவும் சர்வதேச ஏழைமக்கள் நாளாகவும் கடைப்பிடிக்கப் பட்டுவந்த சப்பொட்னிக் சனிக்கிழமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை பிராவ்டாவின் கேலிச்சித்திரம் எடுத்துக்காட்டுகின்றது.

மொஸ்கோ மக்கள் பணம்பெறாது இலவசமாக ஒருநாளை சகதி நிரம்பிய தெருக்களைச் சுத்திகரிப்பதற்கும், சுவர்களைக் கழுவுவதற்கும் செலவிட்டனர்.

தற்பொழுது தடைசெய்யப்பட்டுள்ள பொது உடைமைக் கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகையான பிராவ்டா அதை ஆரம்பித்தவருக்கு எப்படிமதிப்புக் கொடுக்கப்படாதிருக்கின்றதோ அப்படி மதிப்புக் கொடுக்கப்படாது கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சோவியத்தின் பொதுவுடமைக் கொள்கையை நீண்ட கால மாகப் பரப்பி வந்த பிராவ்டா பத்திரிகை, சென்ற ஆகஸ்ட் மாதம் ருசிய சனாதிபதி திரு. மிகெயில் கொபர்சேவ் அவர்களுக்கெதி ராக நடாத்தப்பட்ட சதிப் புரட்சிக்குப் பின் மீண்டும் 11 நாட் களுக்கு முன்னர் முதன் முதலாகத் திரு. லெனின் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பல எதிர்ப்புக்களைச் சமாளித்து வெளிவரத் தொடங்கியுள்ளது.

நாளாந்தம் மில்லியன் கணக்கில் விற்பனை செய்யப்பட்டு வந்த இந்தப் பத்திரிகை நிதிப் பற்றாக்குறை காரணமாக நான்கு வாரங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட வேண்டியேற்பட்டது.

குழந்தைப் பராயத்திலிருந்தே திரு. லெனின் அவர்களைச் செல்லமாகத் தாத்தா என அழைக்கப் பழக்கப்பட்டிருந்த மில்லி யன் கணக்கான மொஸ்கோ மக்கள், இப்பத்திரிகையின் முதல் பக்கத்தில் மக்களையும், தோழர்களையும் திரு லெனின் அவர் கள் காட்டிய பாதையைப் பின்பற்றி 'சப்பொட்னிக்கை' அனு சரியுங்கள் என்று விடுத்த கோரிக்கையைக் கவனத்தில் எடுக்க வில்லை.

பொதுவுடமைக் கொள்கையில் உறுதியாயுள்ள ஒருசிலர் திரு. லெனின் அவர்களின் எஞ்சியிருந்த சிலைகளையும், பொதுக் கட்டிடங்களிலுள்ள அவருடைய பெயர்ப்பலகைகளையும் மெரு கூட்டினர்.

இவர்களுடைய இந்த நடவடிக்கை ஒரு சில்லறைவிடயம் என்பதைக் கேலிச்சித்திரம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஆபாசம் (செக்ஸ் - Sex), பியர் (Beer), மற்றும் கோலா (Cola) என்ற மேற்கத்தைய தரமற்ற ஆங்கில விளம்பரங்கள் நிரம்பியிருந்த செஞ்சதுக்கத்துக்கூடாக (Red Square) தனக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே இருக்கும் தொடர்பை நினை வூட்டும் முகமாக மரக்குத்தி ஒன்றைச் சுமந்துகொண்டு தலை யைத் தொங்கவிட்டுக்கொண்டும், சோர்வுடனும் தனிமையாக வும் திரு. லெனின் செல்வது போல் இக்கேலிச் சித்திரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அவரின் கல்லறைக்கு மேல் கட்டப்பட்ட மேடையின்மீது திரு. யெல்சின் அவர்களும் அவரது அரசாங்க நிர்வாகிகளும் அமர்ந்து கொண்டு கேலியாக சிரித்துக்கொண்டு சந்தோசமாக இருப்பது போலவும் அதில் காட்டப்பட்டுள்ளது.

சனிக்கிழமை சூரிய வெளிச்சமுள்ள நாளாக இருந்தது. மொஸ்கோ மக்கள் தங்கள் குழந்தைகளுடன் உலாப் போனார்கள். மொஸ்கோ வாசிகள் பொருட்களை வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர். உயிர்த்தஞாயிற்றுக் கிழமைக்காக சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட உணவுகள் தங்களிடம் உள்ளதாகப் பல போசனசாலைகள் விளம்பரப்படுத்தியிருந்தன.

இன்றுவரை தடைசெய்யப்பட்டிருந்த சனிக்கிழமை இரவுக் காட்சிகளை இளம் வயதினர் திரும்பவும் பார்க்கக் கூடியதாக விருக்கின்றது. இரவு முழுவதும் கூத்தும், பாட்டும் என்பது போன்ற விளம்பரங்களுக்கு லெனின் சார்பாக இருந்திருக்க மாட்டார்.

ஒலிம்பிக் ஈருருளி போட்டி மைதானத்தில் 10 டாலருக்கு இரவு 11 மணியில் இருந்து காலை 8 மணிவரை 'ராக்' இசை நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது. ★

குழந்தைகளும்
அரசர்களும்
அற்பத்தனமான
விஷயங்களுக்காக
சண்டை போட்டுக்
கொள்வார்கள்.

— பெஞ்சமின் பிராங்களின்

# நான் எனது சகோதரனுக்கு எதிரானவன்

மார்கரெட் மைக்கல்ஸ் - (ரைம்ஸ் - 23. 3. 92)

சோமாலியாவில் அக்கிரமமும் அதர்மமும் தலைவிரித்தாடுகின்றது. ஆயுதம் ஏந்தியோர் விடுதலை பெறுவதற்காகவே தாங்கள் ஆயுதம் ஏந்தியதாகக் கூறிய போதிலும், பொறுப்பற்ற விதத்திலும், மனிதத்தன்மையற்ற விதத்திலும், ஈவிரக்கமற்ற முறையிலும், அங்கு வாழும் மக்கள் தங்கள் எதிர்கால வாழ்வில் நம்பிக்கையிழக்கச் செய்யும் விதத்திலும் இவர்கள் நடந்து கொள்ளச் சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது. இது இவர்களுக்குக் கொல்வதற்குச் சுதந்திரத்தையும், இறப்பதற்கு உரிமையையும் கொடுத்துள்ளது. சமூகப் பண்பையும், மனிதமேம்பாட்டையும் அழிக்கின்ற அதிகாரப் போட்டி பலமற்றோரின் உடைமைகளை அவர்களிடமிருந்து பிடுங்கி எடுப்பதற்கும் கணவர்களிடமிருந்து மனைவியர்களைப் பறித்தெடுப்பதற்கும், பெற்றார்களிடமிருந்து பிள்ளைகளைப் பிரித்தெடுப்பதற்கும், வாழ்க்கைச் சுமையிலிருந்து எவருக்கும் விடுதலை கொடுப்பதற்கும் சுதந்திரமளிக்கின்றது.

திரு. துவால் நூர் சப்ரி அவர்களின் மொகடிசுவிலுள்ள (Mogadishu) வீட்டை எறிகணை தாக்கியபோது அவர் அந்த வீட்டில் இருந்தார். இத்தாக்குதலில் அவருடைய மூன்று சகோதரர்களும், மூத்த மகனும் கொல்லப்பட்டார்கள். ''அந்த இடம் தீப்பற்றியது, எனது மனைவி ஒருதிசையில் சென்றாள். நான்வேறு ஒரு திசையில் சென்றேன். நாங்கள் ஒருவரையொருவர் சந்திப்பதற்கு ஒரு மாதகாலம் சென்றது'' என இவர் கூறுகின்றார். கென்யா கரையோரத்திலுள்ள ஏதிலிகள் தங்ககம் ஒன்றுக்கு கால்நடையாகவும், படகுமூலமும் இந்தக் குடும்பம் இடம் பெயர்ந்து சென்றது. இந்த வசதிபடைத்த வர்த்தகருக்கு வங்கியில் ஆயிரக்கணக்கான டாலர்களும் மற்றும் பணியாட்களும், கார்களும் இருந்தன. ''எனக்கு இப்போது 56 வயதாகிறது. நான் மீண்டும் தாய்நாட்டுக்குச் சென்று எனது வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிக்க முடியாது. நான் உயிர் வாழும்வரை சோமாலியாவில் எந்த வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இருந்தபோதும் நான் உயிருடன் இருப்பதையிட்டுச் சந்தோசப்படுகின்றேன்.'' என இவர் கூறுகின்றார்.

மொகடிசுவில் தொடர்ந்து வாழும் மக்கள் இறந்து கொண்டே வாழ்கின்றார்கள். இன்னும் அழியாது எஞ்சியிருக்கும் கட்டிடங்களில் இடவசதியின்றி வாழும் பெண்களும், குழந்தை களும் உணவும், நீருமின்றி அல்லல்படுகின்றார்கள். கொள்ளை யடிக்கப்பட்ட ஒரு சாக்குக் கோதுமை மா 30 டாலர்களாகவும், ஐரோப்பிய சமூகத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஆடை நீக்கிய பால்மா 20 டாலர்களாகவும் விற்கப்படுகின்றது. இப் பொருட்களை வாங்குவதற்கு யாரிடமும் பணம் இருக்கவில்லை, குழந்தைகளில் பரட்டை மயிரும், பேத்தைவயிறும் அவர்களின் போசாக்கின்மையை எடுத்துக் காட்டுகின்றது.

தெருக்கள் யாவும் வானூர்தி எதிர்ப்புப் பீரங்கிகளைத் தாங்கிய வாகனங்களில் செல்லும், கலச்னிக்கோவ் துப்பாக்கிகளை ஏந்திய பத்தொன்பது வயதுக்குட்பட்டவர்களை உள்ளடக்கிய இளைஞர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. கற் (Kat) என்ற ழைக்கப்படும் போதை மருந்தை உட்கொண்டபடியால் அவர் களுடைய கண்கள் பிரகாசமாக இருக்கின்றன. அவர்கள் சுடுவ தற்கு எந்த நேரமும் ஆயத்தமாக இருக்கின்றார்கள். நிரந்தர மான மருத்துவ மனைகள் கொள்ளையடிக்கப்பட்டதால் தற்கா லிக மருத்துவ மனைகள் நகரத்தில் தோன்றியிருக்கின்றன. காய முற்றோர் தங்கள் சொந்தப்படுக்கைகளையே கொண்டு வரவேண் டியிருந்தது. அநேகமான நோயாளிகள் தரையிலேயே படுத்துறங்க வேண்டியிருந்தது. நரம்பூடாகச் செலுத்தவேண்டிய ஊசி மருந் தைச் செலுத்தும் சாதனங்கள் இல்லாதபடியால் ஒரு நோயாளி யின் உறவினர் அம்மருந்தை தனது கையிலேயே ஏந்தியிருக்க அம் மருந்தை செலுத்தும் நிலை ஏற்பட்டது. சோமாலியா நாட்டு மருத்துவர்களும் வெளிநாட்டுத் தொண்டர்களும் இரத்தம் தோய்ந்து காணப்பட்ட நோயாளிகளுக்கு மிகவும் சிரத்தையு டன் விரைவாகச் சிகிச்சையளிக்கிறார்கள்.

சோமாலியா பலஇன்னல்களைக் கொண்டநாடாகும். 1991 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கவியே (Hawiye) இனத்தைச் சேர்ந் தவர்கள் மொகடிசைக் கைப்பற்றி அதன் சனாதிபதியான மொகமட் சியாட் பாரி (Mohamad siad Barre) அவர்களை அந்த நாட்டிலிருந்து துரத்தினர். இடைக்கால சனாதிபதியான அலி மாதி மொகமட் (Ali mahdi Mohammed) அவர்களின் இனமான அபகால் (Abagal) இனத்தவரின் கையில் தலைநகரின் வடபகுதி உள்ளது. தென்பகுதியின் 3/4 பங்கு பிரதேசம் ஜென ரல் மொகமட் பாரா எயிடிட் (Mohamad Fora Aidid) அவர் களுடைய இனமான கபார்கெட் (Habar Ged) இனத்தவர்களின்

கையிலுள்ளது. மொகமட் சியாட் பாரி அவர்கள் மீதுள்ள வெறுப்புக் காரணமாக சென்ற ஆண்டு ஆரம்பத்தில் ஒன்றுபட்ட இயக்கங்களின் ஒற்றுமை நீடிக்கவில்லை. மொகடிசின் தெற்கையும், மேற்கையும் இன்னொரு இனம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதேவேளையில் இன்னொரு இனம் அதன் வடபகுதியை சோமாலிலான்ட் (Somaliland) என்ற சுதந்திர நாடாகப் பிரகடனஞ் செய்துள்ளது. இதே நேரத்தில் சனாதிபதி சியாட் பாரி தலைநகரிலிருந்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் நூற்றுக்கணக்கான ஆயுதந்தரித்த வீரர்களுடன் நிலைகொண்டுள்ளார்.

சென்ற செப்டம்பர் மாதத்திலிருந்து மூன்றாவது தடவையாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஐ. நா சபை கொண்டு வந்த போர் நிறுத்தத்தில் திரு. அலிமாதி (Ali Mahdi) அவர்களும் திரு. எயிடிட் (Aidid) அவர்களும் கைச்சாத்திட்டனர். ஆனால் போர் நிறுத்தப்படவில்லை. "நானும் சோமாலியாவும் உலகத்துக்கு எதிரானவர்கள். நானும் எனது இனமும் சோமாலியாவுக்கு எதிரானவர்கள். நானும் எனது குடும்பமும் எனது இனத்துக்கு எதிரானவர்கள். நானும்எனது சகோதரனும் எனது குடும்பத்துக்கு எதிரானவர்கள். நான் எனது சகோதரனுக்கு எதிரானவன்" என சோமாலியாவில் ஒருபழமொழி உண்டு. இந்தப் பழமொழிக்கு ஏற்ப இவர்கள் கடைசிவரை போராடியே தீருவார்கள் எனத் தெரிகிறது.

ஒரே ஆன்மா இரண்டு
உள்ளங்களில்
குடியிருக்குமானால்
அதற்குப் பெயர் நட்பு.

—அரிஷ்டாட்டில்

# சுவாமி விபுலானந்தர் மொழிபெயர்த்த 'யூலியஸ் சீசரில்' ஒரு பகுதி

இங்கிலாந்தில் மகாகவி ஷேக்ஸ்பியர் (1964 – 1916 தோன்றினார். விபுலானந்த அடிகளாரை ஷேக்ஸ்பியர் போல கவர்ந்த கவிஞர் மேற்றிசையில் வெகு சிலரே. அடிகளாரின் எல்லையற்ற பிரியத்துக்கும் பின்பற்றுதலுக்கும் ஷேக்ஸ்பியர் ஆளாகியிருந்தார். ஷேக்ஸ்பியரை அடிகளார் பல இடங்களில் சிறந்த நாடகக்கவி, பெருங்கவி என்ற அடைமொழிகளையிட்டு அழைக்கின்றார். 'யூலியஸ்சீசர்' என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் ஒரு பகுதியை அடிகளார் சுவைகுன்றாமல் மொழி பெயர்த்திருக்கிறார். அவரது மொழி பெயர்ப்பின் சில பகுதிகளை இங்கே பார்க்கலாம். அடிகளார் மொழிபெயர்ப்புத்திறனுக்கு இது ஒரு அவிழ்.

"இந் நாடகத் தலைவராகிய யூலியஸ்சீசர் பராக்கிரம சாலியென்றும் சேனைத் தலைவரென்றும் முன்னர்க் குறிப்பிடப்பட்டார். உரோமாபுரியில் வாழ்ந்த காஷியஸ் எனப் பெயரிய சனத் தலைவனொருவன் கஸ்கா, திரேபோணியஸ், லிகாறியஸ், டேசியஸ், சின்னா, சிம்பர் என்பாரையும் நீதிமானும் யூலியஸ்சீசரது நண்பனுமாகிய மார்க்ஸ் புருட்டஸையுந் தன்வயப்படுத்திப் பங்குனித் திங்களின் நடுநாளில், நண்பகலில், அத்தாணி மண்டபத்தில், யூலியஸ்சீசரது உயிரைக் கவர்வதற்கு ஏற்பாடு செய்தனன். குறித்த தினத்திற்கு முன்னிரவில், விண்வீழ் கொள்ளிகளும், தூமகேதுக்களும் பலவகை உற்பாதங்களுந் தோன்றி யூலியஸ் சீசரின் மனைவி கல்பூர்ணியா தீக்கனாக் கண்டு அச்சமுற்றெழுந்து, புறத்தே நிகழுகின்ற உற்பாதங்களினால் அவலித்துத் துயிலெழுந்திருந்து, காலைப்பொழுது வந்ததும் கணவனது முன்னிலையையடைந்து."

பேரிரவில் நடந்தவெலாம் பிழையினை விளக்கப்
பேதலிக்கும். உளச்சிறியேன் பேசுகின்ற மொழிகள்
ஆருயிர்க்குத் தலைவ! நின தருட்செவியில் வீழ்க,
அகத்திடையின் றிருந்திடுக, அவைபுகுத லொழிக,
எனக் குறையிரந்து வேண்டி நின்றனள், அதனைக் கேட்டசீசர்
புன்னகை புரிந்து,

அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்(து)
ஆடவனுக்(கு) ஒரு மரணம். அவனிமிசைப் பிறந்தோர்.

துஞ்சுவர், என் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதிமூ டரைக்கண்டாற் புன்னகை செய் பவன்யான்
இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தில் அறிவாய்;
இளஞ்சிங்கக் குருளைகள்யாம்; யான்மூத்தோன் எனது
பின்வருவ (து) இன்னல் எனப் பகைமன்னர் அறிவார்,
பேதுறல்பெண் ணணங்கே; யான் போய்வருதல் வேண்டும்,
எனக்கூறினர்.

இத்தருணத்தில் டேசியஸ் என்பவன் வந்து அத்தாணிமண்டபத்திற் குழுமியிருந்த முதியோர் சீசரை அழைத்து வரும்படி சொல்லியதாகத் தெரிவித்தான். சீசர் முதலிலே மறுத்துப் பின்பு இசைந்து உடன் போயினர். வழியில் ஒரு சேவகன் ஒரு நிருபத்தைக் கொண்டுவந்து கொடுத்து, 'இது சீசருடைய சுகத்தைக் கோரியது. இதனையுடனே படித்தருள வேண்டும்' எனச் சீசர் கையிற் கொடுத்தனன். 'நல்லது நண்ப! சனங்களுடைய சுகத்தைக் கோரிய நிருபங்களைப்படித்த பின்பு இதனைப் படிக்கிறேன்' என்று கூறிவிட்டுச் சீசர் அத்தாணி மண்டபத்தை நோக்கி நடந்தனர்; ஆங்குச் சிம்பர் என்பவன் முற்பட்டு வந்து முழந்தாட்படியிட்டு நின்று, 'மஹௌதாரிய மஹாப் பிரபுவே! ஏழையேனது விண்ணப்பத்திற் கிரங்கி ஏழையேனது சகோதரனை மன்னித்தருள வேண்டும்.' என வேண்டி நின்றனன்.

சீசர் அவனை நோக்கி,
தாழ்ந்து மென்மொழி யுரைத்திடேல்,
தரணியிற் பணிந்து
வீழ்ந்து நைபவர் பொய்யுரைக்
கிரங்கிய வீணர்
சூழ்ந்து செய்தன துடைத்துப்பின்
சோர்வினை யடைவார்.
ஆழ்ந்து செய்வன செய்யும்யான்
அவர்நெறி அணையேன்;

அண்ணல் நீர்மையேன் பிழைசெய்யேன்;
அணுவள வேனும்
நண்ணும் நீதியிற் பிரிந்திடேன்
நாயெனக் கதறிக்
கண்ணில் நீர்மிக நிலத்தினிற்
புரள்வதாற் கருதும்
எண்ணம் முற்றுறும் என்ன நீ
எண்ணுவ திழிவே

எனக் கூறச் சார்ந்து நின்ற மார்க்கஸ் புருட்டஸ் சீசரை நோக்கி, 'ஐயா! நான் இச்சகம் பேசுவேனல்லேன், தேவரீரது திருக்கரத்தை முத்தமிட்டேன். சிம்பரின் விண்ணப்பத்துக்கிரங்கி அவரது சகோதரனை விடுதலை செய்தல் வேண்டும்' என்றனன். சமீபத்தில் நின்ற காஷியஸ், சீசரை நோக்கி, 'மகிமை பொருந்திய சீசரே! மன்னிக்கவேண்டும்! 'உம்மிருதாளிணையினையும் பற்றினேன், சிம்பரின் சகோதரனை மன்னிக்கவேண்டும்.' என்றனன். சீசர் தம்மைச் சூழ்ந்து நின்று விண்ணப்பித்தோரை நோக்கி,

இரங்குதிர், என்ன இரக்கும் நீர்மையர்
தமைப்பிறர் இரக்கிற் றயைகாட் டுநரே;
நும்போல் வேனெனின், நும்மொழிக்(கு) இசைவேன்;
வானகம் மிளிரும் மீனினம் அனைத்தும்
தற்சூள்ந் தசையத் தானசை வின்றி
நிலைபெறு துருவன் நிலைமைகண் டிலிரோ?
வான்மீன் அனையர் மாநில மாந்தர்;
துருவன் அனையன் ஒருவனீங் குளனால்;
அவன்தான் யான், என அறிகுவிர், புகன்ற
மொழியிற் பிரியேன்; பழியொடு படரேன்;
மலைவீழ் வெய்தினும், மனம்வீழ் விலனே,

எனக் கூறினார். இதனைக்கேட்ட புருட்டஸ் ஆதியோர் சீசரது பெருமித வுரையைத் தற்பெருமையுரையென வெண்ணி, உறைவாளை உருவி அனைவரும் ஏகோபித்துச் சீசரை வெட்டினார்கள். 'நீயுமா புருட்டஸ்!' என்னும் உரையோடு சீசர் வீழ்ந்து மரணித்தனர்.

அனுபவம் நமது அறிவை
வளர்ப்பது உண்மைதான்.
ஆனால் நாம் தவறு
செய்யும்போது தடுத்து
நிறுத்துவதில்லை.

—ஜோஸ் பில்லிங்ஸ்

# 'நாம் உலகில் கூடிய மர்மங்களையே காண்கிறோம், குறைந்ததல்ல'

புறூஸ்வன்வாஸ்ற் வாசிங்ரன்-ரைம்ஸ்
(20.04.1992)

(சி.ஐ ஏ யின் இயக்குநர் ரோபட் கேட்ஸ் இன்னும் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் சதாம் குசேனின் ஸ்கட்ஸ் ஏவுகணைகள் கே.ஜீ.பி யின் புதிய இலக்குகள், ஜே எவ்.கே யின் படுகொலைபற்றிய கோவைகளின் மறு பகுப்பாய்வுகள் போன்றவை பற்றிய செவ்வி)

கேள்வி;- நீங்கள் சி ஐ ஏ. நடைமுறைகளில் பல மாற்றங்களை செய்துள்ளீர்கள். உதாரணமாக இரகசிய தகவல் ஆய்வுகளில் எதிர்க் கருத்துக்களை உள்ளடக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள் ஏன்?

பதில்:- கடந்த 20 அல்லது 40 ஆண்டுகளாக இடம்பெற்ற ஒவ்வொரு பாரிய புலனாய்வு தவறுகள். ஆய்வாளர்கள் மரபுவழி முறையான கருத்துக்களை ஏற்றுக்கொண்டமையால் தான் இடம் பெற்றன. சம்பந்தப்பட்ட வெவ்வேறு பகுதியினரிடையே எதிர்க் கருத்துக்கள் இல்லமையால் அல்ல: இந்தப் பிரச்சனை ஏற்படுவதற்கு காரணம் எல்லோரும் உண்மையிலேயே பிழையான கருத்தை ஏற்றுக்கொண்டமையேயாகும். ஈரான் - ஈராக் போரின் பின்பு, சதாம் குசேயின், அடுத்த பல ஆண்டுகளை ஈராக்கை மீளக்கட்டுவதில் செலவிடுவாரே ஒழிய புதிய படையெடுப்புக்களையோ அல்லது புதிய பிரதேசங்களையோ கைப்பற்றுவதில் ஈடுபடார் என்று (1990 குவைத் ஆக்கிரமிப்புக்கு முன்னர்) முடிவு செய்தது ஓர் உதாரணம்.

உலகில் குறைந்ததல்ல பல மர்மங்கள் இருப்பதையே நாம் காண்கிறோம். புலனாய்வு மதிப்பீடுகளை செய்யும் போது தாங்கள் ''பிழைபோனால் என்ன என்று, எமது தீர்மானங்களில் எதிரான கருத்துக்களை சேர்த்துக்கொண்டு எமது அணுகுமுறையை மாற்றியமைக்கவேண்டியது அவசியமாகத் தோன்றுகிறது. எமது திறமையான தீர்வுகளை கொடுப்பதோடு நில்லாமல், கொள்கை வகுப்பாளர்களை பிரச்சினைகளையிட்டு நன்கு சிந்திக்கச் செய்யவும் உதவவேண்டும். உதாரணமாக ரஷ்யாவில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள் என்ன முறையில் செய்யப்படும் என்று அறிந்துகொள்வதற்கு உண்மையில் ஒரு வழியும் இல்லை.

கேள்வி;- ஜெனரல் நோர்மன் சுவாஸ்கோப் அமெரிக்க காங் கிரசுக்கு வளைகுடாப் போர்க்காலத்தில் கிடைத்த புலனாய்வு தகவல்களின் தரத்திற்கு எதிராக கடுமையாக முறைப்பாடு செய்துள்ளார்?

பதில்:- பாலைவனப் புயல் காலத்தில் மிக முக்கிய புலனாய்வு வெற்றிகள் சில ஏற்பட்டன. புலனாய்வுதான், திறமையான ஆயுதங்களை இன்னும் திறமையாக்கின. புலனாய்வுதான் தடைகளை கண்காணிப்பதற்கு உதவின. புலனாய்வுதான் ஈராக் கிய 42 படைப்பிரிவுகளும் எங்கு நிற்கின்றன என்பதை தளபதிக ளுக்கு விளக்கின. அத்துடன் எவ்வித தளபாடங்கள் இருந்தன என்பதையும் தொழில்நுட்ப ஆச்சரியங்கள் எதுவும் இல்லையென் பதையும் அறிந்து கொள்வதற்கு புலனாய்வு உதவிற்று.

கேள்வி;- ஈராக்கின் அணுவாயுத, இரசாயன பயமுறுத்தல்களின் பரிமாணங்களை இனங்கண்டு கொள்வதற்கு புலனாய்வுதவறி விட்டதே?

பதில்:- அணுவாயுதங்கள் நுண்மங்கள் ஆகியவற்றின் நிகழ்வு களை இனங்கண்டு கொள்வதற்கு எமது அமைப்பு திறமையாக இயங்கிற்று. அவற்றின் தகவல் தெரியாதிருந்தது, அவற்றின் அளவிலும் வேகத்திலும் தான். உதாரணமாக அணுவாயுத சம்பந்தமாக.

கேள்வி:- பெருமளவிலா?

பதில்:- குறிப்பிடக்கூடிய அளவு என்பதை ஒத்துக்கொள்கிறோம் சதாம்குசேன் அணுவாயுத தொழிற்கூடங்களை வைத் திருந்தார், என்றும் மையத்திலிருந்து புறநோக்கிச் செல்லும் விசைமத்தின் யூறேனிய செயற்பாட்டுத்திறன் பற்றிய தன்மையும் எமக்குத் தெரியும். ஆனால் அவர்களின் கொலுறன் (Colutron) வளர்ச்சியை நாம் கண்டுபிடிக்கவில்லை.

கேள்வி:- ஈராக்கிய பயமுறுத்தல் எவ்வாறு இருக்கின்றது?

பதில்:- அவர் சில நூறு ஸ்கட்(Scud) ஏவுகணைகளை மறைத்து வைத்திருக்கிறார் என்று எண்ணுகிறோம் அவரது அணுவாயுத உற்பத்தி முயற்சிகள் கண்டுபிடிக்கப்பட்டு வெளிக்கொண ரப்பட்டது. அதனால் அவற்றை குறிப்பிடப்பட்ட அளவுக்கு மீள இயங்கவைப்பதற்கு பல ஆண்டுகள் செல்லும் என்று மதிப்பிடுகி றோம். அவருடைய நுண்ம ஆயுதங்கள் சில வாரங்களில் திரும்ப இயக்கப்படலாம்.

கேள்வி;- சதாம் தூக்கியெறியப்பட்டால் என்ன நடக்கும்?

பதில்:- அதன்பின் ஏற்படும் ஆட்சியாளரின் தன்மையை பொறுத்தது அது.அவரின் வாரிசு நிச்சயமாக அவ்வளவு பலம் வாய்ந்தவராக இருக்க முடியாது. பயமுறுத்தல், அச்சம் ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் ஆட்சியைக் கட்டி எழுப்புவதற்கு 20 ஆண்டுக் கால நேரமும் இராது. நிச்சயமாக சதாம் கூட போர் தொடங்கிய காலத்தில் இருந்தளவு இப்போது பலம்வாய்ந்தவராக இல்லை. குறையாத ஆனால் வளர்ந்துவரும் பல சிக்கல்கள் அவருக்கு உண்டு.

கேள்வி:- ஈரான் நிலை என்ன?

பதில்:- பாரசீக குடாவில் தனது முன்னையதன்னிகரற்ற நிலையை திரும்பவும் பெறுவதற்கு உறுதியாக இருக்கின்றது. மிக் 29 (*Mig29*) சூ 24 (*Su24*) போரிடும் குண்டு வீச்சு வானூர்திகளிலிருந்து வருடத்திற்கு கிலோ வகுப்பு (*Kilo-Class*) தாக்கும் நீர்மூழ்கிகள் இரண்டுவரை ஆகிய -இவையெல்லாம் ருசியாவிலிருந்து பெற்றவை-மிகுந்த தொழில் நுட்பம் வாய்ந்த ஆயுதங்களைப்பெறுவதற்கு ஆண்டிற்கு 2 பில்லியன் அமெரிக்க டாலர் செலவிடுகிறார்கள். அவர்களிடம் ஓர் கரடுமுரடான இரசாயன ஆயுத திட்டம் இருக்கின்றது. அத்துடன் நுண்மபோராயுத திட்டமும் அவர்களிடம் இருக்குமென சந்தேகிக்கிறோம். ஈரானியர் தொடர்ந்து பயங்கரவாதத்திலும் ஈடுபடுகிறார்கள் கடந்த சில வாரங்களில் கிஸ்புல்லாவுக்கு பெருந்தொகையான ஆயுதங்களை அனுப்பியுள்ளனர் என்றும் எமக்கு தெரியும்.

கேள்வி:- நீங்கள் வடகொரியாவின் பயமுறுத்தல் பற்றி அடிக்கடி கூறுகிறீர்கள்?

பதில்;- இதில் மையப்பொருள் அணுவாயுதம் பற்றியது. அவர்கள் எவ்வளவு புளுட்டோனியத்தை செலவான அணு உலை எரிபொருளிலிருந்து பிரித்தெடுக்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியாது, ஆனால் அவர்களுக்குத் தேவையான புளுட்டோனியம் கிடைத்துவிட்டால் சில மாதங்களிலிருந்து இரண்டு ஆண்டு காலகட்டத்துள் அவர்கள் ஒரு ஆயுதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் அணு ஆயுதத்தகைமையை அடைவதற்கு அண்மித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி:- நீங்கள் சி. ஐ. ஏ. யின் துணை இயக்குநராக இருந்த போது புலனாய்வு மதிப்பீடுகள் அரசியல் மயப்படுத்தப்பட்ட

தென்ற குற்றச்சாட்டின் மீது நடந்த அமெரிக்க செனேட் ருசுப் படுத்தும் விசாரணையின்போது உங்களுக்கு பின்னடைவு ஏற் பட்டதல்லவா?

பதில்:- ஒரு உற்பத்தி அல்லது ஆய்வு தனிநபரின் பார்வையி லிருந்து அவர் கொண்ட கருத்துக்களை நிறுவனத்தின் (சி.ஐ.ஏ.) பரிமாணங்களில் அக்கருத்துக்கள் மாற்றம் அடைகின்றன. அப் பொழுது முகாமையாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இடை யேயான தொடர்புகளில் பிரச்சினைகள் உருவாகின்றன. மக் களின் நோக்கங்களில் கேள்விகளை எழுப்பாது அரசியல் உணர்ச்சி பூர்வமான விடயங்களில் உண்மையான விட்டுக்கொடுப்பு மனப் பான்மையில் அறிவுத்துறை சார்ந்த அணுகுமுறையை ஏற்படுத்த நான் விரும்புகிறேன்.

கேள்வி:- மனித புலனாய்வில் கூடிய அழுத்தத்தை பிரதிபலிக் கும் செயற்பாட்டை நீங்கள் விரும்புவதாகத் தெரிகிறது?

பதில்:- எமது பல புதிய தேவைகளை மனித புலனாய்வில் தான் திருப்திப்படுத்த முடியும். ஈராக்கின் அணுவாயுத வளர்ச்சி பற்றிய மதிப்பீட்டை தெரிந்து கொள்வதில் தொழில்நுட்ப தக வல்களில் தான் பிரதானமாக நம்பியிருந்தோம். அதனால்தான் அவர்களை குறைத்து கணிப்பிட ஏற்பட்டது. இது பல துறை களுக்கும் பொருந்தும். உதாரணமாக, போதைப்பொருள், பயங்கரவாதம் ஆகியவை போன்றன. ஆனால் முகவர்களை தெரிந்தெடுப்பது, அவர்களுடன் தொடர்பை தொடர்ந்து வைத்திருப்பது, அவர்கள் தரும் தகவல்கள் சரியானவையா என்று பார்ப்பது போன்றவற்றின் காரணமாக மனித புலனாய்வு மிகவும் சிக்கலானது.

கேள்வி:- முக்கிய மேலாளர்களுக்கு புலனாய்வு அறிக்கைகளை அனுப்புவதற்கு ஒருவகை சி. ஐ. ஏ. தொலைத் தொடர்பு வலைப் பின்னலை ஏற்படுத்துவதற்கு நீங்கள் திட்டமிட்டிருக் கிறீர்கள் ஏன்?

பதில்.- நாம் பல மடங்கு பில்லியன் டாலர்களை, உடனுக் குடனான முறையில் தகவல்களை தரும் தொழில் நுட்ப சேகரிப்பு, அமைப்புக்களை ஏற்படுத்துவதில் செலவிட்டுள்ளோம். அவ்விதம் செய்துவிட்டு, வாஷிங்டனில் 19ஆம் நூற்றாண்டு அணுகுமுறையை, கைக்கொண்டு, அதை கொள்கை வகுப்பாளர் களுக்கு அனுப்புமுன் தாமதித்து வைக்கிறோம். CNN னுடன் எங்களால் போட்டியிட முடியாது. அவ்வித எண்ணமும் இல்லை.

ஆனால் கொள்கை வகுப்பாளர்களுக்கு நாள் முழுவதும் உயர் தரமான புலனாய்வு தகவல்களை உடனுக்குடன் தாளாந்தம் கொடுபட ஏற்ற விதமான ஏற்பாட்டை நான் விரும்புகிறேன்.

கேள்வி:- சி. ஐ. ஏ. யின் ஓர் புதிய திறந்த கொள்கையைப் பற்றி குறிப்பிடுகிறீர்கள் பழைய கோவைகளை மறுபகுப்பாய்வு செய்ய உத்தேசமா?

பதில்:- வரலாற்று ரீதியாக மறு பகுப்பாய்வு செய்வதற்கு ஓர் புதிய அமைப்பை உருவாக்கியுள்ளேன். அன்றுமுதல் "நாம் எவ்விதம் ஒவ்வொரு தனிவரியையும் பாதுகாக்கலாம்" எனும் கருத்துள்ளோரை விட, வரலாற்று ரீதியான நோக்குகளை கொண்டோரை உட்கொண்டுவர எண்ணியுள்ளேன்.

கேள்வி:- எவ்விதமான?

பதில்:- பத்து ஆண்டுக்கு மேற்பட்ட சோவியத் அமைப்பின் தேசிய புலனாய்வு தகவல்களில் எம்மால் முடிந்தவரை மறு பகுப்பாய்வு செய்வதென தீர்மானித்துள்ளேன். ஜே. எவ். கே. படுகொலை பத்திரங்களுக்கும், "பன்றிக்குடா" (Bay of Pigs) கியூபாவின் ஏவுகணை நெருக்கடி, ஈரானில் 1950 களின் முற்பகுதியில் நடந்ததைப் போன்றவற்றிற்கு சிறப்புக் கவனம் செலுத்துவோம்.

கேள்வி:- எமது வர்த்தக ஸ்தாபனங்களின் மீது சர்வதேச வர்த்தக நிறுவனங்கள் தமது புலனாய்வு முகவர்கள் மூலம் வேவு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதால் சி. ஐ. ஏ. அவர்களைப் பற்றி வேவு பார்க்க வேண்டும் என்ற அழுத்தங்கள் அதிகரிக்கின்றது. அப்படியான சாத்தியக் கூறுகள் உண்டா?

பதில்:- நாம் வர்த்தக ரீதியான வேவுகளில் ஈடுபட்டோம். நேர்மையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் அன்னிய அரசாங்கங்களை இனம்கண்டு அமெரிக்காவுடனான இருதரப்பு அல்லது பலதரப்பு உடன்படிக்கைகளை மீறுவோர்களை இனங்கண்டு' தமது நாட்டு வர்த்தக நிறுவனங்களுடன் சேர்ந்து கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராக நடப்பவர்களையும் இனங்கண்டு பொருளாதார புலனாய்வில் நாம் உதவி செய்யலாம். எமது தேசிய பாதுகாப்பை பாதிக்கச் செய்யக்கூடிய, உலகம் பூராவும் உள்ள உயர்தொழில் நுட்ப அபிவிருத்திகளை நாம் அவதானிக்கிறோம். கணணிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள், புதிய நடைமுறைகள் போன்றவையே அவை. அமெரிக்க வர்த்தகத்தை பாதிக்கும் அன்னிய அரசபுலன் ஆய்வு நிறுவனங்கள் மீது எமது எதிர் புலனாய்வு நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது.

கேள்வி:- தொழில்நுட்ப ரகசியங்கள் பற்றி தகவல் எடுப்பது கே.ஜீ.பி செய்வதுபோன்ற வேலை அல்லவா?

பதில் :- கே.ஜீ.பி.இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் மேற்கத்திய தொழில்நுட்பத்தின் மீது ருசிய புலனாய்வு சேவையின் ஈடுபாடு தொடர்ந்து இருக்கும். நாங்கள் அவர்களின் நடவடிக்கைகள், ஆட்சேர்ப்பு முயற்சிகள் ஆகியவற்றை காணுகிறோம். அவர்களின் வளங்கள் குறைந்துள்ளபோதும் முன்பைவிட அதிக கூர்மையாக செயலாற்றுகிறார்கள். உண்மையில் (GRU) ஜீ ஆர்.யு என்ற இராணுவ புலனாய்வு தொழில்நுட்ப இரகசியங்களை அறிவதில் மிக தீவிரமாக இயங்குகிறது.

கேள்வி:- முன்னைய குடியரசுகளில் எவையாவது வேவுபார்ப்பதில் இறங்கியுள்ளனவா?

பதில்:- என் கவனத்திற்கு அப்படியொன்றும் வரவில்லை.

கேள்வி:- சர்வதேச பயமுறுத்தல் குறைந்திருப்பதால் புலனாய்வு செலவுகளும் குறைக்கப்படலாம் என்ற கருத்தை புலனாய்வுத்துறை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?

பதில் :- நாம் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளோம். பில்லியன் கணக்கான டாலர்களை இழந்துள்ளோம். இதனால் பெருமளவு தனிப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. உண்மை நிலையில், 1993 ஒதுக்கீடுகளில், 2.5% துண்டு விழுந்துள்ளது. அது ஜனாதிபதியின் முடிவு, என்னுடையதல்ல. ஜனாதிபதியும் பாதுகாப்பு செயலரும் மேலும் 50 பில்லியன் டாலர் குறைப்பை பிரேரித்தபோது புலனாய்வு செலவினத்திலிருந்து ஒருவித குறைப்பும் செய்யப்படவில்லை. அது அவர்களின் முன்னுரிமை தன்மையை விளக்குகிறது. புலனாய்வுக்குப் பதிலாக பாதுகாப்பில் குறைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கேள்வி:- அமெரிக்கா பாதுகாப்புக்கு இருந்த பயமுறுத்தல் மிகவாக குறைந்துள்ளதென்பதை, தீக்கோழி தலையை புதைக்கும் பாணியில், ஏற்றுக்கொள்ள மறுப்பதாக இல்லையா இது?

பதில் :- எனது செயற்பாடு குறிப்பிட்ட ஒதுக்கீடுகள் பற்றி வாதிடுவது அல்ல. நீங்கள் இவ்வாறான விடயங்கள் பற்றி தகவல் சேகரித்து ஆய்வு செய்யும்படி கேட்டீர்கள். அதை பொறுப்புடன் செய்வதற்கு இவ்வளவு பணம் தேவை என்று அவர்களுக்கு கூறுவதே எனது கடமை, காங்கிரசும் நிர்வாகமும் புலனாய்விற்கு குறைவாக செலவு செய்ய வேண்டுமென்று சொன்னால் அப்போது அவர்களுக்கு எதை எதை செய்ய இயலாது இருக்கும் என்று சொல்ல இருக்கிறேன். ★

# வளைகுடா போரைவிட எதிர்காலப் போர்கள் அதி தொழில்நுட்பம் வாய்ந்தவை

ஐலண்ட் 19-04-1992.

வளைகுடாப்போர் அதி தொழில்நுட்பம் வாய்ந்ததென்று நீங்கள் கருதினால் 21ஆம் நூற்றாண்டின் போர் முறைகள் எவ்விதமாய் இருக்கும் என்பதைப் பார்ப்போம். போர்முனைகளில் பெருங் குவியல்களான இயந்திர மனிதர்கள் கவசங்களை துளைக்கும் ரவைகளால் சுடுவதையும், மலைகள் மேலாகவும், முகில்களுக்கு ஊடாகவும் பார்க்கக்கூடிய கம்பீரமான தலைக் கவசத்துடன் போர் வீரர்கள் நிற்பதையும் காணலாம்.

நுண்மங்களால் செய்யப்பட்ட தூசிப்படலத்தைப் Biologically derived aerosels) பாவித்து தாங்கிகளின் இயந்திரங் களை பழுதடைய செய்யலாம். நுண்மங்களின் உற்பத்தியில் ஏற்படும் முன்னேற்றத்தை கொண்டு களத்திலிருக்கும் அணிகள், வாயு, தண்ணீர் அழுகிய தாவரங்கள் சூரிய ஒளி போன்றவற்றை மூலப் பொருள்களாக கொண்டு தங்களுக்குத் தேவையான உணவு, எரிபொருள், வெடிமருந்துகள் போன்றவற்றை தாங்களே உருவாக்கிக் கொள்ளலாம்.

அண்மையில் ஐக்கிய அமெரிக்காவில் வெளியிடப்பட்ட ஆய்வின்படி, 'பாலைவனப்புயல்' நடவடிக்கையின்போது அமெரிக்காவின் ஆயுதங்கள் ஈராக்கினதைவிட எவ்வளவு தூரம் உயர்வானவையாக இருந்தது போல், இன்றிலிருந்து முப்பது ஆண்டுகளின் பின் உபயோகிக்கப்படும் போர் ஆயுதங்கள் அந்த அளவுக்கு இன்றைய உயர் ஆயுதங்களிலும் பார்க்க மிகச்சிறந்தவையாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

301 பக்கம் கொண்ட இவ்வாய்வு ''கணணிகளாலும் மனிதனில்லாமலே இயங்குபவைகளாலும் நடாத்தப்படும் போர் அதிகமானவையாகவும், பேரச்சம் தருபவையாகவும் இருக்கும்'' என்று கூறுகிறது.

இம்முன்னேற்றங்களால் இறுதியில் போர்கள் அதிகரிக்கும் என்றும், இழப்புகள் குறைவானதாக இருக்கும் என்றும் இதன் ஆசிரியர்கள் எச்சரித்துள்ளார்கள்.

''வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும் மக்களுக்கு ஏற்படும் இறப்புக்கள் குறைந்த அளவில் இருக்கக் கூடுமேயானால் அந்நாட்டு மக்கள் போர்களை ஏற்றுக் கொள்வார்கள்'' என்றும் கூறுகிறார்கள்.

அரசாங்கத்திற்காக ஐ. அமெரிக்கா காங்கிரஸால் அமைக்கப்பட்ட தேசிய அறிவியல் கழகத்தின் ஆராய்ச்சி சங்கத்தால் அழைக்கப்பட்ட 100 வல்லுனர்களால் இவ்வாய்வு அமெரிக்க இராணுவத்திற்காக செய்யப்பட்டது.

இவ்வாய்வின்படி 2020 ஆண்டளவில் தரைப் போரின் முக்கியத்துவம் இரண்டு துறைகளில் தங்கியுள்ளது.

(1) தகவல் சேகரிப்பதிலும் அதை பாதுகாப்பதிலும் மேலாதிக்கம் அடைதல் இந்த விடயத்தில் கணணி தீர்க்கமான பங்கு ஏற்கும். போர்முனையில் கோடிக்கணக்கான கணணிகள் உபயோகப்படுத்தப்படும். அவைகள் காலாட்படை கொண்டு செல்லக்கூடிய முறையில் சட்டைப்பைகளில் அமைந்திருப்பவையாகவும் நுண் செயற்பாட்டுடன் ஆயுதங்களில் பொருத்தப்பட்டவையாகவும் Micro Processors Carried in Weapons to Computer Based ''gene Libraries) இருக்கும்.

(2) ஆபத்துச் செயற்பாடாக வேவுபார்த்தல் எதிர்ப்படைகளை இனங்கண்டு கொள்ளுதல், நிலக்கண்ணிகளை அகற்றுதல், காயப்பட்டோரை அகற்றுதல், முன்னணியில் நின்று போரிடுதல் போன்றவற்றிற்கு இயந்திர மனிதர்களை உபயோகிப்பது.

இவ்வாய்வு ''எதிர்கால போர்களில் கணணிகள் முக்கிய பங்கு வகிக்கும் காரணத்தால் அவைகள் கூடிய தாக்குதல் இலக்குகளாக மாறும். ''என்று கூறுகிறது. எதிரியில் கணணிகளை வலுவிழக்கச் செய்வதற்கும் தடை செய்வதற்கும் வழிவகைகளை கண்டுபிடிப்பதுபோல் மின்னியல் வைரஸ் நோய்களிலிருந்தும் சதிச் செயல்களிலிருந்தும் தனது கணணி வலைப்பின்னலை பாதுகாப்பதும் அமெரிக்க இராணுவத்தின் நோக்காயிருக்க வேண்டும்.

இவ்வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட மாற்றங்கள் எதிர்கால போர் வீரர்களுக்கு பாரிய விளைவுகளை உருவாக்கும் ஒன்று அவனோ அவளோ நோய்களிலிருந்து கூடிய பாதுகாப்புப் பெறலாம். அல்லது நுண்ணியல் களஞ்சியத்திலிருந்து

கிடைக்கப்பெறும் தகவல்களைக் கொண்டு போராளியின் இரத்தத்தின் வெள்ளை அணுக்களின் சேர்க்கையில் போருக்கு முன் மாற்றத்தை உண்டாக்கி நோய்களிலிருந்தும் இரசாயன தாக்கத்திலிருந்தும் தேகத்தின் பாதுகாப்பை அதிகரிக்கலாம்.

போராளிகளின் தனிப்பட்ட உடைகளும் அங்கிகளும் கூட மிகவும் வித்தியாசப்படும்.

ஆய்வின்படி பத்தாண்டுகளுக்குள் கணணி ஞாபக தொழில் நுட்பவியல், ஒரு சிறிய பொட்டலத்துள் பெருந்தொகையான தகவல்களை ஓர் போராளி கொண்டு செல்லலாம். சட்டைப் பையில் அமைந்த 500 மேகாபைத் (Megabyte) எண்ணிக்கை ஞாபக கணணி போராளிக்கு களநிலை அமைப்பு விபரங்கள் எதிரியின் நிலைகள் வைத்திய நடமுறைகள், தளபாடங்களை பேணுவதற்கும் திருத்துவதற்குமான செயல்முறைக் கட்டளைகள் போன்றவற்றை கொண்டு செல்வதற்கு உதவும்.

ஒரு போராளி தேகத்திற்கு ஏற்ற கவசங்களை அணிந்து அவைகளை 30மணித்தியாலங்களுக்கு உசார்நிலையில் வைத்திருக்கக் கூடிய புதிய மருந்துகளையும் எடுத்துச் செல்லலாம். இராசாயன, தீங்கிழைக்கும் நுண்மங்களின் தாக்கங்களுக்கு (Biological Agents) எதிரான பாதுகாப்பு, நடமுறை இராணுவ சீருடையின் உள்ளேயே வைத்து அமைக்கலாம். அவைகள் வெட்ப தட்ப சொகுசுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

செயற்கை புலனாய்வினதும் இயந்திர மனிதவியல் முன்னேற்றங்களும் இயந்திரவியல் மனிதனை அபிவிருத்தி செய்வதற்கு வசதியளிக்கும். அவைகள் நடமாட்டமுள்ள போராளியைப் போல் நடமாடவும் போராளி இயக்குநரின் குரல் அல்லது கண் அசைவுகள் மூலம் கட்டுப்படுத்தக் கூடியவையாக இருக்கும்.

இயந்திர மனிதர்கள் சில உண்மையான போர்களிலும் ஈடுபடலாம். இராணுவ இயந்திர மனிதர்கள், இயந்திர போராளிகள் போலல்லாது 'கம்பிரமான கணணிகள்' போன்ற அமைப்புடையவையாய் இருக்கும். 2020 ஆண்டில் இயந்திர மனிதர்கள் நடக்கவும், ஓடவும் கூடியவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் 'கம்பீரமான ஆயுதங்கள்' கூட இருக்கலாம். எனினும் மனித போராளிபோல் வல்லமை வாய்ந்தவராக இருக்கமுடியாது.

இயந்திர மனிதர்களின் முக்கியத்துவம் அவர்களை மிகப் பெருந்தொகையில் களத்தில் பரவவிடவும் ஆபத்தான பகுதிகளில் தாக்குதலுக்கு ஏற்ற முறையில் மூடுக்கிவிடவும் இயலுமென்பதிலே தங்கியுள்ளது.

★

# சுவாமி விபுலாநந்தரின் மொழி பெயர்ப்பு பற்றிய கருத்துக்கள்

## மொழிபெயர்ப்பு முறை

ஒரு மொழியிலுள்ள நூலினை மற்றொரு மொழியிற் பெயர்த்து எழுதுமிடத்து முதநூற் பொருள், நடை இயைபு முதலியவற்றை மாறுபடவிடாது மொழிபெயர்ப்பு நூலினுள்ளுங் காட்டுதல் வேண்டும். முதநூல் செய்யுள் நடையினதாயின், மொழிபெயர்ப்பு நூலுஞ் செய்யுள் நடையினதாகித் தக்க யாப்பினாற் பொருத்தமுற்று நிற்க வேண்டும் விஞ்ஞானநூல் உண்மை நிச்சயிக்கிற அளவை நூல் ஆதலால் மொழிபெயர்ப்பு நூலுந் திரிபில்லாத பொருளினதாக முதநூற் கருத்தோடு மாறுகொள்ளாததாக விருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்பு முறையை ஆராய்வதற்கு முன் தமிழ் மொழிச் சொற்களின் சிறப்பியல்பையும், ஆற்றலினையும் ஆராய்வோம்.

தனித்தமிழ் மொழிகள் ஓரெழுத்தாலும் ஈரெழுத்தாலும் ஆகிய மணிபோன்ற சிறியமொழிகளாம் திருமுருகாற்றுப்படை யகவலையுற்று நோக்குக பின்னுந்தமிழ் மொழியில் ஒற்றுமையும் வேற்றுமையும் பொருந்திய இணைச்சொற்கள் ஒத்த எதுகையின் அறம், மறம், அன்பு வன்பு, இன்பம், துன்பம் என்றாற்போல மேலுந் தமிழ்மொழியில் ஓரே தொடரான சொற்கள் ஓரேவிகுதியுடையன செம்மை கருமை என்னும் பண்புப்பெயர்களை நோக்குக. பிற பாஷைகளிலிருந்து தமிழ் மொழிக்குச் சேர்க்கப்பட்ட சொற்கள் இயற்றமிழ்ச் சொற்களே போன்று முதனிலை இடைநிலை, ஈற்று நிலை முதலிய யாவும் தமிழிலக்கணவரம்பு கடவாது பொருந்த நிற்பன. புதியமொழிகளை ஆக்கிக்கொள்ளுமிடத்தும் திசைச் சொற்களை எடுத்தாளுமிடத்தும் மேற்காட்டிய குறிப்புக்களைக் கைக்கொண்டு சுருக்கம், விளக்கம், தெளிவு, தமிழுருவம் இவை பொருந்த மொழிகளை ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும். தமிழ் மொழியில் ஆட்சியிலுள்ள சொற்களைப் புறக்கணித்தல் கூடாது. ஆதலால் முதற்கண் தமிழ்நூல்களை யாராய்ந்து அவற்றுட் பொதிந்து கிடக்கிற விஞ்ஞான நூன்மொழிகளை யெல்லாம் தெரிந்தெடுத்து அவற்றின் பொருளை நிச்சயம் பண்ணிக்கொள்ளுதல் வேண்டும்.

இங்ஙனம் செய்யில், தமிழ்மொழியில் வைத்திய நூல்கள் தத்துவநூல்கள், முதலியவற்றுள் மறைந்து கிடக்கிற ஆயிரக் கணக்கான சொற்கள் வழக்குக்கு வருவனவாம். முன்னாளில் நூலியற்றிய ஆசிரியர் சிலர் மண், நீர், தீ வளி, வான் என்ற தமிழ் வழக்கிருக்கப் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் என்னுந்தமிழ்மொழிக ளைப் புறக்கணித்து ஸ்ப்த, ஸ்பரிச, ரூப ரச, கந்தம் என்றும்; நிறுத்தல், நிறைத்தல் விடுத்தல் என்றும் மொழிகளை யாட்சிக் குக் கொண்டுவருதல் தகுதியொன்பதை மறந்து குடும்பக் பூரக, ரேசகம் என்றும், வழங்கினமையால் வட மொழிகளே வழக்குச் சொற்களாகவும் தனித்தமிழ் மொழிகள் வழக்கில் சொற் களாகவும் ஆகிவிட்டன. தமிழ் மொழியில்லாத வழிப் பொருத்தமுள்ள பிறமொழியை ஆளுதல் தகுதியாகும். தமிழ் வழக்கிருப்பின் உள்ள மொழியையே ஆட்சிக்குக் கொண்டுவருதல் வேண்டும். ஆரியமொழியிலும் ஏற்புடையனவற்றையாளுத லிழுக் காகாது. ஆதலாற் பொருணூன்மொழிவரையறை செய்யப் புகு வோர் முதற்கண் தமிழ்மொழி வழக்கிலுள்ள பொருத்தமுள்ள சொற்களைக் கண்டெடுப்பது கடனாகும்.

இனிப் பொருணிச்சயம் பண்ணுவது எவ்வாறு என்பதை ஓர் உதாரணத்தால் விளக்குவாம். தொல்காப்பியனார் உயிர்ப் பொருள்களை வகைப்படுத்தும் வழி

''ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே''

எனவும்

''மாவு மாக்களும் ஐயறி வினவே
பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே''
''மக்க டாமே யாறறி வுயிரே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே''

எனவும் உரைத்த சூத்திரங்களுக்கு உரைகாணும் வழி. 'மனம்' எனும் சொல்லினது பொருளை நோக்குதும்.

ஆசிரியர் மாக்களென்றும், மக்களென்றும் வேறுபாடு செய்துகொண்டது முதற்கண் நோக்கற்பாலது. இனிப் படிப்படி யாக ஒன்று முதல் ஆறுவரையும் அறிவுக்குரிய வாயில்களை

வகைப்படுத்திச் சொல்லினாரன்றோ! அங்ஙனஞ் சொல்லிய வியல்பை யாராயுமிடத்து நான்கறிவுள்ள நண்டுக்கு இல்லாத தாகிய செவியென்றும் வாயில் ஐயறிவுள்ள குரங்குக்குண்டு. ஏனைய நான்கு வாயிலும் அடைப்புண்டிருக்கும்பொழுது குரங்கு ஐந்தாவது வாயிலாகிய செவியினால் அறிவைப் பெறும். அங்ஙனமே ஆறறிவுள்ள மக்களும் ஏனைய ஐந்து வாயிலும் அடைப்புண்டிருக்கும்பொழுது மனம் என்னும் ஆறாவது வாயிலினால் அறிவினைப் பெறுதற்குரியர். இவ்வறிவும் ஏனைய வாயில்களினாற் பெறுதல் கூடாத அறிவாயிருத்தல் வேண்டும். நித்திரையிற் காணுகிற கனவில் கண் முதலிய ஏனைய வாயில்களாற் பெறப்பட்டு நினைப்பிற் பதிந்து கிடந்த தோற்றங்களே மீண்டும் புலப்படுகின்றனவாதலால் அங்ஙனம் பெறுமறிவு ஏனைய வாயில்களாற் பெறாத புது அறிவு ஆகாது, இவ்வாறு முந்திய தோற்றங்களை நினைத்திருக்கும் நினைப்பும், ஒரு தோற்றத் தோடு பிறிதொன்றை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றலும்' பயம் உவகை, வெகுளி முதலியனவும் விலங்கினங்களுக்குமுண்டு. ஆசிரியன் மனவுணர்வினைத் தனித்த ஒரு வாயிலாகச் சொல்லுதலால் ஐம்பொறியுணர்வுக்கு நிலைக்களனாக விருப்பது மனம் என்று வரைவிலக்கணம் செய்துகொண்ட பிற்காலத்தார் 'மனம்' என்னும் மொழிக்குக் கொண்ட கருத்தும் தம்முள் வேறுபாடுடையனவாம்.

இங்ஙனம் ஆராயுங்கால் 'மனம்' என்னும் மொழியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது ஆசிரியர் தொல்காப்பியனார் கொண்ட கருத்தினையுள்ளவாறுணர்த்துவதாயின் Intiutive Faculty' என மொழிபெயர்ப்பது ஒருவாறு தக்கதாகும். ஏனைய ஐந்து வாயிலும் 'Perceptive Faculties' என அடங்குவ.

மேற்காட்டிய குறிப்புகளுக்கியைய இரசாயன நூலுக்குரிய சில மொழிகளை ஆக்கிக் கொண்ட மரபினைச் சுருக்கமாகச் சொல்லுவாம். இரசம் பாதரசம்; அயனம் - பிறப்பு. முன்னாளிற் பொன்னைப் பிறப்பிக்கலாமென முயன்ற இந்திய, அராபிய, ஐரோப்பிய இரசவாதிகள் அது இரசத்தைக் கட்டுதலினாலாகுமெனப் பல பொருள்களை ஒருங்கு சேர்த்துக் காய்ச்சுவதும் கலப்பதுஞ் செய்ததனாற் கண்ட முடிவுகள் பின்னாளிற் றொகுத்து வகுத்து நூலாயினமையால் அந்நூல் இரசாயன நூல் எனப்பட்டது. 'Elements' 'Mixtures' 'Compounds' என்னுஞ் சொற்களை முறையே தனிப் பொருள், கலைப் பொருள்,

கூட்டப் பொருள் என்று வழங்கலாகும். தனிப் பொருள்கள் என்பதின் மேற்பட்ட தொகையின. இவற்றுள் தமிழ் வழக்கிலுள்ள பொன் (Gold), வெள்ளி (Silver), செம்பு (Copper), இரும்பு (Iron), ஈயம் (Lead), கரி (Carbon) சுண்ணமூலம் (Calcium) - சுண்ணம் 'சுடு' என்னும் வினையடியினின்றும் பிறந்தது. வங்கம் (Tin), நாகம் (Zinc), தீமுறுவல் (Phosphorus) - இதனைச் சுருக்க நோக்கி 'முளி' யென்று வழங்குவாம். ரசம் (Mercury), கந்தகம், சிலை (Sulphur), பாஷாணம், விஷம் (Arsenic) என்பன ஏனைய தனிப் பொருள்களுக்கு பெயர் கொள்வதற்கு மூன் வைத்திய நூல்களை ஆராய்ந்து பெறக்கூடிய சொற்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு தனிப் பொருளுக்கும் ஒவ்வோர் எழுத்து அறிகுறியாய் நிற்றல் நன்று,

ஆதலால் இனி இட்டுக்கொள்ளும் மொழிகள் வேறு வேறு எழுத்துக்களை முதனிலையாகக் கொண்டு நிற்றல் நன்று. சின்னஞ்சிறிய சொற்களை ஆக்கிக்கொள்ளுதல் அழகு, கண்ணிற் றீட்டும் மையிலுள்ள தனிப்பொருளாகிய (Antimony) என்னும் பதத்தை 'மை' என்பாம். 'நிறம்' என்னும் பொருளினதாகிய யவனமொழித் தாதுவினின்று பிறந்த (Chlorine) என்னும் பதத்தை 'நிறம்' என்பாம். களிமண்ணினின்று பெறும் (Alumi-nium) 'தலம் எனப்படும். பாரத்தைக் குறிக்கும் யவனமொழித் தாதுவினின்றும் பிறந்த (Barium) 'பாரம்' எனப்படும். சூரியனைக் குறிக்கும் யவனமொழித் தாதுவினின்று பிறந்த (Helium's என்பதனை 'எல்' என்பாம் (Barium Helium) என்பவற்றுக்கும் 'பாரம்' 'எல்' என்பவற்றுக்கும் பொருட் பொருத்தத்தோடு ஒலிப்பொருத்தமுமுண்டு லவணமூலமாகிய (Sodium) என்பதனை 'லவம்' என்பாம். பவனத்திலுள்ள இரண்டு தனிப்பொருளாகிய (Oxygen, Nitrogen) என்பன அறிவும், உடலும் போன்றிருத்தலால் முறையே 'மதி' 'சடம்' என்றும் நீரின் மூலப்பொருளாகிய (Hydrogen) என்பதை நீரைக் குறிக்கும் 'அம்பு' என்னும் மொழியின் பாகமாகிய அம் என்றும் குறியீடு செய்வோம். வைக்கோல் நிறமாகிய (Fluorine) என்னும் பொருளை 'வை, என்பாம். பிறவும் இவ்வாறே. நாம் இட்டுக் கொண்ட பெயர்சுள் யாவும் வேறு வேறு முதனிலையையுடையன. ஆதலின் ஒருதனிப்பொருளைக் குறிப்பதற்கு ஓர் எழுத்தையே உபயோகித்தல் கூடும்.

இனி' மை' மதி' சடம், நிறம் என்னாது அன்ரிமணி வ்ளு ஒறின், ஆக்சிஜன், நைத்ரஜன், க்ளோறின் என்று ஆரவார மொழிகளாற் சொல்லின் அவை தமிழுமாகாது, ஆங்கிலமுமா

காது, மாணாக்கனுடைய் நாவுக்கு இடர் விளைப்பனவாய் முடியும். நீண்ட சொற்களைக் கண்முன் வரவொட்டாது துரத்த வேண்டும். உறிந்தி, வங்காளியாகிய பாஷைகளில் விஞ்ஞான பரிபாஷைபெழுதியவர்கள் நீண்ட சொற்கள் சிலவற்றை யுபயோகிக்க அவை வழக்குக்கு வந்தில என்னும் முறையீடு நம் செவிக் கெட்டியது. ஆதலால் அழகு பொருந்திய பைந்தமிழ்ச் சொற்களையமைக்க விரும்பும் நாமும் சிறிய சொற்களைத் தெரிந்தெடுத்தாள்வோம். சிறிய சொற்களின் ஆற்றலை மேல் வருவனவற்றாலும் உணர்ந்துகொள்ளலாம். (Oxides) என்னும் வகுப்புப் பொருள்களைப் பொன்மதி (Gold Oxide) வெண்மதி (Silver) Oxide) செம்மதி (Copper Oxide) கரிமதி, சிலைமதி, வங்கமதி நாகமதி ஈயமதி, விஷமதி, முளிபதி, சடமதி, என்று இவ்வாறு பெயரிட்டாளுதல் எவ்வளவு அழகாகவிருக்கின்றது. (Hydrogen) என்பதை 'அம்' என்று குறியிட்டோமாதலால் (OH) கொண்ட (Hydroxides) என்னும் பதார்த்தங்களை 'மதியம்' என்னும் விகுதி தந்து வழங்கலாகும். அவை பொன்மதியம், வெண்மதியம் நாகமதியம், வங்கமதியம், லவமதியம் எனவருவன. பொன்மதியம் என்பதற்குப் பதிலாக வடமொழியும் பிறமொழியுங் கலந்து சுவர்ணஹைறராக்கிஜம், என்றால் அது 'திலகாஷ்' டமகிஷ பந்தனம்' போல ஆரவாரச் சொல்லாய் முடியும். (Hydrogen' என்னும் ஒரு பதார்த்தத்திற்கு மாத்திரம் 'அம்' என்னும் மொழியோடு அகர முதனிலையையேயுடைய 'அணி' என்னும் மொழியையும் உபயோகிப்பின், (Holl) அணி மதியம் (Hel) அணி நிறம் என்றாகும்.

(Acids) (Alkalis) என்னும் இருவகுப்புப் பொருளையும் முறையே 'காடி' காரம், என வழங்குதல் கூடும். மேற்குறித்த சொற்களைப் பிரயோகித்துக்காட்டுவோம்.

காடியுங்காரமுஞ் சேர்வுழி உப்பும் நீரும் பிறக்கும் என்பது இரசாயன நூன்முடிபு. பெருவழக்காகப் பாவிக்கப்படுகிற காடிகள், கரிக்காடி (Carbonic Acid) சிலைக்காடி (Sulphurie-Acid)சடக்காடி (Nitric Acid) நிறக்காடி (Chloric Acid) அணி நிறக்காடி (Hydrocholoric Acid) என்பனவாம். பெருவழக்கிலுள்ள காரங்கள் லவக்காரம் (NaoH), உரக்காரம் (KoH), சுண்ணாக்காரம் ஈயக்காரம் முதலியன.

$$\text{லமஅ} + \text{அநி} = \text{லநி} + \text{அ}_2\text{ம}$$

என்னும் குறியீட்டினால் விளங்கக்கிடப்பது எதுவென ஆராய்வாம். இக்குறியீட்டை 'லவ்வொன்று மவ்வொன்று அவ்

வொன்று உடன் அவ்வொன்று நிய்யொன்று சமம்; நிய்யொன்றுடன் லவ்வொன்று அவ்விரண்டு மவ்வொன்று என்று வாசிப்பாம். ல=லவம், ம=மதி, அ=அம், அணி, நி=நிறம் ஆதலால் லமவதியமும் அணி நிறமுஞ் சேரின் லவநிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது பொருள். அதாவது லவக்காரமும் அணிநிறக்காடியுஞ் சேர லவ நிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது. லவநிறம் இரசாயனப் பெயர்; கறியுப்புப் பொதுவழக்கு.

$$சு (ம அ)_2 + ச ம_2 = சு க ம_3 + அ_2 ம$$

என்பதை இங்ஙனமே ஆராயிற் சுண்ணக்காரமுங் கரிக்காடியுஞ் சேர்வுழி சுண்ணக் கரிமதி (சுண்ணக்கல் பொதுப்பெயர்)யும் நீருமாகும் என்பது பெறப்படும். இங்ஙனம் தமிழ் எழுத்துக்களாற் குறியீடு செய்வதேயன்றி மொழி பெயர்ப்பு நூலினுள் ஆங்கில மொழியெழுத்துக்களை மேலும் மேலும் இழுத்துக்கொண்டிருப்பது தகுதியாகாது.

ஒளி நூலுக்குரிய சில சொற்களை யாராய்வோம். 'Plane 'Spherical' என்னும் சொற்களை 'மட்டம்' 'வட்டம்' என்று கொள்வோம், 'Mirror' கண்ணாடி; பரிபாடலிலுள்ளும் 'வான்றுகள் மாசறக் கண்ணடி வயக்கி' என்றார். கண்ணாடியென்னுஞ் சொல்லைப் பொதுவழக்கில் 'Glass' என்பர். இருவேறு பொருளுக்கு ஒரு சொல்லைக் குறியீடு செய்தாளுதல் மலைவுறுத்தலுக்கு இடமாதலால் 'Glass' என்பதனைப் 'படிகம்' என்று கொள்வாம். ஆகவே மட்டக் கண்ணாடி (Plane Mirror) மட்டப்படிகம் (Spherical Mirror) மட்டப்படிகம் (Rectangular Prism), முக்கோணப் படிகம் (Triangular Prism), பலகோணப் படிகம் (Poly Gonal Prism) என வரும் Poly - பல Gonos - கோணம் இவை தமிழ்ச்சொற்கள் யவனமொழியிற் சென்று வழங்கியதற்கு உதாரணமாகும். கோணம் என்பது கோடு என்னும் வினையடியினின்று பிறந்தது. வட்டப்படிகம் (Lens) 'Concava', 'Convex' என்னும் மொழிகளை உள்வட்டம் புறவட்டம் என்று கொள்ளுதல் கூடும், 'Ray என்னும் மொழியைக்கதிர் என்றுகொள்ளலாம். Pencil கதிர்த்திரள்; Converging Pencil குவிகதிர்த்திரள் Diverging Pencil விரிகதிர்த்திரள்; Parallel Pencil நேர்க்கதிர்த்; திரள் Reflection கதிரெழுச்சி: Refraction கதிர்ப்பாய்ச்சல்; Incident Ray விழுங்கதிர்; Refracted Ray எழுங்கதிர் Refracted Ray பாய்கதிர்; படிமம் (இது படு என்னும் பகுதியிலிருந்து வந்த தமிழ் மொழி; தொல்வாசிரியர் கண்ணாடியைப் படிமக்கலம் என்றதை நோக்குக.) Real Image மெய்ப்படிமம் Virtual

Image பொய்ப்படிமம் (உருவம் என்னும் சொல்லை Figure என்னும் ஆங்கில மொழியை யொத்ததாகக் கொள்ளலாம்). Focus = மையம் Centre= நடு என்று இவ்வாறு கொள்ளலாம்.

பௌதிக சாஸ்திரத்தின் பாலவாகிய ஏனையசொற்களனைத்தையும் மேற்காட்டிய குறிப்புக்களுக்கமைய ஆக்கிக்கொள்ளுதல் கூடும். தாவர சாஸ்திரத்துக்கு வேண்டிய சொற்கள் பல பத்துப் பாட்டிலொன்றாகிய குறிஞ்சிப்பாட்டிற் செறிந்து கிடக்கின்றன. இரசாயன மொழிகளும் மூலிகைகளின் பெயரும் வைத்திய நூல்களிற் காணப்படுவன; மனநூலுக்குரிய மொழிகள் சித்தாந்த சாஸ்திரங்களிற் காணப்படுவன; இரேகா கணிதத்துக்குரிய மொழிகள் பல நிகண்டின் வடிவுபற்றிய பெயர்த் தொகுதியுட் காணப்படுவன; வடமொழி நூல்களுட் சாங்கியம். வைசேடிகம் நியாயம். யோகம் என்னும் வஸ்துநிச்சய நூல்களுள்ளும் அர்த்த சாஸ்திர நூல்களுள்ளும் வராஹ மிஹிரம் முதலிய வான நூல்களுள்ளும் பல மொழிகள் உள்ளன. தமிழ்மொழி, வடமொழி. பிறமொழி என்னும் முறையிற் சொற்களைத் தேடியாராய்ந்தமைத்துக் கொள்ளுதல் நலமாகும்.

மொழி பெயர்ப்பதற்குரிய முறையைக்கூறிய அடிகளார் அப்போது கவனத்தில் எடுக்கப்பட்ட வேண்டிய சில நூல்களைப் பற்றியும் கூறுகிறார்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில மிஷனரிமார் முயற்சியில் வெளியான வீசகணிதம், அங்காதிபாதம், சுகரணவாதம், நியாய சாத்திரம், வான சாத்திரம், உற்பாலனம், கெமிஸ்தம் முதலிய நூல்கள் ஒரு குறித்த மரபுபற்றிச் சொற்களையமைத்துச் செல்லுகின்றன. அம்மரபு நமக்குப் பயன்படும்"

(இன்னும் கேட்கும் குரல் - செ. யோகநாதன்)

# மாற்றங்களின் மத்தியிலும் இராணுவம் நடைபோடுகிறது

- ரோகன் குணசேகரா -

(ஐலண்ட் - 11-04-1992)

போராட்டத்தின் இக்காலகட்டத்திலும் தனது அரசியல் வாழ்வின் இந்நிலையிலும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆயுதப் படைகளின் எப்பிரிவையாவது பகைத்துக்கொள்ள முடியாது. அவர்களின் பெரிய பரிமாணத்திலும், நாட்டின் குலைவை தடுத்து நிறுத்துவதில் அவர்கள் சிந்தும் வியர்வை, இரத்தம் ஆகியவற்றினாலும் இராணுவம், உள்ளூர் ஆதிக்கக்கட்டமைப்பின் ஒரு முக்கியமான, தனித்துவமான ஆற்றலாக முகிழ்ந்து வருகிறது.

இதுவே இராணுவ ஆணையிலும் அதன் கட்டுப்பாட்டமைப்பிலும் சமீபத்தில் ஏற்பட்ட குளறுபடி நிலையிலிருந்து விட்டுக்கொடுப்பு அடிப்படையில் சுமுக தீர்வு ஏற்பட்ட காரணமாக தோன்றுகிறது. தரைப்படை, கடற்படை, வான்படை, காவல் துறை தளபதிகளுக்கு தத்தமது படைகள்மீது கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள செயலுரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கூட்டுப்படைத் தலைமை இவற்றுக்கு மேல் இவர்களுக்கு - ஆலோசனை கூறும் அமைப்பாக இருக்கின்றது.

புறம்பான கூட்டுச்சேவைகள் தலைமையகம் ஒன்றை நிறுவவேண்டும் என்ற திட்டம், கூட்டுப்படைத் தலைமையகத்திற்கும் தனித்தனி படைகளின் தலைமையகங்களுக்கும் மேலதிகமாக அவ்வித அமைப்பொன்றை செய்வதற்கு வழிவகை இல்லையென்பதால் அரசாங்கத்தால் 'நிராகரிக்கப்பட்டது. தொடக்கத்தில் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டு மூத்த மேலாளர்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு முறையான இணைப்புகளை ஏற்படுத்தும் நோக்குடன் அதற்கேற்ற சிறந்த தீர்வுகளை காணும் நோக்கோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டபோது, கூட்டுத்தலைமையகத்தை வான்படை தலைமையகத்திற்கு மாற்றுவதற்கு திட்டமிருந்தது. இதற்கு தரை நடவடிக்கைகளுக்கு வான்படை உதவி இலகுவானதாகவும் விரைவானதாகவும்

இருக்குமென்பதாலும் அத்துடன் வான்படை கொமாண்டர் ஏயர் மார்சல் ரெரன்ஸ் குணவர்த்தனா சேவைத் தளபதிகளில் மூத்த தளபதியாகவும் இருப்பதுவே காரணமாகும். இடவசதியும் ஓர் காரணியாகும்.

## சரிப்படுத்துதல்கள்.

அவ்வித கூட்டு நடவடிக்கை அமைப்பு ஒன்று, கூட்டுப் படைத் தலைமையகத்தில் ஏற்கனவே இருப்பதாலும் புதிதாக ஒன்றை அமைப்பதற்குரிய செலவு அதிகமென்பதாலும், புதிய கூட்டு பாதுகாப்பு படைகளின் தலைமை செயலகத்தை கூட்டுப் படை தலைமையகத்திலேயே வைத்திருப்பதென தீர்மானிக்கப் பட்டது. இப்போது தரைப்படையின் நடவடிக்கை மேலாளர்கள் கூட்டுப்படைத் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள். அங்கு அவர்கள் மற்ற படைகளின் நடவடிக்கை மேலாளர்களு டன் சேர்த்து இயங்குவார்கள். கூட்டுப்படைத் தலைமையகத் திலிருந்த மேலாளர்களின் ஒரு பிரிவினர் முன்னராகவே தரைப் படை தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டனர்.

இதுபோன்ற கூட்டுப் பாதுகாப்புப் படைகளின் முன்னணி தலைமைச் செயலகமொன்று அனுராதபுரத்தில் நிறுவப்பட்டுள் ளது. இது நடவடிக்கைகளின் போது கூட்டுப்படைத் தலைமை யக மேலாளர்களால் நிர்வகிக்கப்படும் நடமாட்ட தலைமைச் செயலகத்தில் புலிகளுக்கெதிரான பெரும் கூட்டு நடவடிக்கை களின் போது மூன்று படைத்தளபதிகளும் சென்று இருப்பார் கள். இதனால் களத்தளபதிகளுக்கு வரும் போகும் சமிக்ஞைகளு போக்குவரத்தைக் குறைப்பதோடு நடவடிக்கை எடுக்கும் நேரத் தையும் குறைக்கும்.

இதேநேரம் இப்போதுள்ள பூகோள ரீதியான தள சீரமைப் புகளிலும் கள தளகர்த்தர்களிடையேயும் சில மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. வளங்களை மீள்பகிர்வதிலும் கட்டுப்பாட் டுப் பிரதேசங்களை மீளமைப்பதும் இம்மாற்றங்களாகும். மறைந் திருந்து தாக்குவதன் மூலமும் தாக்கிவிட்டு ஓடிமறையும் தாக் குதல் மூலமும் திரும்பத் திரும்ப ஒழுங்குமுறையில் படையினரின் உயிர்களை காவுகொண்டும் மகாவெலி எல்லைப் பிரதேச குடி யிருப்புக்களை பயமுறுத்திக் கொண்டும் கொள்ளைக் கூட்டங் களாகத் திரியும் புலிகளை கிழக்கிலிருந்து அகற்றுவதற்கு முன் னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதே இன்றைய நிலைப்

பாடாக தோன்றுகிறது புலிகளின் கரந்தடி தந்திரோபாயங்களுக்கு இராணுவம் தொடர்ந்தும் பாதிக்கப்படும் நிலையில் இருப்பதை சில வட்டாரங்கள் விமர்சிக்கும் அதே வேளையில் இன்னொரு சாரார் 1990 யூன் மாதத்தில் புலிகளின் ஆதிக்க நிலையிலிருந்ததிலும் பார்க்க இப்போதுள்ள நிலைமை முன்னேற்றம் அடைந்துள்ளதாக் கூறுகின்றனர்.

புலிகளின் பலத்தை கிழக்கில் சமநிலைக்கு கொண்டுவருவதற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டாலும் அவர்களை, என்ன நடக்குமோ என்று ஏக்க நிலையில் வைத்திருப்பதற்காக வடக்கிலும் சமகால நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதை தட்டிக்கழிக்கமுடியாது. போர் மீள தொடங்கி சுமார் இரண்டு ஆண்டு காலமாக குடாநாட்டை தொடர்ந்து தமதாதிக்கத்தில் வைத்திருக்கிறார்கள். இவ்வளவு காலமும் யாழ்ப்பாணத்தை இராணுவத்தினால் கைப்பற்ற முடியவில்லையே என்று கூறுபவர்களுக்கு வடக்கில் இடம்பெற்ற பல பெரும் தாக்குதல்களில் புலிகள் அழிக்கப்பட்டமையையும். யாழ்ப்பாணத்திற்கு மேற்கேயுள்ள தீவுகளையும் பூநகரி, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமையையும் எதிர் தரப்பினர் எடுத்துக்காட்டுகின்றார்கள். புலிகளை ஒரு பாரிய தாக்குதல் மூலம் முறியடித்து விடலாம் என்ற நம்பிக்கை உண்டு என இவர்கள் கூறுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தைப்பிடிப்பதற்குளடுக்கப்படும் எவ்வித நடவடிக்கையிலும் சிறிலங்கா பாதுகாப்பு படையினர்களின் மிகப் பெருந்தொகை இராணுவம் பங்குபற்றி இதற்கு முன்எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலமே வெற்றியைப் பெறலாம். குடாநாட்டிற்கு மேற்குள்ள தீவுகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இரு பட்டாலியன் அணிப்பிரிவுகளும் பூநகரியிலுள்ள 10 பிரிகேற் குறாப் பிரிவினரும் யாழ்ப்பாணத்திற்குள் புக தயார் நிலையில் இருக்கிறார்கள்.

மண்டைதீவில் துருப்பினர், புலிகளால் அரையுங்குறையுமாக இடிக்கப்பட்ட நிலையிலுள்ள சுவர்களைக் கொண்ட கோட்டையின் அண்மையிலுள்ள யாழ்ப்பாணப் பட்டினத்தின் கடல் எல்லையிலுள்ள புலிகளின் அரண்களை நீரிணைக்கப்பால் இருந்து தூரநோக்கு கண்ணாடி மூலம் பார்க்கிறார்கள். இத்தீவுகளை தம்வசம் வைத்திருப்பதாலும் வடக்கேயுள்ள கடற்படை ஆணைப் பிரதேசத்தின் கீழ் உள்ள தரைத்தள ராடார்

2232CC



நிலையங்களாலும் வடகடலின் பிரதேசங்களில் புலிகளின் படகுப் போக்குவரத்து குறைந்துள்ளது. கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளினால் இத்தீவுகள் அரண்களைக் கொண்ட கோட்டைகள் போன்று மாற்றப்பட்டுள்ளன. புலிகள் இத்தீவுகளுக்குள் ஊடுருவ முடியாவிட்டாலும் இவைகளை இணைக்கும் தாம்போதிகளின் தூர இடங்களிலுள்ள தனியனாய் உள்ள பதுங்கு குழி அரண் மீது தாக்கிவிட்டு ஓடும் தந்திரோபாயத்தை இடையிடையே மேற்கொள்ளலாம்.

போர்முனையிலுள்ள மேலாளர்கள் அண்மைக் காலங்களில் புலிகள் அடைந்த இழப்புகள் நடுவிலும் அவர்களின் மனோதிடம் வியத்தகுவகையில் மேல்நிலையிலேயே இருக்கிறது என்று கூறுகிறார்கள். களத்தில் புலிப்போராளிகள் குறிப்பாக பெண் போராளிகள் பிரமிப்பூட்டும் அளவுக்கு மூர்க்கமாகவும் இலட்சியப்பற்றுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் அவர்களின் எதிரிகள் கூட அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். குடிமக்கள் மீது களவாக தாக்குதல் செய்வதாலும் அட்டூழியம் புரிவதாலும் பாதுகாப்புப் படையினரின் ஆற்றலை விரயமாக்கும் தன்மையுடைய புலிகளுக்கெதிரான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை மிகவும் சிரமமானதே. இலட்சியப் பற்றும் மனோபலமும் புலிகளுக்கெதிரான போராட்டத்தில் முக்கிய காரணிகளாக இருக்கவேண்டும் என்று புதிதாகச் சேர்க்கப்பட்ட மேலாளர்களுக்கு வகுப்புநடாத்தும் போது போர்முனை மேலாளர்கள் அழுத்திக் கூறுகிறார்கள்.

இராணுவத்தின் சில பிரிவுகளுக்குள், அண்மையில் ஆணையிடும் கட்டமைப்புக்குள் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களினால் கசப்பும் விரக்தியும் அடைந்துள்ளனர். சில வட்டாரங்கள் மேலாளர்கள் மட்டத்தில் இந் நடைமுறைகளினால் அதிருப்தியுள்ள இருப்புகள் மட்டத்தில் மனோபலம் குன்றுவதன் காரணமாக பெருமளவில் பதவி விலகல் நடைபெறலாம் எனக் கூறுகின்றன. இவ்வளவு காலமும் கட்டுக்கோப்பு குலையாமல் இருந்த இராணுவம் இம்மாற்றங்களால் பிளவுறும் நிலையை அடையலாம். இத்திருப்தியின்மை மிகச் செல்வாக்குள்ள சில மேலாளர்கள் பாதிக்கப்படுவது தெரிந்தால் மேலும் அதிகரிக்கும். இத்திருப்தியின்மையின் சலசலப்பை தட்டிக் கழித்து தனிநபர்களுக்கு என்ன நடந்தாலும் கட்டுப்பாடான இராணுவம் தொடர்ந்து போராடும் என்று மற்றவர்கள் திடமாகக் கூறுகிறார்கள்.

★



86708

# மாயமாக மறைந்த கப்பல்

- பார்பரா ருமேரோல்ப் -

(ரைம்ஸ் - 23-3-1992)

அமெரிக்கக் கடற்படைப் புலனாய்வுத் துறையிலுள்ள தொழில் நுட்ப மேதைகளுக்கு இது ஒரு சிக்கலில்லாத சுலப மானபணியாகவே தோன்றியது. வடகொரியாவுக்குச் சொந்த மான 'டே ஹங்கோ' (Dae Hung Ho) என்ற கப்பல் ஸ்கட் சீ பலாஸ்ரிக் (Scud C-Ballastic) ஏவுகணைகளைஏற்றிக்கொண்டு சிரி யா (Syria) வைநோக்கிச் செல்வதாக எச்சரிக்கப்பட்டிருந்த டற் படையினர் மேலும் அக்கப்பலை இடைமறித்துப் பிடிக்கும்படி யும் கேட்கப்பட்டிருந்தனர். ஐ.நா சபையால் ஈராக்குக்கு எதி ராக விதிக்கப்பட்ட தடை உத்தரவை அமுல்படுத்தும் நோக்கு டன் இந்து சமுத்திரத்திலிருந்து பாரசீக வளைகுடா (Persian Gult) வரை ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அமெ ரிக்கக் கடற்படைக் கப்பல்கள் அக்கப்பலை இடைமறித்துஅதற் குள்ளிருக்கும் பொருட்களை சோதனைசெய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளதென அமெரிக்க தேசிய பாதுகாப்புச்சபையும், அமெ ரிக்க இராசாங்க அமைச்சும் சென்றவாரம் கூறியுள்ளன. பத்து நாட்களுக்கு மேலான தீவிர கண்காணிப்பு மத்தியிலும் 'டேஹங் கோ' அமெரிக்க போர்க்கப்பல்களின் கண்களுக்குத் தெரியாது ஈரானிய துறைமுகமான பண்டர் அப்பாசுக்கு (Bandar Abbas) எவ்வித இடையூறுமின்றி போய்ச் சேர்ந்துள்ளது. அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடமான பென்ரகன் (Pentagon) இவ்வி டயத்தைப் பற்றி நிறைய விளக்கம் கொடுக்கவேண்டிய நிலை யில் உள்ளது.

அமெரிக்கக் கடற்படைத் தலைமைப்பீடத் தளபதியான ஜெனரல் யோசெவ் ஹோர் அடிப்படைத் தவறுகாரணமாகவே இத்தவறு நேர்ந்ததெனக் காங்கிரஸ் செயற்குழுவுக்குக் கூறியுள் ளார். ''கப்பலை எங்களால் கண்டுகொள்ள முடியவில்லை. நாங் கள் எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தும், அவை பலனளிக்கவில்லை என அவர் கூறியுள்ளார். மேல்மட் டத்திலுள்ளவர்களின் தவறான கணிப்பே உண்மையான பிரச்சி னையாகவிருந்ததெனஅமெரிக்க கடற்படையிலுள்ள சிலர் குறை கூறியுள்ளார்கள். ஆரம்பத்திலேயே இந்தப் பணிக்கு முதன்மை கொடுக்கப்படவில்லை. வெறுமனே கப்பலைத் தேடச் சொன்

னார்களேயன்றி இந்த விடயத்தில் வேறு எவ்வித உற்சாகமும் தரப்படவில்லை என ஒரு கடற்படை மேலாளர் கூறினார். இதேவேளை 2,070,000 சதுரக் கிலோ மீற்றர் பரப்புக்குள் செல்லுகின்ற அக்கப்பலைக் கண்டுபிடிக்கக் கூடிய ஆற்றல்வாய்ந்த கப்பல்களும் வானூர்திகளும், அமெரிக்கா என அழைக்கப்படும் விமானந்தாங்கிக் கப்பலும் 100 கிலோமீற்றர் தூரத்துக்கப்பால் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

அக்கப்பலைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பகுதியினர் கப்பலுக்குச் சென்று அதில் ஸ்கட் 'சீ' ஏவுகணைகள் இருக்கின்றனவா என உறுதிப்படுத்த வேண்டும் என எழுந்த சர்ச்சைக்கும் அப்படியான ஒரு துணிகரமான நடவடிக்கையை மேற்கொண்டால் அது வட கொரியாவின் அணுவாற்றலைச் சர்வதேச ரீதியாகக் கண்காணிக்கத் தற்பொழுது நடத்தப்பட்டு வரும் இணக்கப் பேச்சுவார்த்தைகளைப் பாதிப்படையச் செய்யும் என வாதிடும் மற்றப் பகுதியினருக்குமிடையே நடந்த சர்ச்சைக்கும் இடையே அகப்பட்டுக் கொண்டனர். ஒருசில ஸ்கட் சீ ஏவுகணைகளை விட வடகொரியாவின் அணுவாற்றலைக் கண்காணிப்பதே பிரதானமானதென அமெரிக்க நிர்வாகத்திலுள்ள ஒரு மேலாளர் கூறினார். ஈரானுக்கு அக்கப்பல் போய்ச் சேர்ந்த அல்லது அதற்கு முந்திய நாள் மாத்திரமே அதை இடைமறிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்படைக்குச் செய்தி கிடைத்தது.

கப்பலைத் தேட போதிய கால அவகாசம் இருக்கவில்லை இதனால் ஏற்பட்ட குழப்ப நிலையைக் குறைப்பதற்குப் பென்ரகன் பேச்சாளர் திரு பீற்றர் வில்லியம்ஸ் முயன்ற போதும் அது பலனளிக்கவில்லை. ''எங்களுக்கு விருப்பமில்லாத ஆயுத விற்பனை உலகெங்கணும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த விற்பனைகளை நிறுத்துவதற்கு எங்களிடம் சட்ட ரீதியான செயலுரிமை இருக்கவில்லை. டேகங்கோ என்ற கப்பலை கண்டுபிடிக்க கடற்படை எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது. அந்தக் கப்பலைக் கண்டுபிடித்திருந்தால் மிகவும் சந்தோஷமாக விருக்கும்'' என அவர் கூறினார்.

அமெரிக்காவில் நிலவிய இந்தக்குழப்ப நிலை, சிறிய சனாதிபதி கவாசு ஆசாத் அவர்கள் அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கொள்கையைக் கண்டிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக்கொடுத்

தது. இஸ்ரேலைத் தாக்கும் சக்திவாய்ந்த ஸ்கட் ஏவுகணைகள் ஏற்கனவே சிரியாவிடமுண்டு. சிரியா வசம் தற்பொழுது இருக் ஸ்கட் பீ (*Scud* - B) ஏவுகணைகளிலும் பார்க்க அக்கப்பலில் கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படும் ஸ்கட் சீ ஏவுகணைகள் 480 கிலோ மீற்றர் தூரம் செல்லக்கூடியவையாயிருந்த போதி லும் அவை மத்திய கிழக்கின் இராணுவச் சமவலுவில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தமாட்டா. புதிய ஏவுகணைகளைக் கோ (*Ho*) கொண்டு செல்லவில்லை என வட கொரியா தெரி வித்த மறுப்பையே தானும் கூறிக்கொள்ளும் சிரியாவின் சனாதி பதி ஆசாத், அராபியர்களை நிராயுதபாணிகளாக்கும் அதே வேளையில் இஸ்ரேலியர்கள் ஆயுதங்களை உற்பத்தி செய்வ தற்கு அமெரிக்கா துணைபுரிகின்றது, எனச்சாடியுள்ளார்.

இஸ்ரேல் பகிரங்கமாக இதற்கொரு எதிர்ப்பும் தெரிவிக்க வில்லை இருப்பினும் அதனுடைய பகைநாடான ஈரானுக்கு ஏவு கணைகள் போய்ச் சேருகின்றன என நன்கு தெரிந்திருந்தும், அமெ ரிக்கா தனதுஇயலாமையினாலோ அல்லது விருப்பமின்மையாலோ அக்கப்பலை இடைமறிக்க தவறியுள்ளது என அமெரிக்கா மீது இஸ்ரேலிய மேலாளர்கள் ஆத்திரங்கொண்டுள்ளனர். எப்படியான இழிசெயல் இது?வடகொரியாவின் கப்பலொன்றை இடைமறிப்ப தற்கு அமரிக்காவுக்கு ஆற்றல் இல்லையா ?அதை செய்ய விரும்பி னார்களா?அல்லது இல்லையா ? என ஒரு இஸ்ரேலிய அரசாங்க மேலாளர் வினவுகின்றார்.

அமெரிக்க நிருவாகம் இக்கேள்விகளுக்குப் பதில் அளிப்ப தற்குவிரும்பாதுஆயுதங்களை ஏற்றிக்கொண்டு செல்கிறது எனச் சந்தேகிக்கப்படும் ஈரானியக்கப்பலான ,,ஈரான் சலாம்'' (*Iran Salaam*)மைப் பற்றி அமெரிக்கா என்ன செய்யவிருக்கின்றது? எனப் பத்திரிகை நிருபர்கள் ஏற்கனவேகேட்க ஆரம்பித்துள்ளார்கள். இந்த விடயத்தில் மேலும் நாங்கள் ஒரு நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை எனப் பென்ரகன் பேச்சாளர் திரு வில்லியம்ஸ் கூறினார். இது சுலபமான நடவடிக்கையாகும். ★

# இக்கட்டான / தடுமாற்ற நிலையிலிருக்கும் கிளர்ச்சியாளர்கள்

## கொலம்பியாவின் மாக்சிச கிளர்ச்சியாளர்களைப் பொறுத்தவரை போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது.

*நியூசு வீக்கு 30-3-92*

கொழுந்துவிட்டு எரியும் நிலநெய் குழாய்களிலிருந்து எழும் அலை அலையான புகைமண்டலத்தை நோக்குகையில் தென்அமெரிக்காவில் கடைசியாக இருக்கும் மாக்சிச மற்றும் லெனினிசக் கிளர்ச்சியாளர்கள் ஒரு வெற்றியைக் காணக்கூடிய தாயிருக்கின்றது. உலக அரங்கிலிருந்து பொது உடமைக் கொள்கை மறைந்துவரும் வேளையில் கொலம்பியாவின் தேசிய விடுதலை இராணுவம் (National Liberation Army - ELN) தாங்கள் மறைந்து வாழும் மலைப்பிரதேசங்களிலிருந்து சனவரி 29-இல் வெளிவந்து முன்னெப்பொழுது மில்லாதவாறு துணி கரமாக தேசிய பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் அமைந் துள்ள பறன்காபேமெசா (Barran Cabcrmeja) நகரத்தின் எல்லையிலுள்ள மூன்று நிலநெய் குழாய்களை வெடிவைத்து தகர்த்துள்ளனர். நிலநெய் உற்பத்தியைத் தடை செய்ய வேண்டும் என்ற தங்கள் குறிக்கோளை இதன்மூலம் கிளர்ச்சி யாளர்கள் அடைந்துள்ளனர். இருந்த போதிலும், தகர்க்கப் பட்ட குழாய்களிலிருந்து வெளியேறிய நிலநெய், கிளர்ச்சியை எந்தக் கிராம மக்கள் மத்தியில் தூண்டுவதற்குக் கிளர்ச்சி யாளர்கள் எண்ணியிருந்தார்களோ, அந்தக் கிராம மக்கள் குடி தண்ணீர் பெறும் சிற்றாறுகளுக்குள் போய் கலந்து அதை மாசு படுத்தியுள்ளது. நீரின்மேல் படர்ந்திருக்கும் நிலநெய்யை வெறுப்புடன் அகற்றிவரும் இக்கிராம மக்கள் புரட்சியில் கலந்து கொள்வதற்கு ஆர்வமில்லாதிருக்கின்றனர். ''இதை நாம் ஏன் செய்கின்றோம் என்பதை 10 விகித மக்கள் உணர்ந்திருக்கிறார் கள். வெறுமனே நிலநெய் குழாய்களைத் தகர்க்கவேண்டும் என்பதற்காக அன்றி அடக்குமுறைக்கு எதிராகவும் தற்போதைய வாழ்க்கை முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கத்துடனேயே இப்படியான செயல்களில் ஈடுபடுகின்றோம்'' என தேசிய விடுதலை இராணுவத்தின் நகர்ப்புற நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதி திரு. பொம்பிலியோ (Pompilo) கூறினார்:

ஒரு காலத்தில் தென் அமெரிக்கா எங்கணும் பரவியிருந்த மாக்சிய கிளர்ச்சி போதைப் பொருள் வியாபாரத்தால் எதையும் சாதிக்கக்கூடிய நிலையில் விளங்கும் பேரு (Peru) மற்றும் கொலம்பியா (Columbia) ஆகிய நாடுகளில் மாத்திரம் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 1960 ஆம் ஆண்டுகளில் கிராமிய மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சியாளர்களாகிய தேசிய விடுதலை இராணுவமும் கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப்படையிலுள்ள Revolutionary Armed Forces of Columbia (R. A. F. C.) அதன் சபாக்களும் மொஸ்கோவிடமிருந்தோ அல்லது கவானா (Havana) விடமிருந்தோ கூடுதலான உதவியைப்பெறாததினால் தற்பொழுதும் அவர்களுக்கு சோவியத் நாட்டின் உதவி தேவையற்றதாகியுள்ளது. இவர்கள் தாங்கள் வழமையாகச் செய்வதுபோல் பண்ணை முதலாளிகள், அரசியல் வாதிகள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோரைக் கடத்தியும் கொக்கேயின் மற்றும் கெரோயின் போன்ற போதைப் பொருட்களின் உற்பத்திக்குப் பாதுகாப்பு அளித்தும் தங்களுக்குத் தேவையான பணத்தைப் பெறுகிறார்கள் கொலம்பிய மந்திரிசபையின் முன்னாள் மந்திரியும், 77 வயதை அடைந்தவருமான திரு ஆர். ஜெலினோ துறான் குவின் ரெறோ (Argelina Duran Quintero) கரந்தடிப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொழுது மாரடைப்பால் சென்றவாரம் இறந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் கரந்தடிப்படையினரால் சனவரியில் கடத்தப்பட்டிருந்தார்.

வேலைவாயப்பற்ற இளைஞர்கள் நடுவில் ஆர்வத்தை ஏற்படுத்திச் சேர்த்ததன் மூலம் 10,000 பேர்களைக் கொண்டதாக விருக்கும் கரந்தடிப் படையினரின் எண்ணிக்கை மேலும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. நகரங்களுக்குள் சமரை முன்னெடுத்துச் செல்லத்திட்டமிட்டிருக்கும் இவர்கள், அண்மையில் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்ட கொலம்பியாவிலுள்ள மற்றைய நாலு கிளர்ச்சிக் குழுக்களைக் குறைகூறியுள்ளனர். ''மற்ற நாடுகளில் நடந்தவற்றை நாம் துக்கத்துடனும் மனச் சோர்வுடனும் நோக்குவதன் காரணமாக எங்கள் கொடியை நாம் கீழே எறிந்து விட்டோம் என்பது அர்த்தமல்ல. நாங்கள் மார்க்சிச, லெனினிய வாதிகள்'' என பறன்காபேமெசா நகரத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்த கொலம்பியாவின் புரட்சிகர இராணுவப்படையின் பிரதான தளபதியான யோர்ச் (George) அவர்கள் நியூசு வீக்கு சஞ்சிகைக்குக் கூறினார்.

சென்ற யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளால் எதுவித முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. கியூபாவிலும் வியட்நாமிலும் இருப்பதைப் போன்ற

சமூக மற்றும் நிலச்சீர்திருத்தங்களை கொலம்பியா ஏற்றுக் கொள்ளும்வரை போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்வதில்லை யெனக் கூறிச் சென்றவாரம் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்தத்தை கிளர்ச்சியாளர்கள் நிராகரித்துள்ளனர். பெரும் கைத் தொழில்களை தேசியமயமாக்குவதன் மூலமும் வர்த்தகத் தடைகளைக் கொண்டுவருவதன் மூலமும், நிலங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலமும் திரு பொகொட்டா அவர்களின் தாராளப் பொருளாதாரக் கொள்கையை அவர்கள் மாற்றியமைக்க விரும்பினார்கள். அறிமுகம் இல்லாதவர்களாகவே கிளர்ச்சிக்காரர்கள் அநேகமான கொலம்பிய மக்களுக்கு விளங்குகிறார்கள். ''கிளர்ச்சியாளர்கள் அரசியல் நெடு நோக்கு இல்லாதவர்கள். மக்களின் உணர்வுகளை இனிமேலும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாது'' என பறன்காபேமெசாவின் ஆயர் யுவன் பிறான்சிஸ்கோ சறபதி கூறுகிறார்.

நிக்கரகுவா அல்லது எல் சல்வடோர் ஆகிய நாடுகளில் நடைபெற்ற போர்கள் போல் இங்கு நடைபெறும் சமர் கடுமையானதாக இல்லாதிருந்தபோதிலும் இந்த சமரில் இறந்தவர்களின் எண்ணிக்கை அந்த நாடுகளில் இறந்தவர்களின் எண்ணிக்கைக்குச் சமானமானதாகவே உள்ளது. 1960 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 86,000 பேர் இறந்துள்ளனர். கிளர்ச்சியாளர்கள் அரச படையினரின் காவலரண்களையும், தகவல் கொடுப்பவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களையும், மற்றும் பிரதான நிலநெய்க் குழாய்களையும் தினமும் தாக்குகிறார்கள். பறன்காபேமெசாவில் வலதுசாரி அணியைச் சேர்ந்த கொலைப்படைகள் இந்தக் கிளர்ச்சியாளர்களை எதிர்த்துச் சண்டை செய்கிறார்கள். நில நெய்க் குழாய்களைக் குண்டுவைத்துத் தகர்த்த இரண்டு இரவுகளுக்குப்பின் துவக்கு ஏந்தியவர்கள் இரண்டு தொழிற்சங்க அமைப்பாளர்கள் உட்பட ஐந்துபேரைக்கொன்றுள்ளார்கள். 1991 ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட தொகையினரான 365 பேருடன் இவ்வாண்டில் முதல் 65 நாட்களில் கொல்லப்பட்ட தொகையினரான 95 பேரை ஒப்பிடுகையிலே நகரத்தில் கொலை செய்யப்படுபவர்களின் தொகை அதிகரித்துவருவதைக் காணக் கூடியதாயிருக்கிறது. இப்படிக் கொல்லப்பட்டவர்களில் அநேகமானோர் கிளர்ச்சியாளர்களின் அனுதாபிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களே என மனித உரிமைக்குழுக்கள் கூறுகின்றன. மாக்சீசவாதிகளுக்குத் தேவையான பணம் கிடைக்கும் வரையும் பழைய கோட்பாட்டில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் வரையும் இந்தச் சமரை இவர்கள் நிறுத்துவார்கள் என எண்ண முடியாது.

★

# எதிர்வரும் தேர்தல்களில் சிறுபான்மையினர்

*-தாரகி - ஐலன்ட் (3.5.1992)*

கூட்டு எதிர்க்கட்சிகளின் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மேதினக்கூட்டம் சமீப காலங்களில் இடம்பெற்றவைகளில் மிகப் பிரமாண்டமானது என்பதில் சந்தேகமில்லை. சிங்கள மக்கள் கூட்டத்திடையே பெருகிவரும் விருப்பமின்மை, முக்கிய எதிர்க் கட்சிகளின் முன்னேற்றமுள்ள ஏற்பாட்டுத் திறன்கள் ஆகியவை தலைநகரில் முன்னெப்பொழுதுமில்லாத அரசியல் செல்வாக்கின் வெளிப்பாட்டிற்கான காரணியாக தோன்றுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி இந்நிலைமையை எப்படி எதிர் கொள்ளும்? எதிரணியிடையேயுள்ள ஒற்றுமையின்மையில் வெகு நாட்களுக்கு தங்கியிருக்க முடியாதென்பது வெளிப்படை, தீர்க் கமான கட்டத்தில், மக்கள் வெறுப்பும் புறகாரணிகளும் அப்ப டியான ஒற்றுமையின்மையை கருத்தில் எடுக்காதுவிடலாம்.இவை யனைத்தும், பொறுமையாக இக்கூட்டத்தைப் பார்த்துக்கொண் டிருந்த பிரேமதாசா சார்ந்த கோட்பாட்டாளனுக்கும் கூட தெரிந்திருக்கும். எதிர்காலத்து அரசியல் ஆற்றல் போக்குகளை தீர்மானிக்கும் தீர்வான களமாக, அடுத்த ஆண்டு மாகாணசபை தேர்தல்கள் அமையும்.

எனவே ஐக்கிய தேசியக்கட்சி தமக்கு சாதகமானதாக கருதப்படும் வாக்கு வங்கிகளை முதலில் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதனுள் அதி முக்கியமானவர்கள் சிறுபான்மையினர்கள். வடக்கு மற்றும் கிழக்கு போர் பெரும் எண்ணிக்கையில் தமிழர் களை, தலைநகரையும் புறநகரப்பகுதிகளையும் நோக்கித் தள் ளியுள்ளது. அடிக்கடி இடம்பெறும் கைதுகள், வானைநோக்கி உயரும் வாடகைகள் நடுவிலும், மேல்மாகாணத்துள் குவியும் தமிழர்களின் எண்ணிக்கை 1990ன்பின் பெருமளவில் கூடியுள்ளது.

இராணுவம் பெரும் தாக்குதலை மேற்கொள்ளும்கட்டத் தில் விடுதலைப் புலிகள் குடாநாட்டின் பொதுமக்கள் நடமாட்ட கட்டுப்பாடுகளை நீக்கினால், மேல்மாகாண வாக்காளர் பட்டி

யல்களில் தமிழர்களின் எண்ணிக்கை வெகுவாக உயரும். வட மாகாணத்திலிருந்துபுலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப் பட்ட முஸ்லிம்கள் கூட கொழும்பு மாநகரிலும் மேற்கு கரை யோர பெருநகர்களிலுமே வெகுவாக குடியமர்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் நிலவும் நிலையற்ற தன்மையையும் சிறுபான்மை சமூகத்தினர்கள் கொழும்பு நோக்கி விரைவதற்கான இன்னொரு முக்கிய காரணமாகும்.

மேற்கு மாகாண வாக்காளர் தொகையில் பெரும் எண் ணிக்கையில் சேர்ந்துள்ள தமிழர்களும், முஸ்லிம்களும் கீழ்க்கா ணும் பிரிவுகளுள் அடங்குவர்: (அ) இடம்பெயர்ந்தவர்கள் (ஆ) பாதுகாப்புக் காரணங்களுக்காக தமது முதலீடுகளை மாற்றி யோர். (இ) வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகைப் பணங்களைப் பெறுபவர்கள். (ஈ) வடக்கு மற்றும் கிழக்கை பயத்தினால் விட்டு வெளியேறிய, புலிகளுக்கு எதிரான குழுக்களில் இங்கிருப்போர் மற்றும் ஆதரவாளர்கள்; (உ) தமிழ் நாட்டிலிருந்து திரும்பும் ஏதிலிகள்.

1958 முதல் தலைநகரில் பல்வேறு தமிழருக்கெதிரான கலவரங்கள் நடந்திருப்பினும் வடக்கேயுள்ள தமிழர்களுக்குமேற்கு கரையோரத்திற்கு குடிபெயரவேண்டிய தீவிர கட்டாயப்படுத் தல் இருக்கிறது. போரின் தீவிரத் தன்மை, உணவு மற்றும் எரி பொருள்களுக்கான கடும் தட்டுப்பாடு,மற்றும் மேலைநாடுகளில் குறைந்துவரும் வேலைவாய்ப்புகள் ஆகியவைகளால், வடக்கு கிழக்கு சாதாரண தமிழருக்கு கொழும்பு கூடிய கவர்ச்சியாக வுள்ளது. அத்தமிழர் நகரில் போதியளவுவருவாய்பெற்று வாழ்ந்து கொள்ளலாம்.

மேல்மாகாணத்திலுள்ள இப் புதிய சிறுபான்மை வாக்கா ளர்களில் பெரும் பகுதியை ஐ.தே.க.ஈர்க்கத் தொடங்கியுள்ளது புதிதாக பதிவாகியுள்ள சிறுபான்மை வாக்காளர் எண்ணத்தில் பெரும்பான்மையினரின் வெறுப்புணர்வின் பயமே மேலோங்கி யுள்ளது.

மேற்கு மாகாணத்தில் சிறுபான்மையினர் விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் போல் காட்டி ஐ.தே.க இவர்களை வென் றெடுக்க முனைந்துள்ளது.

வெள்ளிக்கிழமை ஐ.தே.க யின் மேதினக் கூட்டத்திற்கு, கூட்டு எதிரணியினரின் கூட்டத்திற்கு வந்ததைவிட சராசரியாக கூடிய எண்ணிக்கையில் (அதில் அநேகர் இசைநிகழ்ச்சியை பார்க்க வந்திருந்தாலும் கூட) தமிழர்களும் முஸ்லிம்களும் வந்திருந்தனர்;

எப்படியாயினும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, மாநகரிலும் கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் கூட, சிறுபான்மையோரிடையே தம்மை நிலைநிறுத்திக்கொள்ள ஒரு முகப்பட்ட முயற்சியில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறது, சமீபத்தில் ஒரு தமிழ்ப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த திரு. காமினி திசநாயக்காவின் கருத்துக்கள், சில தமிழ் வட்டாரங்களில் (உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும்) ஐக்கிய தேசிய முன்னணி சிறு பான்மையினருக்கு சாதகமான நிலைப்பாட்டை மேற்கொள்ளக் கூடும் என எண்ணவைத்துள்ளது. ஆனால் தற்போதைய ஐ. தே.க.அரசுமீது சிங்கள மக்கள் கூட்டத்தினரிடையே வளர்ந்து வரும் விரக்தியையே எதிரணி மேதினக் கூட்டம் தெளிவாகக் காட்டிற்று. அரசுக்கு எதிரான பல விடயங்களை மக்கள் பய மின்றி வெளிப்படுத்தினார்கள்.

ஆட்சியினருக்கு எதிரான நிந்தனைகள் நேரடியானதாக வும் தயவுதாட்சண்யமற்றதாகவும் இருந்தன. ஜே வி.பி பயங்கர வாதத்திற்கு எதிரான எதிர்ப்பயங்கரத்தின் ஆற்றல்மிக்க தாக் கம் தென்னிலங்கை மக்கள் மனங்களிலிருந்து அகன்றுவிட்டதாக தெரிகிறது. மக்களின் இந்த எதிர்ப்புணர்வை ஒற்றுமையற்ற எதிரணியினரால் கட்டுப்படுத்த முடியாத இவ்வுந்துசக்தியை வாக்குகளாக்கி பயன்பெற முடியுமா?

இந்த சிங்கள அரசியல் எண்ணப்போக்கில் ஏற்பட்டுள்ள புதிய துணிவுக்கு மேல் மாகாணத்திலுள்ள சிறுபான்மையினரின் வாக்குகளை ஒன்றுசேர்க்கும் ஐ.தே.க.யினரின் தந்திரோபாயம் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தும்?

உயிருள்ள கறுப்பு பூனைகள், மந்திரிக்கப்பட்ட சிம்மாச னங்கள், கழித்துவிடப்பட்ட ரயர்கள் போன்றவைகளை எதிர ணியினரின் மேதின ஊர்வலத்தில் எடுத்துச் சென்றமை தென் னிலங்கையில் உருவாகிவரும் அரசியல் போக்குகளின் பிரதிபலிப் புகளாகும். ★

# பெரிய பணிகள் அதிக செலவினங்கள், குறைந்த மாற்றங்கள்.

(ரைம்ஸ் - 23. 3. 92)

கம்போடிய நாட்டில் சமாதானத்தை உருவாக்கி அந்த நாட்டைக் கட்டி எழுப்ப உதவும் பணி ஐக்கிய நாடுகள் சபைக்குப் பெரும் சவாலாக இருப்பினும், இதைவிடச் சவாலாக அமைந்துள்ள வேறு விடயங்களும் அந்த அனைத்துலகத் தாபனத்துக்கு உண்டு. உலகெங்கணும் பணியாற்றும் ஐ. நா. சமாதானப்படைப் பிரிவினரின் எண்ணிக்கை சென்றவாரம் 11 ஆக உயர்ந்துள்ளது. தனது சேவையை விரிவுபடுத்தியுள்ள ஐ. நா. சபை, அதன் வரலாற்றில் முன்னெப்பொழுதுமில்லாதவாறு 50,000 படைவீரர்களுக்கு அதிகமானவர்களைப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது. தென்கிழக்காசியாவில் தனது பணியை மேற்கொண்டுவரும் அதே வேளையில் 14,000 படைவீரர்களை யூகோசிலாவியாவில் நிறுத்தியதன் மூலம் முதன் முதலாகத் தனது பணியை ஐ. நா. சபை ஐரோப்பாவிலும் ஆரம்பித்துள்ளது. ஏப்ரல் மாத முடிவில் 28 நாடுகளின் 12 படைப்பிரிவுகள் சமாதானப்பணியில் ஈடுபடவிருக்கும் யூகோசிலாவியாவில் ஏற்கனவே சுவிடன் மற்றும் நோர்வே நாட்டுப்படையினர் தங்கள் பணிகளைச் சென்றவாரம் ஆரம்பித்துள்ளனர். மூன்று திங்கள் போர் நிறுத்தம் ஒன்று நடைமுறையில் இருந்தபோதும் குறோசியாவின் மூன்று பகுதிகளில் வாழும் சேர்பியர்களுக்கும், குறோசியர்களுக்குமிடையே வளர்ந்துவரும் பகையுணர்வு எந்நேரத்திலும் வெடிக்கும் அபாயமிருப்பதால், இவ்வபாயத்திலிருந்து சேர்பியர்களைக் காப்பாற்றுவதே சமாதானப்படையின் நோக்கமாயிருக்கிறது.

நவீன ஆயுதங்களைக் கொண்டிராத சமாதானப்படையால், தந்திரத்தாலும், சாதுரியத்தாலுமே சமாதானத்தைக் கொண்டுவரவேண்டியுள்ளது. குறோசியாவில் உள்ளதும், சேர்பியர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதுமான யூகோசிலாவிய சமஷ்டிப்படை வெளியேறுவதை உறுதிப்படுத்துவதும் சேர்பியாவிலும், குறோசியாவிலுமுள்ள தேசிய பாரா இராணுவத்தினரின் ஆயுதங்களைக் களைவதும், ஆறு லட்சம் ஏதிலிகள், (அகதிகள்) பாதுகாப்பாகத் திரும்புவதற்கேற்ற ஆயத்தங்களைச் செய்வதுமே இச் சமாதானப்படையின் முக்கிய பணிகளில் சிலவாகும். ஐ நா சபையின் செயலுரிமைக்கு அப்பாற்பட்ட விடயமான், குறோசியாவின் எல்லைக்குள் வசிக்கும் சேர்பியர்களின்

இறைமைதான் இதற்கு உண்மையான தடைக்கல்லாக உள்ளது. ஐரோப்பிய சமூகத்தின் மேற்பார்வையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் இணக்கப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளிலேயே இதற்கான முடிவு தங்கியுள்ளது, எனப் 'பெல்கிரேட்டிலுள்ள மேற்கு நாட்டு இராசதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

லெபனானிலிருந்து அங்கோலாவரையும், அங்கோலாவிலிருந்து எல். சல்வடோர் வரையிலான இடங்களிலும் மற்றும் உலகெங்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒன்பறு இடங்களிலும் பார்க்கக் கம்போடியாவிலும், யூகோசிலாவியாவிலும் ஐ. நா. சபையின் பணி முக்கியமானதாயிருக்கின்றது. ஐ. நா. சபையின் பொறுப்புக்கள் அதிகரித்துக் கொண்டு வருகையில் அந்தப் பெரும் பாரத்தைத் தாங்கக்கூடிய நிதிவலு அதற்கு இருக்கின்றதா என்பதைப் பற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை. கம்போடியாவில் நிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப்படையின் செலவீனங்களுக்கு 1.9 பில்லியன் டாலர்கள் தேவையென மதிப்பிடப்பட்டிருக்கும் அதேவேளையில் யூகோசிலாவியாவுக்கு 600 பில்லியன் டாலர்கள் எதிர்வரும் ஆண்டில் தேவைப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகெங்கணுமுள்ள தனது சமாதானப்பணிக்குச் சென்ற ஆண்டு ஐ. நா. சபை செலவிட்ட தொகையைப் போன்று மூன்று மடங்கு தொகையைக் கம்போடியாவுக்கும், யூகோசிலாவியாவுக்கும் மாத்திரம் செலவிடவேண்டியுள்ளது. குறுகிய காலமான இரண்டு ஆண்டு காலத்தில் நபீபியாவில் 1990 ல் சமாதானத்தை ஏற்படுத்தியது போல் மற்றைய நாடுகளிலும் ஏற்படுத்தலாமென எதிர்பார்க்க முடியாதெனவும் சில நாடுகளில் நிரந்தரமாகவே சமாதானப்படை தங்கியிருத்தல் வேண்டுமெனவும் சில பார்வையாளர்கள் அச்சமடைகின்றனர். உதாரணமாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் 43 ஆண்டு காலத்தையும் சைப்பிரசில் 28 ஆண்டு காலத்தையும் சமாதானப் படை செலவளித்துள்ளது.

ஐ. நா. சபை தனக்குத் தேவையான நிதியைப் பெறும் முயற்சியை இப்படியான நிலைமை மேலும் கடினமாக்கியுள்ளது. தேசியப் பொருளாதாரத்தினடிப்படையில் சமாதானப் பணிக்கென அமெரிக்கா அதனது செலவில் 30% விகிதத்தை வழங்க வேண்டும். ஆனால் இப்பொழுதும் 141 மில்லியன் டாலர்களை ஐ. நா. சபைக்கும் பாக்கியாகச் செலுத்த வேண்டியுள்ளது. பொருளாதாரப் பின்னடைவு நிலவுவதன் காரணமாகவும் அண்மையில் தேர்தல் நடைபெறவிருப்பதன் காரணமாகவும் அமெரிக்கக் காங்கிரஸ் சமாதானப் படைக்குத் தேவையான நிதி

வழங்க முடியாத நிலையில் இருப்பதாக திரு. புஷ் அவர்களின் நிர்வாகத்துக்கு எச்சரித்துள்ளதால், அமெரிக்கா இந்த விடயங்களில் ஒதுங்கி இருக்கின்றது. சிதைந்துபோன சோவியத் ஒன்றியத்தின் இடத்தை வகிக்கும் தற்போதைய ருசியா பொருளாதார இழி நிலையில் இருப்பதால் இந்தப் பணிக்கென அந்நாட்டினாலும் நிதியுதவி செய்ய இயலாது.

பரந்த நோக்கில் இந்த விடயத்தை அணுகாது உதாசீனப்படுத்துவதால் இப்படியான நிலை தோன்றியுள்ளதாக ஐ. நா. சபையிலுள்ள அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் குறை கூறுகின்றார். தங்களது பாதுகாப்புச் செலவீனத்துக்கென அதிகளவு பணத்தைச் செலவழிக்கும் நாடுகளுக்கு சமாதானப்படைக்குச் செலவழிப்பதும் அதற்காகவென்பது இன்னும் புரியவில்லை என அவர் மேலும் கூறுகின்றார். அமெரிக்க நிர்வாகமும், உலகத்திலுள்ள மற்ற அரசாங்கங்களும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

## ஐ. நா. சபையின் சமாதானப்பணி நடவடிக்கைகள்

| நாடு | ஆண்டுச் செலவு (பில்லியன் டாலர்கள்) | படையினர் | ஆரம்ப திகதி |
|---|---|---|---|
| கம்போடியா | (1) 1,900 | 22,000 | 1992 |
| யூகோசிலாவியா | 600 | 14,000 | 1992 |
| மேற்கு சகாரா | 177 | 2,700 | 1991 |
| லெபனான் | 157 | 5,900 | 1978 |
| அங்கோலா | (2) 102 | 440 | 1991 |
| எல். சல்வடோர் | (3) 69 | 1,000 | 1991 |
| ஈராக் - குவைத் | 65 | 540 | 1991 |
| கோலான் மலைப்பிரதேசம் | 42 | 1,300 | 1974 |
| சைப்பிரஸ் | 31 | 2,200 | 1964 |
| அராபியா/இஸ்ரேல் | 31 | 300 | 1948 |
| இந்தியா / பாக்கிஸ்தான் | 5 | 40 | 1949 |

1 – 15 மாதச் செலவு
2 – 17 மாதச் செலவு
3 – 16 மாதச் செலவு

# வெலிக்கந்தையில் குரூரம்

— சமிந்திரபேடினன்டோ (ஐலன்ட்-3-5-1992)

விடுதலைப் புலிகள் கடந்த புதன்கிழமை 29ந் திகதி வெலிக் கந்தையிலுள்ள அலிஞ்சிபோத்தனை கிராமத்தைத் தாக்கி 50க்கு மேற்பட்ட முஸ்லீம்களை கொலை செய்தும் அந்த அளவிலோ அதற்குக் கூடுதலானோரை காயப்படுத்தியும் உள்ளனர்.

அலிஞ்சிபோத்தனை தாக்குதல் தமிழ் முஸ்லீம் மக்களிடையே புதிதாக ஏற்படும் இரத்தக் கறைபடிந்த வன்முறையின் தொடக் கத்தைக் காட்டுகிறது. ஆத்திரம் கொண்ட முஸ்லீம்கள் அப்பகுதி யிலுள்ள தமிழ் கிராமங்களைத் தாக்கினார்கள். 36 மணித்தியா லங்களுக்குள் தொடர்ச்சியாக நடந்த தாக்குதல்களாலும் எதிர்த் தாக்குதல்களாலும் 130க்கு மேற்பட்ட அநேக பெண்களும் குழந் தைகளும் அடங்கிய குடிமக்கள் காடைக் கும்பல்களால் வெட்டி வீழ்த்தப்பட்டனர்.

வன்முறை அரசியலால் ஆண்டுக்கணக்காக பாதிக்கப்பட்ட முழுத்தேசமும் இப்படுகொலைகளின் கொடூரத்தால் அதிர்ச்சிக் குள்ளாயிற்று. ''கடந்த சில ஆண்டுகளாக, போரில் ஈடுபடாத வர்கள் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்படுவது ஒரு வழமை யாக ஆகிவிட்டது'' என்று கொழும்பிலுள்ள ஏதிலிகளுக்கு உதவி செய்யும் அன்னியநாட்டவர் கூறினார்.

புலிகள், முஸ்லீம் கும்பல்கள் ஆகிய இரு பகுதியினரும் ஆயுத மற்ற குடிமக்களைக் கொலை செய்வதிலும் மற்றவர்களுக்கு உரித்தான சொத்துக்களை அழிப்பதிலும் வெற்றிகண்டுள்ளார் கள். இதைப்பற்றிக் கேட்டபோது அப்பகுதியிலுள்ள பாதுகாப் புப்படை மேலாளர் ஒருவர், ''கொலைகளினதும் அழிவுகளினதும் தெளிவான விபரங்களைக் கூறி அவற்றை நேரில் பார்த்தால்தான் அவைகளின் பரிமாணங்கள் விளங்கும் என்று கூறினார். போர் பட்டறிவால் எதையும் தாங்கக் கூடிய மனம் கொண்ட போரில் ஈடுபட்டுள்ள துருப்புக்கள்கூட இதைப்பார்த்து குழப்பமும் அதிர்ச் சியும் அடைந்தனர்'' என்று அவர் மேலும் கூறினார்.

தமிழ் முஸ்லீம் கிராமங்கள் இரண்டுமே இத்தாக்குதல்களா லும் எதிர்த்தாக்குதல்களாலும் அழிவுற்றுள்ளன.

வெலிக்கந்தையில் முஸ்லீம்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவதற்கு புலிகள் தீர்மானம் எடுத்தது அப்பகுதிகளில் தனித் தமிழ் எல்லைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் முக் கிய வளர்ச்சிக் கட்டம் என பாதுகாப்புப்படை மேலாளர்கள் விளக்கினார்கள். கடந்த சில ஆண்டுகளாக பொலநறுவை நிர் வாகப் பிரிவில் அரசினால் அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்ட மான வெலிக்கந்தை கடும் தாக்கத்திற்குள்ளாகி வருகிறது. புலி களின் பயமுறுத்தல்களுக்கு ஆளாகியுள்ள கிழக்கு அரங்கிலும் வடமத்திய பகுதியிலுள்ள அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட குடி யேற்றங்களில் வெலிக்கந்தையும் ஒன்றாகும்.

1984லின் பிற்பகுதி தொடக்கம் இக்குடியேற்றங்களும் கிரா மங்களும் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டுவருகின்றன. ஆயிரக் கணக்கில் இல்லாவிட்டாலும் நூற்றுக்கணக்கில் மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இப்பகுதிகளில் உள்ள குடியேற்றங்களை சிங்கள மக்கள் விட்டுச் செல்லவேண்டியதாயிற்று. ஆனால் புலி களின் இந்நடவடிக்கைகளில் வெலிக்கந்தை உட்பட மகாவலி பிர தேசங்களில் இருந்த முஸ்லீம்கள் பாதிக்கப்படவில்லை. கிழக்கி லுள்ள முஸ்லீம்கள் புலிகளால் பெரும் பாதிப்பிற்குள்ளானார் கள். சென்ற வாரம் புலிகளின் தாக்குதலுக்கு வெலிக்கந்தையி லுள்ள முஸ்லீம்கள் உள்ளானார்கள்.

வெலிக்கந்தையிலுள்ள சிங்களவர்களையும் முஸ்லீம்களையும் வெளியேற்றியே தீருவோம் என்று புலிகள் தெளிவாகக் காட்டி யுள்ளனர். எதிர் வரும் வாரங்களில் பதவியா - வெலி ஓயா பிராந்தியத்தில் சிங்கள முஸ்லீம்களுக்கெதிராக புலிகள் தாக்கு தல்களை நடத்துவார்கள் என்று மேலாளர்கள் எதிர்பார்க்கி றார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து சிங்களவர்களும் முஸ்லீம்களும் விரட்டப்பட்டுவிட்டார்கள். இவ்விரு சமூகத்தின ரும் கிளிநொச்சியிலிருந்தும் முல்லைத்தீவிலிருந்தும் வெளியேறி விட்டார்கள். புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங் களில் சிங்களவர்களோ முஸ்லீம்களோ இல்லை.

1990 பிற்பகுதியில் முஸ்லீம் சமூகத்தினரை வடக்கிலிருந்து வெளியேறுமாறு புலிகள் கூறினார்கள். படுகொலைகள் இடம் பெறலாம் எனப்பயந்து அவர்களும் வெளியேறினார்கள். அர சாங்கம் திரும்பத் திரும்ப வேண்டிக்கொண்ட போதும் மேலதிக பாதுகாப்புக்கோரி திரும்பச் செல்வதற்கு மறுத்துவிட்டார்கள்.

பாதுகாப்பு படையினரையும் காவல்துறையினரையும் எதிர் கொள்வதற்கு புலிகள் முடியாதிருக்கிறார்கள் என்று கூறுபவர்

கள் வடகிழக்குப் பிராந்தியத்தின் மீது ஆதிக்கத்துக்கான போர் இன்னும் முடிவுறவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அலிஞ்சிபொத்தானை கிராமத்தைப் புலிகளின் தாக்குதலுக்கெதிராக பாதுகாப்பதற்கென விடப்பட்டவர்கள் என்று கூறப்படும் காவல்துறையினரும் முஸ்லீம் ஊர்காவல் படைக் குழுக்களும் தமது ஆயுதங்களையும் கைவிட்டு விட்டு ஓடினர் என்பது பற்றி அரசு விசாரணை செய்ய வேண்டும். ''அலிஞ்சிப் பொத்தானையில் என்ன பிழை நடந்தது''? என்றுஓர் எதிரணி அரசியல்வாதி கேட்டார்.

ஆத்திரங்கொண்ட முஸ்லீம் கிராமவாசிகள் தமதுகோபத்தை திர்க்கும் வகையில் அயல் தமிழ் கிராமங்களை தாக்கியபோது அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? தமிழர்களும் முஸ்லீம்களும் ஒருவரையொருவர் கொன்று கொண்டிருக்கும் போது மேலாளர்கள் எங்கே சென்றிருந்தனர்? யார் பொறுப்பாளி இவ்வாறான கேள்விகளுக்கு உடன் பதில்கள் தேவை.

காவல்துறையினருக்கு எதிரான புலிகளின் கொடூர தாக்குதலினால் அவர்கள் காடுகளுக்குள் தஞ்சமடைந்தார்கள் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன. நித்திரையில் இருந்த முஸ்லீம்களின் மீது புலிகள் பாய்ந்தபோது அவர்களைக் காப்பாற்ற ஒருவரும் இல்லை. அவர்கள் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டார்கள்.

அயல் கிராமத்திலுள்ள தமிழர்களுக்கும் இதுவே நடந்தது. இப்பிராந்தியத்தில் மேலோங்கிய நிலையை அடைவதற்கு மக்கள் கூட்டங்களை இலக்காக தாக்குவது புலிகளின் தீர்க்கமான தந்திரோபாயமாக உள்ளது. அவர்களின் அணுகுமுறையின் ஓர் பகுதியாக தனிக்கிராமங்கள் இராணுவநிலைகள் வழமையான ரோந்துகள் போன்றவற்றின் மீது பிரமிக்கத்தக்க வகையில் துணிச்சலாகவும் வெற்றிகரமாகவும் தாக்குதல்களைச் செய்கிறார்கள்.

அரச பாதுகாப்புப் படையினரும் தமிழரல்லாதோரும் புலிகளின் தாக்குதல்களால் பெருமளவு பாதிப்புக்களை அடைந்துள்ளார்கள். புலிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டாலும் தாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். பாதுகாப்புப் படையினர் மீதும் அரசு மீதும் அழுத்தங்களை அதிகரிப்பதற்கு ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன. புலிகள் புதிய தாக்குதலுக்கு ஆயத்தமாக இருப்பதால் வடகிழக்குப் பிராந்தியத்தில் கிடைத்த வெற்றிகள் பயனற்று போய்விட்டது என்று சிலர் நம்புகிறார்கள்.

ஆயுதப்படையினர் கூட்டாக யாழ்ப்பாணத்தைத் தாக்கு வார்கள் என்ற அச்சத்தால் புலிகள் தாங்களும் ஓர் தாக்குத லுக்கு ஆயத்தமாகி, அதன் மூலம் ஆயுதப்படையினரின் தலைமையை புலிகளின் உடனடித்தாக்குதலுக்கு முகங்கொடுக்குமாறு செய்வதன் மூலம் இராணுவத்தின் திட்டங்களைக் கைவிடச் செய்கிறார்கள். புலிகள் தமது தாக்குதலின் ஒரு கட்டமாக கிழக்கின் பதவியா, வெலி ஓயா வெலிக்கந்தை பகுதிகளில் மாமூல் நிலையை நிலை குலையச் செய்வார்கள் என்று பலர் எண்ணுகிறார்கள். வெலிக்கந்தையில் சென்ற புதன்கிழமை நடந்தது புலிகளின் தாக்குதலின் தொடக்கமாயிருக்கலாம்.

மேதினம் கொண்டாடுவதற்கு தயாராகிக் கொண்டிருந்த அரசு வெலிகந்தையில் நடந்த பயங்கர கொலைகளினால் ஏற்பட்ட நிலைமையை மதிப்பீடு செய்ய ஒரு அமைச்சர் குழுவை அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயிற்று. 130 க்கு மேலான சாவுகளுடன் வெலிக்கந்தை வன்செயல், ஏற்கனவே 10 இலட்சம் அளவான மக்கள் வாடிவதங்கி இருக்கும் ஏதிலிகள் தங்ககங்களுக்கு மேலும் ஏதிலிகளை வரப்பண்ணியுள்ளது.

இரு சமூகத்தினரிடையே ஏற்பட்டுள்ள பகைமை, தமிழர்களிலும் பார்க்க முஸ்லீம்கள் கூடியளவில் வாழும் கிழக்கிலும் பரவலாம் என்று சில வட்டாரங்கள் நம்புகின்றன.

தமிழ்க் கிராமங்களை தாக்கும் முஸ்லீம் இளைஞர்களுடன் நூற்றுக்கணக்கான முஸ்லீம் ஊர்காவல் படையினர் சேர்வார்கள் என்பது திண்ணம். அதன் காரணமாக முஸ்லீம்களுக்கு மேலும் தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு புலிகள் தாக்குதல்களை செய்யலாம்.

வெலிக்கந்தை, பதவியா வெலி ஓயா ஆகிய இடங்களில் மாமூல் நிலைமையை சீர்குலைத்து, இப்பகுதிகளில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தும் புலிகளின் நடவடிக்கைகளை தடை செய்ய முடியாமல் இருப்பது புலிகளுக்கு ஓர் தீர்க்கமான வெற்றியே என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அரசின் மீது புலிகள் மெதுவாக ஆனால் கணிசமான கூடிய அழுத்தத்தை ஏற்படுத்துகிறார்கள். கிழக்கு அரங்கு நடவடிக்

கைகளில் அரச கட்டுப்பாடு உண்டாக்கப்பட்டுள்ளதென்று திரும்பத் திரும்பக் கூறினாலும் புலிகள் பிரமிக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்து அரசுக்கு அது கூறுவது சரியல்ல என்று எடுத்துக் காட்டுகிறார்கள் என்று சில பார்வையாளர் குறிப்பிடுகிறார்கள்.

புலிகள் பலமான நிலையில் இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை தெளிவாக வெளிவரும் இந்நேரத்தில் வெலிக்கந்தை வன்முறை நடந்துள்ளது. ★

ஒரு தவளைக்கு எது
அழகாகத் தோன்ற
முடியும். துருத்திக்
கொண்டுள்ள கண்கள்,
அகன்ற வாய், மஞ்சள் திற
தொப்பை, புள்ளியுள்ள
முதுகு, இவற்றைக்
கொண்ட பெண்
தவளைதானே.

— வால்டேர்.

# கோபசெவ் தான் சீர்குலைப்பதனை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை

## சோவியத் யூனியனின் கடைசித் தலைவரின் சாதனைகளும் குறைபாடுகளும் பற்றி

- மைக்கேல் டொய்ஸ்

*கார்டியன் வீக்லி - 22-12-1991*

*மக்கள் கருணையை உணர்வதில்லை நீர் நன்மை செய்தும் ஒருவரும் நன்றி சொல்வதில்லை.*

*(அலெக்சாண்டர் புசுகின் கவிதை)*

*வரலாறு எவ்வகையில் மிக்கேல் செகேவிச் கோபசெவ்வை மதிப்பிடும்? 20ஆம் நூற்றாண்டில் முகிழ்ந்த குறிப்பிடக்கூடிய தலைவர்களில் - லெனின், கிட்லர், ரூஸ்வோல்ட், சேர்சில், மாசேதுங் சோவியத் பொதுவுடமைக் கட்சியின் செயலதிபரும் சோவியத் குடியரசின் கடைசி ஜனாதிபதியுமானவர். ஓர் மிக்க புரியாத புதிரே.*

*அவர் பொதுவுடமைத் தத்துவத்தைச் சீர்குலைத்த பொதுவுடமைவாதி, தமது சீர்திருத்தங்களாலேயே அடித்து செல்லப்பட்ட சீர்திருத்தவாதி. உலகின் கடைசி பல் இன பேரரசு பிரிந்து போவதற்கு ஒப்புதல் தந்த சக்கரவர்த்தி. சிலரின் பார்வையில் அவர் சுதந்திரத்தை வழங்கியவர், மற்றவர்களுக்கு பழைய அடக்குமுறையின் காவலன்.*

*கோபசெவ் இவ்வாரம் பேரரசு என சொல்லப்பட்ட பேரரசற்ற ஒன்றிற்கு தலைவராக இருந்தார். சோவியத் குடியரசுகளின் தலைவர்கள் புதிய சுதந்திர நாடுகளின் பொதுநல வமைப்பை நிறுவும்போது அவரை அசட்டை செய்தனர். அவரின் சொந்த மக்களே அவரை விரும்பவில்லை. நாட்டில் தாண்டவமாடும் பொருளாதார ஒழுங்கின்மைக்காக பலர் நிந்தித்தார்கள் முன்னாள் சகாக்கள் அனைவராலும் அவர் பதவி விலக உந்தப்பட்டார். அத்துடன் அவரிடம் இச்சோவியத் சகாப்தத்தின் இறுதிக் கவலைக்கிடமான கட்டத்தை மாற்றுவதற்கு ஆற்றல் எதுவும் தென்படவில்லை.*

வருங்கால தலைமுறைகள் கோபசெவ்வை அவரின் சுய மான கருத்துக்களினின்று மாறுபட்டே கணிக்க ஏதுண்டு; சோவியத் பொதுவுடமைவாதத்தின் அழிவு மற்றும் உலகின் இரண்டாவது வல்லரசின் மீட்சி பெறமுடியாத மெலிவு 1985-ல் அதிகாரத்திற்கு வந்தபோது அவர் பலம்மிக்க சோவியத் ஒன்றியத்தின் சோசலிச அமைப்பிலும் உயிர் குன்றிய பொருளாதாரத்திலும் புத்துயிரும் உத்வேகமும் ஊட்டுவதாக வாக்களித்தார். 1991 டிசெம்பரில் அவர் பதவி விலக ஆயத்தமாகும் போது சோவியத் ஒன்றியமும் இல்லை, சோசலிசமும் முழுமையாக செல்வாக்கு இழந்துள்ளது பொருளாதாரம் எப்பொழுதும் இல்லாதவாறு சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

தென் ருசிய கிராமத்து சிறுவன், பொதுவுடமை அதிகார அமைப்பின் ஊடாக வளர்ந்து கிரெம்ளின் மாளிகையின் தலைவரா்க வந்தவர், பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவர உதவியவராகவும் ஓர் பாரிய நாட்டிற்கு பேச்சுரிமை திரும்ப வழங்கியவராகவும் நினைக்கப்படுவார். ஒரு விந்தையான வரலாற்று இடைவேளை தவிர ருசியா எப்பொழுதுமே தணிக்கை மிக்க இரகசிய நடவடிக்கைகள் உள்ள, தீரமிக்கவர்களை தவிர மற்றெல்லோரையும் அனுசரணைவாதிகளாக்கிய நாடாகவே இருந்துள்ளது. எல்லோருக்கும் தங்கள் முறைப்பாடுகளையும் வெகு முரண்பட்ட கருத்துக்களையும் தெரிவிக்க வழிவகுத்ததன் மூலம் கோபசெவ் தாமே அம்மாற்றங்களால் ஒதுக்கப்பட்டார்.

''பல வேறுபட்ட உணர்வுகள், கோப்பச்செவ்வை நினைக்கையில் என்னுள் கிளர்ந்தெழுகின்றன.'' என்கிறார் பக்க சார்பற்ற ருசிய சட்ட இயற்றுநர் அனடொலி மெட்வேடேன். கடைசி பொதுவுடமை அதிபரின் சீர்திருத்தங்கள் இன்றி இச்சட்ட இயற்றுநருக்கு அரசியல் வாழ்வே இல்லாதிருந்திருக்கும் அவர் மேலும் சொல்கிறார்: ''அவரே எம்மைச் சர்வாதிகார ஆட்சியிலிருந்து விடுவிக்க தொடங்கி பொதுவுடமைவாதத்தின் முடிவிற்கும் வழிசமைத்தார், ஆனால் அவரின் தீர்மானமற்ற சஞ்சலமற்ற போக்கினால் எமது பொதுநாட்டு நலனே பலமிழந்தது''.

கோப்பசெவ்வே ஓர் மர்மம். அவர் ஓர் சீர்திருத்தவாதியா? அல்லது அழிப்பவரா? நோபல் சமாதான பரிசிற்கு ஏற்றவரா அல்லது பூமியின் ஆறில் ஒரு பங்கைக் கொண்ட நாட்டைச் சிதைத்தவரா என்பது விளங்கவில்லை என்கிறார் ஓர் முன்னணி சோவியத் விமர்சகரும் கடைசியாக சோவியத் ஜனாதிபதியைப்

பேட்டிகண்ட எழுத்தாளர்களில் ஒருவருமான யூரி ஸ்செகொக்கின். ''முரண்பாடுமிக்க பொதுவுடமைவாதத்தையும் ஜ நாயகத்தையும் இணைக்க முயன்றார். அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்கினார். அவர்களோ அவரை துரத்தினார்கள்.''

ஒருவேளை கோப்பச்செவ்வின் புதிருக்கான சிறப்பான விளக்கம் அவரின் அபூர்வமான வரலாற்று நிகழ்விலே இருக்கலாம். லெனினாலும், ஸ்டாலினாலும் நிறுவப்பட்ட சர்வாதிகார முறைமை கவிழ்ப்பதற்காக, வரலாற்றினால் தெரிவான முகவர் இவரே, கிரெம்ளின் சதியாலோசனைகளில் கைதேர்ந்த இவர், இப்பயங்கர முறைமையை அழிப்பதற்கு, தனது உண்மை நோக்கங்களை பொதுவுடமை வாக்குவன்மை மூடுபனியில் மறைத்து எதிர் அணிகளிடையே செயற்பட்டார். சில சமயங்களில் தமது புரட்சிகர நடவடிக்கைகளின் விளைவுகளை அவர் நமக்குதாமே ஏற்றுக்கொள்ளாதது போல் தோன்றிற்று. இலக்கிய சஞ்சிகை ஒன்றில் வெளியான செவ்வியில் ஸ்செகொக்கியிடம் கொப்பசெவ் சொன்னார்: ''எனக்கு ஆட்சி அமைப்பை உள்ளிருந்தே தெரியும், ஏனெனில் பிராந்திய கட்சிச் செயலாளராகப் பத்து ஆண்டுகள் செலவிட்டிருந்தேன். கட்சியினதும் கே ஜீ பி. (K G.P.) பாதுகாப்பு காவல்துறையினதும் ஆற்றலை நான் அறிவேன். அத்துடன் நான் இப்பொழுது தெரிவிப்பதை அப்பொழுது சொல்ல முடியவில்லை அவர்களை நான் திறமையைப் பயன்படுத்தி வெல்ல வேண்டியிருந்தது'''

''கோபசெவ்வுக்கு ஏமாற்றுவதை தவிர வேறு தெரிவு இருக்கவில்லை'' முதலே அவர் தன்னை வெளிப்படுத்தியிருந்தால் கடும் போக்காளர்கள் கூடிய தீர்மானத்துடன் நடந்திருப்பார்கள். சென்ற ஆகஸ்டில் இடம்பெற்ற சதிமுயற்சியில் நடந்து கொண்டதைப் போல் நடந்திருக்கமாட்டார்கள். அவர்கள் இவரைத் தமது பக்கத்துக்கு உந்தியெடுத்து சேர்த்துக் கொள்ளலாம் என நம்பினார்கள். இவரின் ஏமாற்று பாரிய இரத்தக் களரியிலிருந்து எம்மை காப்பாற்றிற்று'' என்றார் முன்னணி அரசியலமைப்பு சட்ட அறிஞர் அலெக்சாண்டர் எம் யாகொங்லெவ்.

கோபசெவ்வின் பலமும் பலவீனமும் அவரின் இணக்கம் காணும் தன்மையும், பட்டும் படாமல் இருக்கும் தன்மையுமாகும் அவரின் சமயோசித நடைமுறைகள் பல சந்தர்ப்பங்களில் மீண்டும் கடின போக்கு பொதுவுடமை ஆட்சி ஏற்படுத்துவதில் இருந்து நாட்டைக் காப்பாற்றியது. ஆனால் அவர் பழைமையி

லிருந்து விடுபட தீர்க்கமான முடிவை எடுக்காததினால், பயன் மிக்க பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தும் தருணத்தை இழந்தார். அரசியல் துறையில் கிடைத்த பெறுபேறுகள் பொருளாதாரத்தில் சீரழித்தன. இப்படியான ஜனாதிபதி கட்சி கட்டுக்கோப்புடன் விளையாடுகையில், பொருள்வளமும் அரசும் துரித பாதிப்படைந்தன. இறுதியாக இவை அவர் புனர்நிர் மாணிக்க உறுதி சொன்ன வல்லரசையும் அவரின் பதவியையும் காவு கொண்டன.

மைக்கேல் கோபசெவ்வை புரிந்து கொள்வதற்கு அவர் தோன்றிய காலத்தை உணர்ந்து கொள்ளவேண்டும். போர், பசி, பயங்கரவாதத்தை அனுபவித்த தலைமுறையின் குழந்தை அவர். ஒரு மெருகு ஊட்டப்படாத பொதுவுடமை இலட்சியம் கொண்டிருந்தது. கவ்காஸ்சஸ் மலைகளின் வளமிக்க ஸ்ராவ் ரொப்பல் விவசாய பிரதேசத்தில் அவர் 1931 ஆம் ஆண்டு பிறந்தார். அக்காலத்தில் ஸ்டாலினின் கொலைக்கள நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தில் இருந்தன. கோடிக்கணக்கில் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டனர். சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.எஞ்சியோர் கூட்டுப்பண்ணைகளில் குவிக் கப்பட்டனர்.

பல ஆண்டுகளாக கோபசெவ் இக்காலத்தைப் பற்றியோ தனது குடும்ப பின்னணியின் கதி பற்றியோ? பேசவில்லை. ஓர் பாட்டனார் 1937 இல் ஸ்டாலினின் பொதுவுடமை மேலாளர் களை களை எடுத்தபோது கைது செய்யப்பட்டார். இன்னொரு பாட்டனார் வசந்தகால விதைப்புத் திட்டத்தை நிறைவேற்றாத தற்காக சைபீரியா அனுப்பப்பட்டதையும் சமீபத்திலேயே வெளி யிட்டார். 1933 ஆம் ஆண்டின் கடும் பஞ்சத்தில் கோபசேவ்வின் மூன்று மாமன் மாமிகள் பட்டினியால் இறந்தனர்.

விட்டற்றொன்நாகசற்ற என்ற ஏட்டிற்கு அளித்த பேட்டியில் கோபசெவ் கொடூர காலகட்ட உணர்வுகளே என்னை இம்முடிவுக்கு உந்தின என்று தமது சீர்திருத்த நடவடிக்கைக ளுக்கான அடிதளத்தை விளக்குகிறார். ''இவை எல்லாம் என்னுள் உள்ளன. எல்லாம் மாறவேண்டும் என்ற மனோதிடம் இல்லாதிருந்தால் எமக்கு முன்னிருந்த தலைவர்கள் போல் நானும் நடந்திருப்பேன் பிரேஷ்நேவ் போல் பத்தாண்டுகள் சக்கரவர்த்திபோல் வாழ்ந்திருப்பேன் எனக்குப்பின் என்னதான் நடந்தால் என்ன என்றிருந்திருப்பேன். வரலாற்றில் ஓர் மனிதன் இவ்வளவு செயலுரிமைகளைப் (அதிகாரத்தை) பெற்று பின் துறந்ததாக சான்று உண்டா?

''எல்லையற்ற கொடுமையும் மனித உயிர்களுக்கு மதிப்புத் தராத தன்மையும்'' என கோபசெவ்வால் சொல்லப்பட்ட போதும் பொதுவுடமையின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என அவர் நம்பினார். கோபசெவ் உட்பட கோடிக்கணக்கான மக்களுக்கு, பொதுவுடமை கட்சி தங்கள் தனிப்பட்ட முன்னேற்றத்தின் கருவியாயிற்று. அவர்களுக்கு அவ்வமைப்பில் உள்ள பாரிய குறைகள் தெரியாமல் இல்லை. அதே சமயம் போருக்குப் பிந்திய புனர்நிர்மாண அளவுகள் அவர்களைக் கவர்ந்தன. 1953 ஸ்டாலின் மறைந்த பின் அவரின் வாரிசு நிக்கிதகுருசேவ், மனிதமுகத்தையுடைய சோவியத்தை கனவு காண ஊக்குவித்தார்.

''அறுபதுகளில் குசேவின் 'தளர்த்தல்' என்றும் கூறப்படும் காலகட்டத்தில் பராயமடைந்த தலைமுறையினரோடு கோபச்சேவ் தன்னை இனம்கண்டு கொண்டார். (1964ல் குருசேவ் வெளியேற்றப்பட்டாலும் அவரால் எடுக்கப்பட்ட சில ஒரளவுத்தாராளக் கொள்கைகள் செக்கோசிலோவாக்கியாவை 1968ல் சோவியத் ஆக்கிரமிக்கும்வரை நீடித்தன) அத்தலைமுறையினர் பொதுவுடமையை ஆதரித்த போதும் அதில்உள்ள குறைகளை கண்டித்தும் வந்தனர். பிரசுநோவின் சீர்கெட்ட காலத்திற்கு முன்பு பொதுவுடமையில் நம்பிக்கை வைத்திருந்த தடைசித்தலை முறையினராக அவர்கள் இருந்தார்கள்.

''அத்தலைமுறையினர் தங்கள் நாளாந்த பட்டறிவில் கண்டுவரும் சமதர்மம் இல்லாத வேறுவகை வாதத்தில் நீண்டகாலமாக நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தக்கூடிய சனநாயக அமைப்பு ஒன்றை விரும்பினர். 1968ன் பின் பலர் இவ்எண்ணத்தில் விரக்தியுற்றனர். ஆனால் கோபசெவ் தம் கொள்கைகளில் வலுவாக நின்றார் என்கிறார். அவருடன் பொதுவுடமை வாலிப முன்னணியில் பணியாற்றிய அரசியல் விமர்சகர் லென் காபின்ஸ்கி.

கோபசெவ் திரும்பத் திரும்ப சமதர்மவாதத்திலுள்ள தம் நம்பிக்கையை அழுத்திக் கூறிவந்திருக்கின்றார். அவை அவரின் மனோதத்துவ ஈடுபாடா, அரசியல் சந்தர்ப்பவாதமா அல்லது வெறும் உணர்ச்சிவச பிடிவாதமா என்பதைக் கூறுவது கடினம். ஓர் ஆண்டின்முன் நடைபெற்ற அறிவாளர்கள் கூட்டத்தில் அவர் சமதர்மவாதத்திற்கு துரோகமிழைப்பது தகப்பனுக்கும் பாட்டனுக்கும் துரோகம் இழைப்பதை ஒக்கும் என்றார். ''சமதர்மவாத கருத்தில் ஈடுபாடுமிக்க பொதுவுடமைவாதி என சொல்

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

வதற்கு நான் வெட்கப்படவில்லை. நீண்ட காலத்திற்கு முன்பு செய்த இறுதித் தீர்வு இது'' என அவ்வறிவாளர்களிடம் கூறினார்.

முன்பு பிராந்திய கட்சித் தலைவராயிருந்த ருசிய அதிபர் போறிஸ் யெல்சின் போலல்லாமல், கோபசேவால் வாழ்ந்த சமுதாய சூழலிலிருந்து விலகிக்கொள்ள முடியவில்லை. உண்மையான, மக்களால் விரும்பப்பட்ட ஆணையினால் அல்லாமல் கட்சித் தலைமையிலிருந்தே தமது அரசியல் செயலுரிமையை பெற்றுக்கொண்டார். ஆகஸ்ட் சதிமுயற்சிவரை அவர் கட்சிக்கு உண்மையானவராகவே நடந்து கொண்டார். சதிமுயற்சியின் போது பெரும்பான்மைக் கட்சித் தலைமை அவரைக் காட்டிக் கொடுத்தபோதும் அவர் வார்த்தைகள் தொடர்ந்தும் கட்சியின் ''சமதர்மவாத இலட்சியத்தையே'' பற்றியிருந்ததையே எடுத்துக் காட்டியது.

இறுதியில் கோபசெவ் கட்சியில் வைத்திருந்த விசுவாசமே பெரும் பிழையாயிற்று ஏனெனில் பெரும்பாலான சோவியத் மக்களின் கணிப்பில் கட்சி தானாகவே வலுவிழந்தது. இதனால் வழமையில் இருந்து விடுபட வேண்டிய மக்கள் ஆதரவும், அதற்கான சட்டபூர்வ செயலுரிமையும் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் கட்சித் தலைவராக தொடர்ந்து இருக்க எடுத்த முடிவு நியாயமானதே. நாட்டின் ஆற்றல் வாய்ந்த வேரூன்றிய அரசியல் தளம் தம் கட்டுப்பாட்டிலிருந்து நழுவி விடும் என அஞ்சினார். ஆனால் கட்சியின் ஆளும் வர்க்கத்தை கட்டுப்படுத்த முனைகையில் தாமே அதன் கைதியானார்.

''பொதுவுடமைக் கட்சி தன்னைத்தானே சீர்திருத்திக் கொள்ளும் என்ற மாயையில் கோப்பசெவ் வெகு நீண்டகாலம் நம்பினார், தம்மால் கட்டவிழ்த்துவிடப்பட்ட சனநாயக ஆற்றலை விட தம்மை சூழ்ந்துள்ள மக்களின் செல்வாக்கையே அவர் நம்பினார். இறுதிக்கட்டம் வரை அவர்களுடனேயே செயற்பட்டார்!'.

பல சீர்திருத்த எண்ணம் கொண்ட சார்கள் போல கோபசெவ்வுக்கும் பழைமை விரும்பும் பிரமுகர்களின் பலத்தை களைவதில் பிரச்சனை இருந்தது. சிறந்த சீர்திருத்தங்கள் மூலம் அடக்கிவைக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் வலுவூட்டி பொதுவுடமை கட்சி உள் அணியினர், பிரமுகர்கள், நவீன நாள் கிளார்கள் போன்றோரின் செல்வாக்கை சமப்படுத்த முற்பட்டார். ஆனால் அவர் அரசியல் சதுரங்கமே ஆடினார், யெல்ற்சினைபோல் பிர

முகர்களை முற்றாக கைவிட்டு மக்களை நம்பி செயல் பட முடியாதிருந்தார். தாம் ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட நேரிடுமோ என்ற அச்சம் எப்பொழுதும் அவரிடம் இருந்தது.

சர்வாதிகார அமைப்பின் கட்டுக்கோப்பை உடைப்பது கடினமானது. அவரின் சஞ்சலப்போக்கு, சிலசமயங்களில் நம்பிக்கையின்மை. நிகழ்வுகளினின்றும் அவர் பின்னின்றமை. அதனையே காட்டுவன. பாதையின் ஒவ்வொரு படியிலும் எப்படி ஆட்சியில் நிற்கலாம். அதனால் சீர்திருத்தங்களை நிறைவேற்றலாம் என்ற நினைவே இருந்தது என்கிறார். கோபசெவ்வின் நெடுநாள் அரசியல் ஆலோசகர் ஜோஜி சாக்தசரோவ்.

முழுசுதந்திரமற்ற சோவியத் சட்ட மன்றில் நேரடி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாது, பொதுவுடமைக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட போட்டியிடாத தொகுதி குழுமூலம் தம்மைப் பிரத்தியேகமாய் நியமிக்கப்பட வழிவகை செய்யவேண்டிய திட்டம் கோபசெவிற்கு, 1989இல் தோன்றிற்று. அப்போது அவர் மக்களால் விரும்பப்பட்ட ஆணையை பெற்றிருக்கலாம். அக்கட்டத்தில் பொருள் வளத்தில் சிக்கெடுப்பு தொடங்கவில்லை அவர் சிறந்த சீர்திருத்தங்களின் தந்தை எனும் புகழ் மேலோங்கியே இருந்தது; ஆனால் அவர் மக்களிடம் செல்லாமல் பொதுவுடமைக் கட்சி அதிகாரபீட சகாக்களுடன் சேர்ந்து நின்றார்.

1990இல் ருசியாவும் மற்றைய குடியரசுகளும் சுதந்திரமாக பங்குபற்றக்கூடிய தேர்தல்களை நடத்தியபின் சோவியத் அதிபர் சீர்திருத்தங்களுக்கு எதிரானவர் என மக்கள் மனங்களில் இனங்காண தொடங்கினர். சோவியத் ஒன்றியத்தில் ஜனநாயகத்துக்கான போராட்டம் கோபசெவினால் உருவாக்கப்படுத்தப்பட்ட குடியரசுகளுக்கும் மத்தியபீடத்திற்குமான போட்டியாக மாறிற்று. ஜனநாயகத்தின் வெற்றி, மத்தியில் பலமான சோவியத் ஆட்சியின் வீழ்ச்சியையும் 15 சுதந்திர குடியரசுகளின் தோற்றத்தையும் குறிப்பனவாக உள்ளது.

கொன்ஸ்ரன்ரின் செனன்கோின்பின் 1985மார்ச் 11இல்சோவியத்பொதுவுடமைகட்சியின்பொதுசெயலாளராக கோபசெவ் தெரிவான போது பொதுவுடமை வல்லரசு மந்தத்திலும் தன்னம்பிக்கையிலும் சிக்குற்றிருந்தது. பொருளாதார வளர்ச்சி தீவிரமாக குன்றியிருந்தது. சோவியத் ஒன்றியம் தொழில் நுட்பவியல்,

துறையில், மேலைத்தேய போட்டியணிகளின்று வெகுபின் தங்கிற்று. அதன் அனேக வளம்களை ஏப்பமிட்டுக்கொண்டிருந்த பாதுகாப்புத்துறையும் அப்படியே. ஏதாவது தீவிர செயற்பாட்டின் மூலமே பிரமாண்டமான சோவியத்தை ஊசாடச் செய்யலாம் என்ற கருத்தொற்றுமை பரவலாக நிலவியது லெனினின் பின் இளையவயதினரும் சிறந்த படிப்பாளியுமான கோபசெவ்வே இப்பணிக்கான மனிதராக தென்பட்டார். சுறுசுறுப்பும் வளைந்து கொடுக்கக்கூடியவருமான இவர் ஓர் கவர்ச்சியான மனைவியையும் கொண்டிருந்தார்.

மரணவிளிம்பில் இருந்த கிரெம்ளின் அரசியல் திடீரென உணர்ச்சி ததும்பும் திறந்த விவாதமாயிற்று. பழைய கோட்பாடுள்ள ஒவ்வொன்றாக கைவிடப்பட்டு, கோபசெவ்வும் சகாக்களும் தமது நாட்டின் சிக்கலான பிரச்சனைகளுக்கு புதுமையான தீர்வுகளை நாடினர். ஆனால் கோபவெவ்வின் திருத்த முயற்சிகள் சோவியத் அமைப்புக்கு எவ்வித பலனையும் தராது என்பது தெளிவாயிற்று. துரிதப்படுத்துதல் என்ற பதம் மாறி மறுசீரமைத்தல் சுலோகமாக மாறுபட்டு பின்பு மறுசீரமைத்தலும் வலுவிழந்தது, பழுதுற்ற முழுநிர்மாணமுமே திரும்ப கட்டுப்படவேண்டியதாயிற்று. பொதுவுடமை முறைமையை புனரமைக்கவென ஆரம்பிக்கப்பட்ட முயற்சி தவிர்க்க முடியாமல் பொதுவுடமைக்கு எதிரான புரட்சியாயிற்று.

''இப்பரிசோதனையின் பெறுபேறுகள் பற்றி கோபசேவ் ஆரம்பிக்கும்போது அறிந்திருக்கவில்லை. அப்படியிருந்தால் அவர் முன்பே நிறுத்த விரும்பியிருப்பார். என எனக்கு நிச்சயமாக தெரியும் ஆனால் அவ் ஆபத்தான முதல் அடியை வைத்தபின் எல்லாமே பிழைத்து விட்டது'' என எழுதுகிறார் விமர்சகர் லியோனிட்கஸ்மஸ்மன். சோவியத் முதல்வரின் அரசியல் அவலம் பற்றி, முன்னேற்றசர வார இதழ்'' ஒகன்யோக இதைப் பிரசுரித்தது. இப்பொழுது எவ்வளவு வருத்தப்பட்டாலும் இது அவரின் தெரிவே...... இப்பொழுது நன்றி சொல்வது காலமாற்றத்தினால் மரபற்றிந்தாலும் நான் அவருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவுடமையில் சீர்திருத்தம் பல முரண்பாடுகளை உருவாக்கியது லெனினாலும் ஸ்டாலினாலும் வகுக்கப்பட்ட பொதுவுடமை அமைப்பு அரசியலும் பொருளாதாரமும் இறுகப் பின்னிப்பிணைந்த அமைப்பாகும் சகல உற்பத்திச் சாதனங்கள் அரச உரிமையிலும் ஒரே சீரான இலட்சிய வாதத்திலும் மாறு

படுபவர்களை அடக்கும் பெரிய கட்டமைப்பை உள்ளடக்கியிருந்தது அமைப்பின் ஒரு பாகத்தை மாற்றினால் மற்றவையும் பாதிப்புறும். பொதுவுடமையை சீர்திருத்த முனைந்த கோபசெவ் அதன் நிர்மூலத்தையே விரைவுபடுத்தினார்.

ஊதாரித்தனமான நிதிக்கொள்கைகள் விலை நிர்ணயத்தை சீராக்காமலும் பணத்தை இழக்கும் தொழிற்சாலைகளை மூடுவதான மனம் நோகச் செய்யும் பொருளாதார முடிவுகளை எடுக்காததன் மூலமும் பொதுவுடமையின் முடிவை விரைவுபடுத்தினர். அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலிருந்த இடைவெளி, அவர் பதவிக்கு வந்தபோது 3 சதவீதமாகவிருந்து, அவர் பதவியிறங்கும்போது 30 முதல் 50 சதவீதமாக தடுமாறும் அளவுக்கு உயர்ந்தது.

1986 -87 களில், இடம்பெற்ற மதுபானத்துக்கெதிர் நடவடிக்கை அரசாங்க வருமானத்திற்கு ஆகக் கூடிய தனி உற்பத்தி வருவாயை வற்றச் செய்வதன் மூலம் துண்டுவிழும் தொகையை நிரப்புவதற்காக, அரச அச்சுயந்திரங்கள் மேலதிக நேர வேலையில், பெறுமதியற்ற காகித ரூபிள்களை வெளிக் கொணர்ந்தன

ஒருவழியில் பார்த்தால் கோபசெவ்வின் பிழைபோல்சிவிக்கின் பிழை மாதிரி என்று கூறலாம். அரசியல் நடவடிக்கைகள் இறுதியாக பொருளாதாரத்திலேயே முடியும் எனும் மார்க்சீய படிப்பினையை உதாசினம் செய்து போல்சிவிக்குகள் உலகை தம் அரசியல் வலுப்பாட்டினால் மாற்றியமைக்கலாம் என நடந்து கொண்டனர். அரசியல் பலப்போட்டியில் மூழ்கியிருந்த கோபசெவ் பொருள்வளத்துறை தன் பாட்டில் தன்னையே புதுப்பாத்துக் கொள்ளும் என்ற ஆபத்தான பிழையைவிட்டார். எந்த ஒரு பெரும் கைத்தொழில் வளநாடு கண்டிராத மிகு பயங்கர பொருளாதார பின்னடைவே அதன் பெறுபேறாகியது. இவ்வாண்டு மாத்திரம் உற்பத்திகள் சுமார் 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எழுபது ஆண்டுகள் சோவியத் அமைப்பு கட்டுக்கடங்காத பெரும் பொருளாதர வளங்களில் வாழ்ந்துவந்தது. சைபீரியாவிலுள்ள நிலநெய், தங்கம், மற்றும் இயற்கை வளங்களின் பெருக்கத்தில், உலகின் ஆகப்பெரிய நடைமுறை இராணுவத்தையும் சூரியன் அஸ்தமிக்காத பேரரசையும் கட்டுக்கோப்பாக பராமரித்தது.

86708

1970 முதல் 1985 வரை கிடைத்த 200 பில்லியன் டொலர் நிலநெய் வருவாய், ஆப்கானிஸ்தானின் சோவியத் ஆக்கிரமிப்பு செலவிற்கு உதவிற்று. அத்துடன் நிக்சரகுவா முதல் அங்கோலவரையான அனுதாபத்துக்குரிய அரசுகளுக்கும் உள் நாட்டில் ஒன்றன்பின் ஒன்றான மாபெரும் பொருளாதார திட்டங்களுக்கும் உதவின.

கோபசெவ் அதிகாரத்துக்கு வந்தபொழுது ஒவ்வொருவருக்கும் நிலநெய் பணம் குன்றிவருவது தெரிந்திருந்தது. இயற்கை சூழலை பாழ்படுத்துவதற்கு ஒப்ப மேற்கொள்ளப் பட்ட மரபுவழி பொருளாதார அபிவிருத்திக்கான சோவியத் அணுகுமுறையை, தீவிர அபிவிருத்திக்காக கைவிடும் நிலை ஏற்பட்டது. பிரேஸ்ரோய்க்கா எனப்படுவதன் அடிப்படை இதுவே.

புதிய தலைமை ஆப்கானிஸ்தானிலிருந்தும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் வெளியேறி பேரரசுப் பரிமாணங்கள் குறைந்த போதும், தேசிய செல்வம் தொடர்ந்தும் அழிந்து போகலாயிற்று. கோபசெவ் ஆட்சியில் வெளிநாட்டுக் கடன்கள் உண்மையில் நான்கு மடங்காக 67 பில்லியன் டாலர்களாயிற்று, தங்க இருப்புகள் ஏறக்குறைய 90 சதவீதம் சரிந்து 240 தொன்களாக குறைந்தது.

1988-இல் முதலீட்டுப் பற்றாக்குறை நெருக்கடியால் நிலநெய் உற்பத்தியில் வீழ்ச்சிகளைத் தொடங்கியது. இதனால் கிரெம்ளினுக்கு மேலைத்தேய நாணயம் வருவது தடங்கலாயிற்று சென்ற வாரம் நாட்டின் விமான நிலையங்களின் தொகையில் அரைப்பங்கு எரிபொருள் இன்மையால் மூடப்படும் நெருக்கடிக்கு உள்ளாயின. ருசிய பொருள் வளத்துறை மந்திரி, வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏகபோக உரிமை பெற்றிருந்த சோவியத் வங்கி நடைமுறையில் வங்குரோத்து ஆகியதாக அறிவித்தார்.

இக்குறிப்பிட்ட காலகட்டத்தில் கோபசெவ் பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டமை குறிப்பிட்டு கூறப்படக்கூடியதும் முக்கியத்துவமானதுமாகும். தங்க இருப்புகள் முற்றாக தீர்ந்து போகாத நிலையிலும், மேலைத்தேய வங்கிகள் தொடர்ந்தும் சோவியத் அமைப்புக்கு கடன் வழங்க முன்வந்த நிலையிலும், கடுமையான பொருளாதார மாற்றங்களை பின்போடக்கூடியதாக இருந்தது. முழுநாடும் வங்குரோத்து நிலையடைந்தபோது முதன்மை அரசியல்வாதிக்கு எந்தவிதத்திலும் நடவடிக்கையிலும் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டது.

எனவே மைக்கேல் கோபசெவ்வை வரலாறு எவ்வாறு மதிப்பிடும்! தூரநோக்குள்ள ஆட்சி நிபுணராகவா அல்லது குறு கிய பார்வையுள்ள அரசியல் வாதியாகவா? பொதுவுடமையின் வீழ்ச்சியும் சோவியத் பேரரசின் மறைவும் வரலாற்றினால் தவிர்க்கமுடியாத தன்மை வாய்ந்தனவே. இரண்டும் என்றும் நிலைத்திருக்க முடியாதன.

ஆனால் இவையின் முடிவு இப்படியாக இப்பொழுதே வந் திருக்கவேண்டிய அவசியமில்லை, கோபசெவ் சரியாகவே விவா திப்பதுபோல், சர்வாதிகார அமைப்பு இன்னும் சில ஆண்டு கள் நிலைத்திருக்க முடியும், அவரே அந்த வழிமுறைகளுக்கு உருக்கொடுத்து நிகழ்வுகளை முடிவை நோக்கி முடுக்கிவிட்டார்.

''1985இல் ஓர் கடும்போக்குவாதி செனன்கோவின் பின் பதவியேற்றிருந்தால் துக்ககரமான பெறுபேறுகளே கிடைத் திருக்கும். இரு வல்லரசுகளிடையே போர் மூண்டிருக்கக்கூடும்.'' என்கிறார் பைலோ ருசிய எழுத்தாளரும் பட அதிபருமான அலெஸ் அடம்மோவிச் ''ஜனநாயகமென்றும் சர்வாதிகாரமென் றும் உலகை இரு அமைப்புகளாக பிரிக்கும் முறைமையை முடி வுக்குக் கொண்டுவந்தார். இல்லையெனில் அவை தம்மை ஒன்றை ஒன்று அழிக்க முற்படுகையில் மனித இனத்தையே அழித்திருக்கக்கூடும், நோபல் சமாதான பரிசை பெறுவதற்கு ஏற்றவர் அவர் என்பதில் என்மனதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.''

பல புரட்சியாளர்கள் போலல்லாது, கோபசெவ் வர லாற்று திசையை மாற்றாது அத்துடன் ஒத்துப்போகவே முற் பட்டார். இதுவே அவரின் பாரிய நற்குணம் எனலாம். கிழக்கு ஐரோப்பா சோவியத் கட்டுப்பாட்டிலிருந்து ஒருநாள் விடுதலை பெறும் என்றும், கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் ஒன்றிணையும் என்றும் ஓர்கட்சி ஆட்சி நிர்மூலமாகும் என்றும் தெரிந்திருந்தார். இவ் இயற்கை வரலாற்று நிகழ்வுகளை மாற்ற எவ்வித முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பாரிய மனிதகுல துன்பங்களுக்கே வழிவகுத்திருக்கும்.

"வரலாற்று நீரோட்டத்தை தடை செய்யாமைக்காக கோபசெவிற்கு ஓர் தங்க நினைவுச் சின்னம் ஏற்படுத்துவேன். உலக வரலாறு முழுக்க பெரும் பேரரசுகள் ஒருபோதும் சமா தானமுறையில் தாமாக சீர்குலைந்ததில்லை. அதிக இரத்தம் சிந்தாமல் இவ் லெனின் - ஸ்டாலின் முறைமையை இடித்தமைக்

காக கோபசெவ்விற்கு நன்றி சொல்லவேண்டும்'' என்கிறார் இந்த சோவியத் தலைவரால் விடுதலை பெற்ற நூற்றுக்கணக் கானோரில் ஒருவராகிய வேற்றுக் கருத்துக் கொண்ட குருவான கினெப்யாக் கூனின்.

சர்வதிகார அரசை சமாதானமுறையில் சீர்குலைப்பதே தமது முதன்மை வரலாற்று மரபுரிமையாக காட்டுகிறார் கோப செவ் ஜனநாயகத்திற்கு ஆதரவற்ற ருசிய மண்ணில், ஆகஸ்ட் சதிமுயற்சி தோல்வியின் பின், ஜனநாயகம் வேரூன்றுவதற்கு ஆதாரமாக இத்தோல்வியை சுட்டிக்காட்டுகிறார். ''எமது நாட் டின் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த வரலாற்றில் முதன்முறை யாக இரத்தம் சிந்தாமல் ஓர் முக்கிய திருப்பு முனைக்கு வழி வகுப்பதே எனது குறிக்கோள்'' என்று இலக்கிய சஞ்சிகைக்கு சொன்னார்.

கோபசேவ் இம்முதன்மை நிலையை சாதித்துவிட்டாரா என்று அரசியல் வல்லுனர்கள் முடிவுக்கு வரவில்லை. இரண் டாவது ருசியப் புரட்சியில் ஏற்பட்ட பெரிய மாற்றங்களுக்காக இதுவரை பெரிய அளவில் இரத்தம் சிந்தப்படவில்லை. கிழக்கு ஐரோப்பாவின் விடுதலையையும் பேரரசின் வீழ்ச்சியும் சமாதான மாகவும் சுலபமாகவும் நியாயபூர்வமாக எதிர்பார்க்கப்பட்டது போல் நிறைவேறியுள்ளது. ஆனால் ருசியாவில் நிகழ்வுகள் இன் னும் பூமுழுமையுறவில்லை. இப்போதைய பொருளாதார சீர்கேடு கள் எவ்வித செயற்பாட்டு முடிவுகளையும் - ஒருவகை சர்வாதி கார அல்லது பாசிச ஆட்சிமுறையை திரும்பவும் பலவந்தமாக அமைத்தல் உட்பட, கொண்டுவரக்கூடும்.

''என்னால் ஆகக்கூடிய திறமையாக நான் செயற்பட்டுள் ளேன். முடிவும் பெறுபேறு மகிழ்ச்சி தருவதாக இருந்தால் என்னை தாக்கியமை அர்த்தமற்றுவிடும். மாறாக அமையுமே யானால் யார் நான் செய்தது சரி என சொல்லமுற்பட்டாலும் அது எடுபடாது'' என்று சோவியத் அமைப்பின் கடைசி ஜனாதி பதி ஓர் சமீபத்திய செவ்வியில் தெரிவித்தார். ★

## 4. உண்ணா நோன்பு கொண்டு உயிர்விட்டான்! இதைக் கேட்ட சான்றோரும் உயிர்விட்டனர்! என்மகளைப் பிரிந்த யானோ?

—தாய்

கரிகால்வளவன் தமிழ் நாட்டில் சோழநாட்டை ஆண்ட பேர் அரசன்; ஆற்றல் மிக்கவன்; படைகள் நிறைந்தவன்; கடலிலும் நிலத்திலும் பல போர்கள் புரிந்து வெற்றி பெற்றவன்.

பெருஞ்சேரலாதன் சேரநாட்டை ஆண்ட பேர் அரசன்; இவனும் எல்லா வகையிலும் சிறந்து விளங்கினான். சோழநாட்டைத் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வர நினைத்தான்: படை எடுத்துச் சென்றான்.

சோழநாட்டில் வெண்ணி என்ற இடத்தில் இருவர் படைகளும் அணிவகுத்து நின்றன. இரண்டு பேர் அரசர்களும் அவரவர் படைக்குத் தலைமை தாங்கினர்.

போர் - பெரும்போர் நிகழ்ந்தது.

யார் வெற்றிபெறுவார் என்று சொல்லமுடியாத நிலையில் இருந்தது. கரிகால்வளவன் தன் நாட்டினுள் வந்த அரசனை உயிருடன் விடுவதா என்று நினைத்தான். நாழிகை பல சென்றும் வெற்றி கிட்டாததை எண்ணினான்; வீறு கொண்டான்; எடுத்தான் ஒரு அம்பை; அவன் மார்பில் குறிவைத்து எய்தான்; அம்பு அவன் மார்பில் தைத்து ஊடுருவிச் சென்று விட்டது. சேரன் ஆண்மையோடு தாங்கினான். அம்பு விட்ட விசையால் ஊடுருவிச்சென்றாலும் அவன் உயிர் துறக்கவில்லை. ஆயினும் அன்று வெற்றியடைந்தவன் கரிகால்வளவனே.

சேரன் தோல்வியுற்றான்; மறுபடியும் படை திரட்டிக் கொண்டு வந்து பொரலாம் ஆனால், முதுகில் புண்பட்டுவிட்டது. மார்பில் உண்டாகும் புண் - அதனால் உண்டாகும் வடு - வீரர்க்கு அணிகலன் - வெற்றிப்பதக்கம் போன்றது. அதைப்

பெருமையாகக் கொள்வர். ஆனால் முதுகில் 'வடு' என்றால் தமிழ் வீரன் உயிர் வாழான். பண்டைத் தமிழ் நாட்டில் போர்க் களத்தில் வெற்றிபெற்றால்தான், வீடு திருப்புவர்; இல்லையேல், போர் புரிந்து இறப்பர். புறங்காட்டிச் செல்லும் வழக்கம் இல்லை. அப்படிப்புறங்காட்டிச் சென்றால் அவனை வீரனாகக் கருதார்; அம்பும் எய்யார். ஆனால் இங்கு நிலைமைவேறு; மார்பில் ஏற்ற அம்பால் முதுகில் புண் ஏற்பட்டது; ஆயினும் புண்; புண்தானே, அது விரைவில் ஆறினாலும், தழும்பு மாறாது. ''கண்டோர் என்ன நினைப்பார்'' என்று எண்ணினான்; ஏங்கினான்; வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தான்.

வடக்கிருத்தல் என்றால், மானங்கெட வருமிடத்து உயிர் விட விரும்பியோர், ஓரிடத்து வடக்கு நோக்கி உட்கார்ந்து, உணவுகொள்ளாது, பட்டினியிருந்து உயிர் துறப்பதாகும்.

பெருஞ்சேரலாதனும் வடக்கிருந்தான். அவன் மானம்மிக்க வீரனாதலின் வாளைக் கையில் வைத்துக்கொண்டே உண்ணாது உயிர்விட்டான்.

சேரநாட்டில், அன்று ஒருவரும் ஒன்றும் செய்யவில்லை. அரங்குகளில் நடைபெற்ற இசையும் கூத்தும் நின்றன; மத்தளம் அடிப்பாரின்றிக் கிடந்தது. தயிர் கடையப்படாமல் பானை கவிழ்ந்து கிடந்தது; உழவர்கள் உழவில்லை; எங்கும் வேலை நிறுத்தம். இதைக் கழாா அத்தலையார் என்ற புலவர் அருமையாகப் பாடியுள்ளார். ஞாயிறுமிக்கு விளங்கும் பகல்கூட, பகலாகத் தெரியவில்லை என்கிறார்.

தன் போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கிருந்தனன்; ஈங்கு
நாள் போல் கழியல ஞாயிற்றுப்பகலே (புறம் 65)

சேரனால் புரக்கப்பட்ட சான்றோரும் உயிர் விட்டனர்.

இந்நிகழ்ச்சிகள் மாமூலனார் நினைவிற்கு வருகின்றன.

ஒரு தலைமகள் தான்விரும்பியவாறு தன் காதலனை மணப்பதற்குப் பெற்றோர் உடன்படவில்லை. உயிரினும் நாண் சிறந்தது; நாணினும் கற்புச் சிறந்தது. பெற்றோர் அறியாமல் மணம் ஆகாமுன் காதலனுடன் செல்லுதல் நாணத்திற்கு இழுக்கேயாயினும், உயிரினும் சிறந்த கற்பைப் பாதுகாக்கவேண்டி அவ்விதம் சென்றுவிட்டாள். செவிலி —வளர்ப்புத்தாய் வருந்துகின்

றாள். அவளுக்கும் சேரலாதன் பட்டினியிலிருந்து உயிர்விட்ட நிகழ்ச்சியும் அப்போது அவள் பிரிவைத் தாங்காது உயிர்விட்ட பெரியோர்கள் செயலும் நினைவுக்கு வருகின்றன.

"ஒரு அரசன் இறக்க அவனோடு நெருங்கிய தொடர்பு இல்லாத மற்றையோர் இறந்தனர். என் மகளைப் பிரிந்தநான் இன்னும் வாழ்கின்றேன். என்ன கொடுமை!" என்று எண்ணுகின்றாள்.

தலைவி சென்ற வழியை, நினைக்கின்றாள். "வெயில் கொடுமை மிகுதி; மலையும் வெடிக்கும்; அப்பொழுது பறந்து செல்லும் பறவைகளும் வாடி வருந்தும். வழியோ பருக்கைக் கற்கள் நிறைந்தது. அவை உளியைப்போல கூர்மையாக நீட்டிக் கொண்டிருக்கும். மூங்கில் கரிந்துபோகும் காட்டில் இன்ன நேரத்தில் இன்ன துன்பம் வரும் என்று சொல்ல முடியாது. இத்தகைய வழியில் அவள் எப்படிச் சென்றாள்?"

ஆயினும் வலிமைமிக்க ஆண்யானையை ஒத்த காளை போன்றவனோடு சென்றுள்ளாள் என்ற நினைவும் வருகின்றது.

"அவளைக் கனவில் கண்டு மகிழ்வதற்குத் துன்பமிகுதியால் உறக்கம்கூட வரவில்லையே," என்று வருந்துகின்றாள். இந்நிலையில் மாமூலனார் சொல்லோவியப்படுத்துகின்றார். அதைப் படித்து மகிழுங்கள்.

அகநானூறு 4 பாடல் பாலை.

காய்ந்து செலல் கனலி கல் பகத் தெறுதலின்
நீந்து குருகு உருகும் என்றூழ் நீழ்இடை
உளி முக வெம்பரல் அடி வருத்துறாலின்
விளிமுறை அறியா வேய் கரி கானம்
வயக்களிற்று அன்ன காளையொடு என் மகள்
கழிந்ததற்கு அழிந்தன்றோ இலனே; ஒழிந்து யான்
ஊது உலைக்குருகின் உள்உயிர்த்து அசைஇ
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேஎன் கனவ; ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென

இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும் பிறிதாகியாங்குப் பிரிந்து இவண்
காதல் வேண்டி என் துறந்து
போதல் செல்லா என் உயிரொடு புலந்தே

பதவுரை

காய்ந்து - கொடுமையான வெயிலால் சுட்டு, செலல் - செல்லும், கனலி - ஞாயிறு (சூரியன்), கல் - மலை, பக - பிளக்குமாறு, தெறுதலின் - எரித்தலின், நீந்து - வானத்தில் பறக்கும், குருகு - பறவைகள், உருகும் - வாடும், என்றூழ் - வெயில், நீள் இடை - மிக்க இடத்தே, உளிமுக - உளியைப் போல் கூர்மையான, வெம்பரல் - கொடியகற்கள், அடி - கால் அடிகளை, வருத்து-றாலின் - நோவச்செய்தலினால், விளிமுறை - சாகும் இடன், அறியா - இன்ன இடம் என்று அறியாத துன்பம் மிக்க, வேய் - மூங்கில், கறி - வெயிலால் கருகுகின்ற, கானம் - காட்டில். வயம் - வலிமை மிக்கதளிற்று அன்ன - ஆண்யானையை ஒத்த, காளையொடு - காளை போன்ற தலைவனோடு, என் மகள் - எனது மகள், கழிந்ததற்கு - சென்ற தன் பொருட்டு, அழிந்தன்றோ - வருந்தி இறந்தேன், இவனே - இல்லையே, ஒழிந்து - உயிர் விடாது இவ்வுலகில் தங்கி இருந்து, யான் - நான், ஊது - ஊதுகின்ற, உலை - கொல்லன் உலைக் களத்தில் உள்ள, குருகின் - துருத்தி போல, உள் உயிர்த்து - பெருமூச்சுவிட்டு விம்மி, அசை இ - வருந்தி, வேவது போலும் - நெருப்பில் பட்டு அழிவது போன்ற, வெப்ப - தாங்கமுடியாத துன்பம் மிக்க, நெஞ்சமொடு - மனத்துடன், கண் படை - உறக்கம், பெறேன் - அடையேன், கனவ - கனவில் காண்க. ஒண்படை - ஒளி பொருந்திய போர்க் கருவிகள் மிக்க, கரிகால் வளவனோடு - கரிகால்வளவன் என்னும் அரசனோடு, வெண்ணிப் பறந்தலை - வெண்ணி என்ற ஊரில் நடந்த போர்க்களத்தின் கண், பொருது - சண்டை செய்து, புண் - மார்பில் அம்பு பட்டு ஊடுருவிச் சென்றதால் முதுகில் உண்டான புண்ணை, நாணிய - வெட்கமுற்ற, சேரலாதன் - பெருஞ்சேரலாதன் என்னும் சேர அரசன், அழி களம் மருங்கில் - தான் பெருமை இழந்த போர்க்களத்தில், வாள் வடக்கு - வாளோடு வடக்கு நோக்கி உண்ணாது, இருந்தென - இருந்தனனாக, இன்னா - இறந்தான் என்ற துன்பம் தரும், இன் - உயிரை விடுத்து மானம் காத்தான் என்ற இனிய, உரை - சொல்லை, கேட்ட - கேள்வியுற்ற, சான்றோர் - பல நற்குணங்களால் நிறைந்த பெரியோர் அரும் பெறல் உலகத்து - அரிதாகப்

பெறும் வீட்டுலகத்திற்கு அவனொடு செலீஇயர் - அவனொடு செல்லும் பொருட்டு பெரும் பிறிதாகி யாங்கு - இறந்ததைப் போல, பிறந்து - இறந்து, இவண் - இங்கே காதல் வேண்டி - வாழும் தன்மையை விரும்பி என் துறந்து - என்னை விட்டு; போதல் செல்லா - போகாத, என் உயிரொடு - என் உயிரோடு, புலந்து - வருந்தி. (ஏ, அசை)

இயைபு: என் மகள் கழிந்ததற்கு யான் அழிந்திலன்; என் உயிரொடு புலந்து, கனவ, கண் படைபெறேன்.

## ஆராய்ச்சிக் குறிப்பு

வெண்ணிப்போர்: 'வெண்ணி' என்பது 'கோயில் வெண்ணி' என்ற பெயரின் சுருக்கமாகும். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்றும் உள்ளது. தொடர் வண்டி நிலையம். இங்கு நடந்த போரைப் பற்றி புலவர்கள் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளர். வரலாற்றுப் புகழ் வாய்ந்தது ஆயினும் நம் தமிழ் மாணவர்கள் மேனாட்டில் நடைபெற்ற போர்களைப் பற்றி விரிவாக அறிவ ரேயன்றி, நம் நாட்டுப் போரைப்பற்றி நன்கு அறியார். அது அவர்கள் குற்றமும் அன்று. தமிழ் நாட்டு வரலாறு நன்கு அறிந்து கொள்வதற்குரிய முறையில் கல்வித்திட்டம் அமைந்திலது. வருங் காலக் கல்வித் திட்டமாவது தமிழர்கள் தம் முன்னோர்களை நன்கு அறிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்படல் வேண்டும்.

கரிகால்வளவன்: இவன் வரலாற்றைப் - பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை, பழமொழி முதலியவற்றாலும் அறிய லாம். இவன் இளைஞனாய் இருந்த காலத்தில், இவன் தங்கி யிருந்த வீடு பகைவர்களால் கொளுத்தப்பட்டது. நெருப்பால் சூழப்பட்ட அவ் வீட்டிலிருந்து தப்பி வெளியேறிய காலத்துக் கால் கரிந்தமையால் கரிகாலன் என்ற பெயர் பெற்றானாம். இவன் தந்தையின் பெயர் உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னி. மாமனார் நாங்கூர்வேள். இவன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டு இவனுக்குப் பின்னர் கரிகாலன் என்ற பெயரோடு ஒருவன் ஆண் டுள்ளான். இவனே சிலப்பதிகாரத்தில் கூறப்படுபவன்.

சேரலாதன்: ''மயிர்நீப்பின் வாழாக்கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம்வரின்''

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாகும் இவன் வாழ்க்கை. இவன் உண்ணா நோன்பு கொண்டு உயிர்விட்டகாலத்து, இவன்

நாடு பொலிவற்றிருந்தது என்பதனாலும். சான்றோர் பலர் உயிர் விட்டனர் என்பதனாலும் யாவராலும் விரும்பப்பட்ட பேரரசன் என்று அறியலாம்.

வடக்கிருத்தல்:- மானம்கெட வருமிடத்து உயிர் வாழவிரும்பாத தமிழர்கள் தூய்மையான ஓரிடத்தில் வடக்கு நோக்கி உட்கார்ந்து எவ்வுணவும் கொள்ளாது உயிர்விட்டனர். வடக்கு நோக்கி உட்கார்ந்தமையில் ''வடக்கிருத்தல்'' என்று அழைக்கப்பட்டது.

இக் காலத்தில் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோர் பட்டினியிருப்பதைப்பற்றிக் கேள்விப்படுகின்றோம். இப்பட்டினி நோன்பு மற்றவர் மனதை மாற்றக்கொள்ளும் வலிய கருவியாகின்றது. பண்டைத் தமிழரோ தம்மைத் திருத்த, தமது உயர்வை நிறுத்த, இந் நோன்பை மேற்கொண்டனர்.

(சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்
-கலாநிதி. சி. இலக்குவனார்)

உங்களுக்கு யாரையாவது
திட்டவேண்டும் என்று
தோன்றினால் வாயால்
திட்டாதீர்கள். அதை
எழுதிவிடுங்கள. அதுவும்
எங்கே தெரியுமா.
கடற்கரை ஓரத்திலுள்ள
மணலில்.

# செனவிரத்தின - ரமேசு இருசிறிலங்கர்களின் கதை

-சங்கைக்குரிய தியுலிப்கே த சிக்கேரா-

(ஐலண்ட் -11.04.1992)

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் போல் கஸ்பேஸ் அடிகள் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த திருமதி யோன் பேடினன்ட்ஸ், ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த தியுலிப் த சிக்கேரா அடிகள் ஆகியோர் அடங்கிய திருச்சபைகளின் ஐக்கிய குழு மார்ச் 11-16 வரை வடக்கிற்கு நல்லெண்ணத் தூதுக் குழுவாக பிரயாணத்தை மேற்கொண்டது.

கடந்த டிசெம்பரில் சங்கை சோமா பெரேராவினால் மேற்கொள்ளப்பட்ட நல்லெண்ண விசயத்தைத் தொடர்ந்தே எமது பயணம் இடம் பெற்றது.

வடக்கிலுள்ள நிலைமைகளை நேரடியாக அவதானிப்பதும் மக்களின் கருத்துக்களையும், எண்ணங்களையும் அறிந்து கொள்வதும் எமது நோக்கம். தென்பகுதிக்குத் திரும்பியதும் எமது எண்ணங்களை அங்குள்ளவர்களுடன் பகிர்ந்து சாதகமான புரிந்துணர்வை உருவாக்குவதும் எமது கடமையாகும். தென்பகுதி மக்களும் வடபகுதி மக்களும் வெவ்வேறு துருவங்கள் ஆகப் பிரிந்து நிற்கிறார்கள். இருவருக்குமிடையில் தொடர்புகள், புரிந்துணர்வு, நட்பு போன்றவற்றின் கதவுகள் திறந்திருப்பதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்.

நவம்பர் 11-ம் திகதி அதிகாலை 4-30க்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு காலை 10.30 மணியளவில் வவுனியாவை அடைந்தோம். ரமய இல்லத்தில் இராணுவ காவல்துறையினர் எமது உடைமைகளை திறமையாகச் சோதித்தார்கள். அவர்கள் சிநேகபூர்வமாகவும் பண்பாகவும் நடாத்தினார்கள். அங்கிருந்து (ICRC) சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகன அணியுடன் சேர்ந்து சிறிலங்கா இராணுவத்தின் தாண்டிக்குள எல்லைத் தடை நிலையை அடைந்தோம். குறைவான நடைமுறைகளின் பின் எமது பிக்கப் வாகனத்தில் கூடார சமிக்கைகளைப் பொருத்தினோம். முன்னும் பின்னும் கொடிகளைக் கட்டி யாருமற்ற நிலப்பரப்பில் நுழைந்தோம்.

புகையிரத சிலிப்பர்க் கட்டைகளால் திருத்தப்பட்ட பாலத்தைக் கடந்து மேட்டிலேறி தனித்து நின்ற புலிகளின் காவல் நிலையை அடைந்தோம். அவர் வானின் உள்ளே எட்டிப்பார்த்து விட்டு குழந்தைச் சிரிப்புடன் போகும்படி கையசைத்தார். 200 யார்சென்றதும் புலிகளிலின் முக்கிய ஓமந்தை தடை நிலையை அடைந்தோம்.

இங்கு எமது அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டு எமது பெயர்கள் எழுதப்பட்டது. 10 நிமிடங்களின் பின்னர் நாம் புலிகளின் ஆதிக்கத்திற்குள் உள்ள பிரதேசத்தில் பிரவேசித்தோம் மிகப்பெரிய சண்டை நடந்ததிற்கு சாட்சியாக இருக்கும் மாங்குள தங்ககத்தைத் தாண்டிச் சென்றோம். மாங்குளத்திலுள்ள சி.எஸ்.ஐ (CSI) பகல்நேரப் பராமரிப்பு நிலையத்திலும், அங்கிலிகன் திருச்சபையால் பெண்களுக்காக நடாத்தப்படும் கருணை நிலையத்திலும் சிறிதுநேரம் தரித்துவிட்டு, பரந்தனிலுள்ள சிறுவர்களுக்கான நவஜீவனத்திற்குச்சென்று மதிய உணவை உண்டோம். அடுத்து நீரிணையை அடையும் 10 கிலோ மீட்டர் தூரத்தை உழவு இயந்திரத்தால் மேற்கொண்டோம் போகும் வழியில் உந்துருளிகளிலும், ஈருருளிகளிலும், உழவு இயந்திரங்களிலும், கால்நடையாகவும் நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் இரு திசைகளிலும் செல்வதைக் கண்டோம். அதிகமானோர் பெரும் பொட்டலங்களைக் கொண்டு செல்வதையும், பயணக்களைப்பால் வாடியிருப்பதையும் கண்டோம். எரிக்கும் வெட்பத்தினால் எல்லோரும் பாதிக்கப்பட்டிருந்தனர். சிலர் மகிழ்ச்சியுடன் எங்களுக்குக் கையசைத்தனர். சிலர் புன்னகை செய்தனர்.

## நினைவில் நின்றது

உழவு இயந்திரப் பயணம் நன்றாக நினைவில் நிற்கிறது. முடிவில்லாதவாறு கரடுமுரடான காட்டுப்புறப் பாதையில் தூக்கியெறியப்பட்டவாறு பயணம் செய்து மணல் குவியல்களை அடைந்தோம். எமது உழவு இயந்திரம் பல தடவைகளில் தாண்டுபோகவும் நின்றுவிடவும் பயமுறுத்தியது, உழவு இயந்திர ஓட்டியின் வல்லமையாலும் ஒரு சமய அதன் பயணிகளின் பிரார்த்தனைகளாலும் இருக்கலாம். நாம் நீர் முனையை அடைந்தோம். ஊரியன் நீரிணையில் ஓர் உருக்கமான காட்சியை நாம் கண்டோம். கரையோரத்தில் பெருமக்கள் கூட்டமும் அவர்களின் உடைமைகளும், மொத்தமாக சேர்க்கப்பட்ட உலர் உணவுகளும், பீப்பாக்களில் மண்ணெய்யும் நெருக்கமாக இருந்தன. சிலர்

வடக்கே செல்லக் காத்திருந்தவர். குடாநாட்டிலிருந்து வந்தோர் 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பரந்தன் பிரதான வீதிக்கு கிடைக்கும் வாகனங்களில் செல்வதற்கு பேரம் பேசிக்கொண்டிருந்தனர். ஒருவர் உழவு இயந்திரத்தில் செல்வதற்கு ரூபாய் 100/- பொட்டலம் ஒவ்வொன்றிற்கும் 30/-ரூபாவும் கொடுக்க வேண்டும். உந்துருளிகளுக்கு (இருவர் பின்னிருந்து செல்லுதல்) ஒருவருக்கு 150/- ரூபா. போதிய பணமற்றோர் நடந்து சென்றார்கள்.

நீரிணையில் படகுகள் நெருக்கமாக இரு திசைகளிலும் சத்தமின்றி ஆனால் தேவையுடன் சென்ற வண்ணமிருந்தன. பொருள்களாலும். மக்களாலும் நிரம்பிய வள்ளங்கள் 75 - 100 க்கு மிடைப்பட இருந்தன.

ஒப்பிட்டுப் பார்க்கையில் படகு பயணத்திற்கு குறைந்த செலவே ஆகிறது. ஒருவருக்கு 15/-ரூபா. தாமதத்தைக் குறைக்க விரும்பிய படியால் நாம் தனிப்படகொன்றை அமர்த்திக் கொண்டோம். ஐந்தோ ஆறு கி/மீ படகுப்பயணம் நம்பமுடியாதவாறு மனதுக்கு அழகாக இருந்தது. தண்ணீர் சலனமற்று இருந்தது. இடைக்கிடையே கொக்குகள் எங்கள் மேலால் அவர்களின் வழமையான அணியில் பறந்து சென்றன. தூரத்து தீவுகளில் நாரைக் கூட்டங்கள் இருப்பதை கவனித்தோம். வேறு காலமாய் இருந்தால் இத்தீவுகள் உல்லாசப் பயணிகளின் கேளிக்கை நிலையங்களாக இருந்திருக்கும். தூரத்தில் ஆனையிறவிலுள்ள இராணுவ முகாமின் உயர்ந்த ஏரியல் கம்பம் தனித்து நிற்பது தெரிந்தது. எமது படகுக்காரன் முன் மீன் பிடித்து வந்தவர். இப்போது கடலுக்கு போக முடியாததால் நீரிணையில் ஆட்களை ஏற்றி இறக்கி பிழைக்கிறார். அவரும் உடனிருந்த சிறுவனும் சிநேகபூர்வமாக, காற்றுக்கேற்ற விதத்தில் படகை கெட்டித்தனத்துடன் செலுத்தி எங்களை எதிர்க்கரையில் இயக்கச்சியில் இறக்குவதற்கு பணிபுரிந்தனர். கரையில் சிறு தாமதத்திற்கு பின்னர் கடைசிகட்ட யாழ்ப்பாணப்பட்டின பயணத்தை மண்ணெய்யில் இயங்கும் லொறியில் தொடங்கினோம். தாகம் தீர்ப்பதற்கு வழியில் நின்றோம். வழமையான குளிர்பானங்கள் கிடைக்கவில்லை. ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக வடபகுதியில் மின்சாரம் இல்லாததால் குளிரூட்டப்பட்ட பானங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. இலங்கையின் மற்ற பாகங்களிலுள்ளவாறு பால் இல்லா தேநீர் இங்கும் உற்சாகமூட்டுவதாக இருந்தது.

## மண்ணெய்

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ ஆலயங்களின் விருந்தாளிகளாக இருந்தோம். குருமார்களுடன் தங்கி தமக்கேயுரித்தான யாழ்ப்பாண விருந்தோம்பலுக்கு ஆளானோம். உந்துருளிகளில் அல்லது ஈருருளிகளில் சுற்றி வந்தோம். உந்துருளி மண்ணெய்யில் இயங்கினாலும் சிறுதுளி, மதிப்பு வாய்ந்த பெற்ரோலும் யந்திரத்தை முடுக்கிவிட தேவைப்பட்டது. இதற்காக உந்துருளியில் செல்வோர் தம்முடன் 80/- முதல் 120/-ரூபாய் வரை பெறுமதியான பெற்ரோலை சிறு குப்பிகளில் கொண்டு செல்கிறார்கள். இக்குப்பியை நாம் நகைச்சுவையாக ,'பால்போத்தல்'' என அழைத்தோம். ''குழந்தை ஒத்துழைப்பதற்கு இது முக்கியமானது.

எமது கண்கள் அவதானித்தவையே குடாநாட்டின் முதல் கணிப்பீடாகும். தெரு முனைகளிலும், சந்திகளிலும் புலிகளின் இறந்த. உறுப்பினர்களின் படங்களையும். தூபிகளையும் தெளிவாக நெருங்கிருப்பதைக் காணலாம். அவர்களுடைய பெயர்களும் இறந்த திகதிகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. எல்லா முகங்களும் இளைஞர்களின் முகங்களாக தோன்றின. சில இடங்களில் கேலிச் சித்திரங்கள் காணப்பட்டன பெரிய பாம்பொன்று சிறிய தவளையை விழுங்குவதுபோல் ஒன்று இருந்தது. தொண்டமானின் ஆலோசனைகளுக்கு நடந்தது என்ன என்பதை இது தெரிவிப்பதாக இருந்தது. குறிப்பாக ஒரு பெரிய அளவிலான விளம்பரப் பலகை கைதடிக்கு செல்லும் வழியில் என் கண்ணுக்குப் பட்டது. வெளிநாடுகளுக்கும் கொழும்பிற்கும் மக்கள் கூட்டமாக இடம் பெயர்ந்து செல்வதையும் கைநிறைந்த யாழ்ப்பாண மண்ணையும் காட்டுவதாய் அமைந்திருந்தது. அதன் தலைப்பு இடம் பெயர்பவர்களிலும் பார்க்க ''ஒருபிடி யாழ்ப்பாண மண் பெறுமதி கூடியது'' என்று எழுதப்பட்டிருப்பதாக எனக்கு கூறப்பட்டது. சில வீதி முடக்குகளில் புலிகளின் இலட்சியங்கள் பற்றிய பாடல்கள் ஒலிபரப்பப்பட்டது.

பொதுவாகப் போக்குவரத்து மிக அரிதாகவே இருந்தது. நாங்கள் கண்ட தனியார் வாகனங்கள் யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளிலிருந்து நல்லூருக்கும் நல்லூரிலிருந்து இயக்கச்சிக்கும் சேவையில் ஈடுபட்டன. வசதிபடைத்தோருக்குச் சில மூன்று சக்கரவாகனங்கள் காணப்பட்டன. பயணத்திற்கும் போக்குவரத்திற்கும் ஈருருளிகளே மிகப் பிரபலமானவை. கொழும்பில் ஒரு தள்ளுவண்டியில் எடுத்துச் செல்லக்கூடிய பொருட்கள் சில

சமயங்களில் ஆடுகள், சிலசமயங்களில் குடும்பங்கள் ஈருருளிகளில் செல்வதைக் கண்டோம். உந்துருளி வைத்திருப்போர் பரவாயில்லை. நாம் கண்ட நாலு சக்கரவண்டிகள் புலிகளினதாகவோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினதாகவோ இருந்தன. அநேகமாக பெருந்தெருச் சந்திகளில் காணப்படும் போத்தல்களில் நிரப்பப் பட்ட நீல நிற மண்ணெய்யும் கறுப்புநிற இயந்திர நெய்யும், பெற்றோல் நிலையங்களுக்கு பதிலாக செயற்படுகின்றன; சில சமயங்களில் பெற்றோல் 1 போத்தல் 2400/ ரூபாயும் விற்கப்பட்டது. இயந்திர நெய்க்கு பதிலாக பாவிப்பதற்கு மரக்கறி நெய்களும் இருக்கின்றன. சில வாரங்களுக்கு முன்னர் ரூபா 300/- விற்கப்பட்ட 1 போத்தல் மண்ணெய் இப்போ குறைந்து 28/ ரூபாவாகவிற்கப்படுகிறது. போக்குவரத்திற்கும் வெளிச்சத்திற்கும் உபபோகிக்கப்படும் இவ் அத்தியாவசிய நெய் நீரிணையூடாக மனித சக்தியாலேயே எடுத்துவரப்படுகிறது, 5, 6 மண்ணெய் பரல்களை ஒன்றாக இணைத்து நீரிணையூடாக மனிதர்கள் வெறும்மேலுடன் தள்ளிக்கொண்டு வருவதை பார்க்கும் போது வியப்பாகவும், கவலையாகவும் இருந்தது.

## அழிவுகள்

யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றிய கட்டிடங்கள் எல்லாம் உடைக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில இருக்கின்றன. கோட்டைக்கான சமர் இருபகுதியினராலும் வெகுமும்முரமாக நடத்தப்பட்டதும் தெரிகிறது. மாங்குளத்திலும் ஆனையிறவிலும் முன்னர் பார்த்தவைகளைப் போல் இவைகளும் இருந்தன. சமீபத்தில் ''எறிகணை'' தாக்குதல் நடந்திருந்தாலும் வான் குண்டுவீச்சும் எறிகணைத்தாக்குதலும் கணிசமான அளவு குறைந்துள்ளது.

ஓர் எதிர்பாராத ஆச்சரியம் யாழ்ப்பாண காவல்துறையாகும். கம்பீரமான நீலநிற சீருடையில் உள்ள ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களே யாழ்ப்பாணத்தில் குடியியல் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுபவர்களாகும். போக்குவரத்து காவல்துறையினர் வீதி ரோந்து பணிகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் தலைக்கவசம் அவர்களை அடையாளம் காட்டுகிறது.

வழமையான மண்ணெய் விளக்குகளும் இடையிடையே காணப்படும் மெழுகுவர்த்திகளும் இருளை அகற்றின. வீதி இருட்டாக இருந்தாலும் இந்த எதிர்மறையான சூழலில் நிலாவெ

விச்சத்தை கூடுதலாக யாழ்ப்பாண மக்கள் சாதகமாக பயன்படுத்துகிறார்கள். மின்சார இணைப்புகள் கொண்ட வீடுகளில் பிள்ளைகள் மண்ணெய் விளக்கில் படிப்பது எமக்கு கசப்பு உணர்ச்சிகளை ஏற்படுத்தின. அத்துடன் இயக்காதிருக்கும் மின் விசிறிகள், குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவை வடபகுதி மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை எடுத்துக்காட்டுகின்றன. சில வானொலிகள் மின்கலங்களாலும் வேறுசில, சுருள் சக்கரத்தை சுற்றுகையில் டைனமோவிலிருந்து பெறப்படும் ஆற்றலினால் திறமையாக இயங்கப்படுகின்றது.

சென்ற வாரத்திலிருந்து உணவுப் பொருட்களின் விலைகள் நல்லகாலமாக குறைந்துள்ளன. கிலோ அரிசி ரூபா25/— ஆகவும், சீனி சுமார் 40/—க்கும் குடாநாட்டில் உற்பத்தியாகும் கோவா, கரட்போன்றவை தென்பகுதிக்கு அனுப்பமுடியாத காரணத்தால் மலிவாக விற்பனையாகின்றன. மிளகாயும் வெங்காயமும் நீரிணைக்கு அப்பால் எடுத்துச் செல்லப்படுகின்றன. இப் பொருட்கள் பழுதடையாமல் இருக்கக் கூடியவையாகையால் தென்பகுதிக்கான நீண்ட பயணத்துக்கு ஈடுகொடுக்கின்றன.

உணவுநிலை சமூக ஏற்றத்தாழ்வுகளை சமன்படுத்தியுள்ளது. குளிரூட்டப்பட்ட இறைச்சி குளிர்களி(ஐஸ்கிறீம்)சொக்லேட் வெண்ணெய் போன்றவை முன்னர் அவற்றை நாங்கக் கூடியவர்களுக்கு பழைய நினைவாகவே இருக்கும். அடிப்படை உணவுத் தேவைகளான மீன்,மரக்கறி அநேக மக்களால் பெறக்கூடியவையாக இருக்கிறது. இருந்தாலும் தீவுப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தோரும் ஏழைகளும் உயிர்வாழ்வதற்கு திண்டாடி அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வேறு குழுக்களாலும் உதவப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

நாங்கள் குழுக்களுடனும் தனிப்பட்டோருடனும் பயன்தரத்தக்கபேச்சுக்களில் ஈடுபட்டோம். அரச அதிபர் தமது பெறுமதிமிக்க நேரத்தில் பெரும் அளவை எம்முடன் செலவிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள்,எரிபொருள் ஆகியவற்றிற்கு ஒருவித விலை நிர்ணயம் செய்யும் தம் எண்ணத்தையும் மின்சாரம் விரைவில்,குறைந்தபட்சம் கிளிநொச்சி மட்டுமாவது வரும் எனும் தமது நம்பிக்கையையும் எமக்கு எடுத்துக் கூறினார். சிரமமான பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டிய கடமையுணர்ச்சியுள்ள ஒருவராக எமக்குத் தோன்றினார். நாங்கள் பிரசைகள் குழு பல்கலைக்கழக ஆசான்கள்,சமயப் பிரமுகர்கள் பல்கலைக்கழக மாணவர்கள்

ஆகிய குழுக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். இக்குழுக்களிடமிருந்து பல வேண்டுகோள்களும் தகவல்களும் கிடைத்தன. போரை நிறுத்தவும், மருந்துவகையுடன் சில உணவுப்பண்டங்களின் தடையை நீக்கவும் ஏதாவது செய்ய முடியாதா, தென்னிலங்கையில் உள்ள தனியார்களும் குழுக்களுடன் வடக்கிலுள்ளவர்களைப் பற்றி அக்கறை கொள்வதை [அவர்களில் சிலர் மெச்சினார்கள். அப்படியிருந்தும் ''தெற்கு வடக்கை மறந்து விட்டதா? என்றும் வினவினார்கள்.

## மனப்பதிவுகள்.

நாம் கொழும்பு திரும்புகையில் மனதில் பதிந்த தாக்கங்கள் பற்றி நான் எண்ணிப் பார்த்தேன். கோட்டையைச் சுற்றியும் ஆணையிறவுக்கு அண்மையிலும் நடைபெற்ற சமர்க்காட்சிகள்; தீர்க்கமான ஆனால் களையுடனான ஆயிரக்கணக்கான பயணிகள் நீரிணையை இரு திசைகளிலும் கடப்பது. எமக்குக் கிடைத்த யாழ்ப்பாணத்துக்கே உரித்தான விருந்தோம்பல்; நாம் தெளிவாகக் கேட்ட இரு கருத்துக்கள்: ஒன்று காலம் கடந்து விட்டதென்றும், மற்றது தமிழருக்கு நியாயமானதும் கௌரவமானதுமான சமாதான அரசியல் தீர்வுக்கு நம்பிக்கையுண்டென்று வற்புறுத்தல் ஆகியனவாகும்.

கிளிநொச்சியில் அக்கறையுள்ள இரு பிரமுகர்களைச் சந்தித்தோம். அதனால் நாம் உற்சாகமடைந்தோம் கருணாநிலையத்தில் 93 வயதில் சக்கர நாற்காலியில் வீற்றிருக்கும் செல்வி.மியூரியல் சச்சின்சுடன் சிலநேரத்தைக் கழித்தோம் இங்கிலாந்திலிருந்து வந்த ஓர் சி எம்.எஸ் (cms) மதப் போதகரான இவர், இவரே எமக்கு விளக்கமளித்தது போல் இந்நிறுவனத்தை முற்றிலும் கடவுளின் கருணையினாலேயே கட்டியுள்ளார். இன்று இவரது வாழ்க்கையின் கடைசிக்கட்டத்திலும் இதன் எதிர் காலத்தை நம்பிக்கையுடன் அதேகடவுளிடம் ஒப்படைத்துள்ளார் நாம் அவருடன் பிரார்த்தித்து அவரைவாழ்த்திவிட்டுவிரைவில் வெளியேறினோம். அவருக்கு அங்கிருப்பதே மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மற்றவர் கிளிநொச்சி நகர் மத்தியில் உள்ள சிங்கள மகா வித்தியாலயத்தின் அதிபரான பௌத்த குருவான சங்கை சமனசார தேரர் ஆகும் அவர் பள்ளிக்கூட வரவு 13மாணவர்களாகவும் மூன்று ஆசிரியர்களாகவும் குறைந்துள்ளதையும் அவ்வித வீழ்ச்சியின் நடுவிலும் தாம் தொடர்ந்து சேவை செய்யப் போவதாகவும் எமக்கு எடுத்து விளக்கினார். சிறிது நேரம் அளவளாவிவிட்டு

அவரை விட்டு விலகி வாகனத்திற்கு செல்லும்போது சிங்களத்தில் வகுப்பு நடத்தப்படுவது கேட்டது.

மேலும் தெற்கில், வவுனியாவில் யாருமற்ற நிலப்பரப் பால் திரும்பும்போது கடைசியாக என் மனதில் பதிந்தவையை மீண்டும் நினைவுகூர்ந்தேன். போர்முனையில் எதிரும் புதிருமாக நின்ற இருஇளைஞர்கள் அவர்கள் தான் செனவிரத்தினா-ரமேசு அவர்கள் இருவரும் ஒரே வயதினர். உடல் வளர்ச்சியிலும் அவர் களிடம் ஒற்றுமை இருந்தது. இருவரும் பண்பும் செந்தளிப்பும் உள்ளவர்கள். ஒருவர் சிங்களவர் மற்றவர் தமிழர். எனக்கு அவர்கள் இருவருமே சிறிலங்கன்கள் தான் மாறுபட்ட சூழ்நிலை யில் சிறிலங்காவின் அஞ்சல் ஒட்டக்குழுவின் உறுப்பினராக ஒரு வரிடம் மற்றவர் தடிகொடுப்பவராகவோ பல்கலைக்கழக விடு தியில் ஓரறையில் வசிப்பவர்களாகவோ அவர்களை நான் எண் ணியிருப்பேன். ஆனால் வரலாற்றில் பல பாரிய தவறுகளும் விபத்துக்களும் ஏற்பட்டதால் அவர்கள் ஒருவர் இன்று சிறிலங் கன் போர் வீரனாகவும் மற்றவர் புலிப்போராளியாகவும் ஒரு வரை மற்றவர் அழிப்பதற்கு ஆயத்தமாக, ஆனால் ஏன் அப் படிச் செய்கிறோம் என முழுமையாக தெரியாமல் நிற்கிறார்கள்

செனவிரத்தினாவும் ரமேசும் எனது வடபயணத்தின் ஆகக் கூடிய தாக்கத்தை மனதில் பதியவைத்தவர்களாக இருப்பர். அவர்கள் வகிக்கும் பாத்திரங்களில் சிறிலங்காவின் துன்பியல் நாடகத்தை பார்க்கிறேன்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் ஏற்படும் காலம் தாழ்த்தாத பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்விலேயே இவ்விரு இளைஞர்களுக்குமான மனிதநேய உறவு தங்கியிருக் கின்றது. அத்துடன் எங்கள் எல்லோருக்கும்தான். ★

விமரிசனம் பற்றி கென்னத் டைனன்:
''விமரிசகனுக்கு வழி தெரியும்.
ஆனால்
கார் ஒட்டத் தெரியாது.

# சிதறல்கள்

உறங்கும் வீணை உறையில்
ஆலாபனைக்கு ஆயத்தமாயின
அந்தி நேரக் கொசுக்கள்

இரைந்து உறுமிற்று புயல்
வீடும் இடிகிறது
என் அழகு தென்னையின் நாட்டியம்

மணலுக்குத் தலைவாரும் அலைகள்
நுரைப் பூச் சூடும்
திசைகளை வெறிக்கும் அவள் கண்கள்

தொலைபேசிக் கம்பிகளில்
செய்தி அருவி
செவிடாய்க் குந்தி இருக்கும் குருவி

புறாக்களுக்கு நெருப்புமுகம் காட்டும்
வாதநாராயண மரத்தின் கீழ்
காக்கைகளுக்கு சிவப்புக் கம்பளம்

பவள மல்லியின் வேரில்
பதுங்கும் சொறித் தவளை
ஓயாமல் நனைகிறது மலர் மழையில்

இறுகிய பாறை, மூலை
பீறிட்டுத் தெறித்தது
குற்றாலத்தில் பாற்கடல்

மழை ஓய்ந்த காலைப் பொழுது
பசும் புற்களுக்குக்
குடை பிடித்தன காளான்கள்

குயில்வந் தமர்ந்து கூவிற்று
குக்கூ......கூக்கூ......
நந்தவனமாச்சு முள்ளுமரம்

எண்ணெய்ப் பிசுக்கேறிய யானைச் சிற்பம்
சங்கிலியால் வளைத்தன
எறும்புகள்

பட்டறையின் இரும்புப் பூக்கள்
தளுக்கிச் சிரித்தன
செமத்தியாய் விழுந்தது சம்மட்டி அடி

தண்ணீர் மேடையில் கோரைப்புல் நடனம்
சகிக்கவில்லை
வெளிநடப்புச் செய்யும் நீரோடை

வற்றிய ஆற்றங்கரை மேடு
அக்கரைக்குப் போக
சக்கரம் கேட்கும் படகு

தகிக்கும் கோடை
தனக்குத் தானே விசிறிக் கொள்ளும்
ஒன்றைப் பனைமரம்

மருதாணி விரல்களில்
ஒரு மல்லிகைப் பூ
அந்த வானில் ஒரு விண்மீன்

தோட்டக்காரனின் பார்வைக்குத் தப்பி
வேலிக்குள் மறைந்து
கண்ணடித்துக் கூப்பிடும் கார்த்திகைப்பூ

நீரில முகம் பார்க்கும் நாணல்
தும்பி வந் துட்கரும்
அட நாணலே தூண்டிலா?

மூலையில் கிடத்தப்பட்டது லெனின் சிலை
காலடிப் புல்லும் கறுவிக் கேட்டது
நீயுமா புரூட்டஸ்?

மார்கழிப் பனியின் சர்வாதிகாரம்
நீல்லென்று சொல்லிற்று
சருகுக் குவியலின் நெருப்புப் பிஞ்சு

சொட்டு நீரும் இல்லை
வறண்டு கிடக்கும் குடங்கள்
ததும்பி வழிந்தன கண்கள்.

—நன்றி
சுபமங்களா
மார்ச் 19' 92

சர்வாதிகாரிகளுக்கு பயந்து
கொண்டு நாம் வேறுவிதமான ஒரு
சமூகத்தை அமைக்கிறோம். அதில்
ஒவ்வொரு நகரசபை முதல்வரும்
சர்வாதிகாரியாகிறார். தனியார் முதலாளிகளும்
பணம் கடன் கொடுப்போர்களும் தங்கள்
கீழ் உள்ள உழைப்பாளிகளின் மீது கருணை
என்பதே இல்லாமல் சமூகப் பொறுப்புணர்வும்
இல்லாமல் சர்வாதிகாரிகளாகி விடுகின்றனர்.

—பெர்னாட்சா

# மன்னர் துட்(Tut) டின் கல்லறையில் இருந்து 22நூற்றாண்டுகளுக்குப் பின் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

டெயிலி நியூசு (7.4 92)

இப்பூவுலகில் தாங்கள் எப்படி வாழ்ந்தார்களோ, அப்படியான ஒரு வாழ்க்கையையே தாங்கள் இறந்தபின்பும் எடுக்கப் போகிற மறுபிறவியிலும் வாழவேண்டும் என்று கருதிய பண்டைய கால எகிப்தியரிடையே வாழ்ந்த செல்வந்தர்கள் தங்கள் கல்லறைகளுள் அரும்பெரும் பொருட்களை நிரப்பி வைத்தது மாத்திரமின்றி மறு உலகில் தங்கள் உணவுக்குத்தேவையான பயிர்களையும், தங்கள் வீடுகளை அலங்கரிப்பதற்குப் பூக்களையும் நிரப்பி வைத்திருந்தனர். சிறு தவறு காரணமாக அவர்கள் தங்களுக்கு வேண்டப்படாத பலவித களைச்செடிகளையும் இக் கல்லறைகளுக்குள் நிரப்பி வைத்திருந்தனர்.

இக்கல்லறைகளிலிருந்து பெறப்பட்ட பொருட்களை ஆராய்ச்சி மேற்கொண்டுவரும் தற்போதைய தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் பண்டையகாலத்துக் கமச்செய்கை எப்படி இருந்ததென்பதை இவற்றை ஆராய்ச்சி செய்வதன் மூலம் அறியக் கூடியவர்களாயிருக்கின்றார்கள்.

எகிப்திய அரசர் துதங்காமுன் (*Pharoah Tutankhamun*) அவர்களுடைய கல்லறையை ஆங்கிலேய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களான கோவட் காட்டர் (*Howard Carter*) அவர்களும் காணர்வன் பிரபு (*Lord Carnarvan*) அவர்களும் 1920 ம் ஆண்டுகளில் அகழ்வு ஆராய்ச்சி செய்தபொழுது அவற்றுள் தங்கம், ஆபரணங்கள் மற்றும் விலைமதிக்க முடியாத பொருட்களுடன் கிறிஸ்துவுக்கு முன் 1325 ம் ஆண்டு காலத்தைய பழங்கள் மற்றும் தானியங்கள் அடைக்கப்பட்டிருந்த 128 கொள்கலன்களையும் அதற்குள் இருந்து கண்டெடுத்தனர்.

உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவும் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தவும் தேவைப்பட்ட பணியாட்கள் போன்று உருவாக்கப்பட்ட சிலைகள், அம்மி மற்றும் வேறு உபகரணங்களுடன் இக்கல்லறைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

திரு.காட்டர் அவர்களால் 1932 ம் ஆண்டு இங்கிலாந்திற்குக் கொண்டுவரப்பட்ட 31 தானிய வகைகள் மேலோட்டமான பரிசோதனைக்குப்பின், லண்டனிலுள்ள கியூதோட்டத்தில் (*Kew Gardens*) வைக்கப்பட்டிருந்தது. இது நடந்த 50 ஆண்டுகளுக்குப் பின் இப்பொழுது இத்தானியங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

2232
cc.



கிறிஸ்துவுக்கு 14ஆம் நூற்றாண்டுகளுக்கு முன் பலவகையான தாவரங்கள் நைல்நதிக் கீழ்ப்பிரதேசத்தில் வளர்ந்துள்ளன என்பதை லண்டனிலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. கிறிஸ்தியன் த வாட்டவன் கண்டுபிடித்துள்ளார்,

கியூ தோட்டத்திலிருந்து பரிசோதிப்பதற்காக எடுக்கப்பட்ட பொருட்களில் 15 வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த தாவரங்களும் 40 விதமான களைகளும் அடங்கும். கியூ தோட்டத்தை விட ஏழு மடங்கு பெரிதான கெயிறோ நூதன சாலையில் பெறப்பட்ட தானிய வகைகளுள் 20 உணவுத் தானியங்கள் உட்பட 90 வகையான இனத் தாவரங்களை திரு. த வாட்டவன் அடையாளம் கண்டார்.

கிறிஸ்துவுக்குமுன் ஏழாயிரம் அல்லது எண்ணாயிரமாண்டுகளில் இருந்தே முக்கிய உணவாகவிருந்த கோதுமை மற்றும் பார்லி ஆகியன கல்லறைக்குள் இருந்தது வியப்பைத்தரும் விடயமல்ல.

மத்திய கிழக்கில் கோதுமை ஒரு முக்கிய பயிராக விளங்கியபோதிலும் நீர்ப்பாசன வசதி இல்லாதுவிடின் இதன் விளைச்சலை உறுதிப்படுத்தமுடியாது. நீர் வளத்தையும் செழிப்பையும் நைல்நதி எகிப்திற்கு வளங்குவதன் காரணமாகவே பஞ்சத்தாலும் பட்டினியாலும் அல்லலுற்ற தனது அயல் நாடுகளுக்கு எகிப்து தானியக் களஞ்சியமாக விளங்கமுடிந்தது என விவிலிய நூலில் கூறப்பட்டுள்ளது.

துதங்காமுன் கல்லறைக்குள் வேறு பல தானியங்களும் இருந்தன. மூன்று வகையான தினைகளும், காட்டில் வளரும் இனத்தைச் சேர்ந்த சோளத்தைப் போன்ற களையும் அங்கிருந்தன.

அவரை, துவரை, பயறு போன்ற தாவரங்களையும் தானிய வகைகளையும் அரசர் தனது கல்லறைக்குள் வைத்திருந்தார்,

கோதுமையைப்போல் அவரையையும் தாவரங்களைப் பயிரிட ஆரம்பித்த காலம் தொட்டு பயிரிடப்பட்டுவரும் அதே வேளையில் பயறு வகைகள் கிறிஸ்துவுக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் துருக்கியில் பயிரிடப்பட்டதுடன், கிறிஸ்துவுக்கு முன்னர்

இரண்டாயிரம் ஆண்டளவில் அழிக்கப்பட்ட கிரேக்கைச் சேர்ந்த ஒரு தீவிலிருந்த நகரத்தில் இடிபாடுகளுக்குள் அவரை வகைகளும் இருக்கக் காணப்பட்டன.

பேரீச்சம்பழம், திராட்சைப்பழம், வத்தகப்பழம் மற்றும் சதையுள்ள உலர்வலையப்பழவகைகள் ஆகியன கல்லறைக்குள் இருந்தன. இவைகளுக்கு வாசனையைக் கொடுப்பதற்கு சீரகம் மல்லி, எள்ளு போன்ற தானியவகைகளும் ஊசியிலைச் செடி வகைகளும் மற்றும் குறுவியா எனப்படும் பழவகைகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

உடுபுடவைகளின் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் சணல் விதைகள் வைக்கப்பட்டிருந்தன. கல்லறைக்குள் வைக்கப்பட்டிருந்த பொருட்களில் உற்பத்திப் பொருட்களும் தானிய வகைகளும் ஒருவேளை இறக்குமதி செய்யப்பட்டவைகளாக இருக்கலாம். ஊசியிலைச் செடிகள் லெபனான் அல்லது வடகீழ் சூடானிலிருந்தும், குறுவியாஎனப்படும் பழவகைகள் சூடானிலுள்ள செங்கடல் கரையோர மலைகளிலிருந்தும் பெறப்பட்டிருக்கக் கூடும். தென் ஆபிரிக்காவிலுள்ள கலகாரி பாலைவனத்தில் (Kalahari Desert) வசிக்கும் மக்கள் இன்றும் இப் பழவகைகளை உண்கின்றார்கள்.

தானியங்கள் நல்ல நிலையில் இல்லை. ''துரதிஷ்டவசமாக, விதைகளுடன் பயிர்க்கொல்லிப் பூச்சிகளும் புதைக்கப்பட்டிருந்ததால் இவ்விதைகளின் தண்ணீர்த்தன்மையும் தானியமும் இப்பயிர்க்கொல்லிப் பூச்சிகள் இனப்பெருக்கம் செய்துகொண்டு நீடித்து வாழ உதவின. தானியத்தின் உட்பகுதி யாவும் பூச்சிகளினால் சாப்பிடப்பட்டு தானியம் வெறும் காய்ந்த உமியாகவே இருக்கின்றது''. எனதொல்பொருள் தாவர ஆராய்ச்சி விரிவுரையாளரான திரு. கோடன் இல்மன் கூறினார் இத்தாவரங்கள் வரட்சியைத் தாங்கக்கூடியனவா அல்லது நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டனவா என்பதையும் இவற்றின் இனப்பண்பு பற்றியும் அறிவதற்கு தற்பொழுது முடியாதிருப்பதாலே திரும்பவும் இத்தாவரங்களைப் பயிரிட முடியாதிருக்கின்றது.

தானியங்களின் அமைப்பைக்கொண்டுஅவற்றின் இனத்தைக் கண்டு கொள்ளும் தற்கால வழிமுறைகளைக் கையாள்வதை விட, மனிதவள தொல் பொருள் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்

தப்படும் டீ. என். ஏ (D. N. A) ஆய்வின்மூலம் அவற்றின் இனத்தைக் காண்பது சுலபமாகும்.

தாவரங்களின் சிறப்புத் தன்மைகளை ஆய்வாளர்கள் கண்டு பிடிப்பதற்கு இது உதவியாக இருக்கும். ''தற்பொழுது நாங்கள் பண்டைய மாதிரித் தாவரங்களில் டீ. என். ஏ பரிசோதனை மேற்கொள்வதில்லை'' என பருப்பு, அவரை முதலிய தானியங்களின் ஆராய்ச்சியில் நிபுணத்துவம் பெற்றவரும், திரு கில்மன் அவர்களின் சகாவுமான ஆன் பட்லர் கூறினார். ''இந்தப் பரிசோதனை மேற்கொள்ளக்கூடியதாயிருப்பினும், இது செலவு மிக்கதும், நீடிய வழிமுறைகளைக் கையாளவேண்டிய ஒன்றாக இருக்கும்'' எனவும் இவர் மேலும் கூறினார்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தாது பழைய உணவுகளை ஓரளவாகுதல் தயாரிக்க முடியும் பலவிதமான பார்லியை கட்டாயமாகப் பயன்படுத்தவேண்டியிருந்த போதிலும் மெசொப்பொற்றேமியாவின் பெண் தெய்வமான நிங்காசியைத் தொழுவதற்குப் பாடப்பட்டதும், 4000 வருட காலப் பழமை வாய்ந்ததுமான தோத்திரப் பாடல்களில் கூறப்பட்டதுமான முறையைப் பின்பற்றி சுமேறியர் பருகிவந்த பானம் போன்ற பியரை சான்பிறான்சிஸ்கோ விலுள்ள அமெரிக்கக் குழு ஒன்று தயாரித்துள்ளது.

பண்டைக்காலத்தில் கமச்செய்கையில் பயிரிடப்பட்ட பயிர்களின் உருசி என்ன என்பதை விட, அவை பயிர் செய்யப்பட்ட முறையும், அவற்றை பேணிக்காத்த முறையும் அப்பயிர்கள் பற்றிய அறிவுமே தேவையானதாகும், இந்தத் தகவல் பண்டைய காலக் கமச்செய்கையை விளக்குவதற்கு மாத்திரமல்லாது எதிர்காலத்தைய கமச்செய்கையை உருவாக்கவும் உதவும்.

—★—

# ஆப்கானிஸ்தானில் புதிய பரிணாமம் ஆட்சிக் கபையும் அதிருப்திக் குழுவும் போர்க்கோலம்

(தினகரன்- 15.5.92)

ஆசியாவில் மற்றுமோர் சர்ச்சைக்குரிய நாடாக விளங்கிய ஆப்கானிஸ்தானில் மழைவிட்டும் தூவானம் ஒயவில்லை என்பது போல், 14 ஆண்டுகள் நடைபெற்ற சிவில் போர் ஓய்ந்தும் இன்னும் பூசல்களும் மோதல்களும் நீடித்துக் கொண்டே இருக்கின்றன.

சக்திவாய்ந்த முஜாகுதீன் குழுக்களான ஜமயத் இ இஸ்லாமியும் கெய்ஸ்ப் இ இஸ்லாமியும் ஒன்றை ஒன்று ஏற்று அங்கீகரிக்காததன் விளைவே இந்தப் பூசல்களுக்குக் காரணமாகின்றது.

1979 -ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27- ம் திகதி அப்போதைய சோவியத் ஒன்றியம் தனது அண்டை நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தானை இரவோடிரவாக வன்கவர்ந்தபோது அங்கு அரசியல் நெருக்கடி உருவாகியது.

பல முஜாகுதீன் குழுக்கள் ஆயுதமேந்திச் சோவியத் ஆக்கிரமிப்புப் படைகளை எதிர்த்துப் போராடத் தொடங்கின. இதனால் அரசியல் நெருக்கடி மேலும் சிக்கலடைந்தது.

முஜாகுதீன் குழுக்களுக்கு அமெரிக்கா கோடிக்கணக்கான பணவுதவியையும் பெருந்தொகையான நவீன ஆயுதங்களையும் வழங்கி உதவியது. ஏழு முஜாகுதீன் இயக்கங்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டன. இவற்றின் தலைமையகங்கள் பாகிஸ்தானிய நகரமான பெசாவரில் அமைந்திருந்தன. அமெரிக்க உதவிகள் அனைத்தும் பாகிஸ்தான் அரசாங்கத்தின் ஊடாகவே வழங்கப்பட்டன. பாகிஸ்தானும் ஈரானும் வெவ்வேறாகப் போராட்டக் குழுக்களுக்கு உதவின.

காலக்கிரமத்தில் ஏற்பட்ட அரசியல் பரிணாம மாற்றங்களால் பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. இதன் பலனாக 1989 ம் ஆண்டு சோவியத் ஒன்றியம் தனது படைகளை திரும்பப் பெற்றது.

ஆனால் தனது கைப்பொம்மையாக நஜிபுல்லாவின் தலைமையில் ஓர் ஆட்சியை நிறுவிவிட்டுச் சென்றது.

ஆயினும் போராட்டத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை முஜாகுதீன் சரத்தடிப்படைக் குழுக்கள் ஜனாதிபதி நஜிபுல்லாவின் ஆட்சியை எதிர்த்துப் போராடின.

கிழக்கும் மேற்கும் சந்திக்கும் எல்லையில் அமைந்துள்ள ஓர் எல்லைநாடு ஆப்கானிஸ்தான் சீனா, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளின் நடுவிலும் அமைந்துள்ளதால் ஆப்கானிஸ்தான் கேந்திர முக்கியத்துவம் பெறுகிறது.

வல்லரசுகளின் கண் ஆப்கானிஸ்தான் மீது இருந்த போதிலும் எதிர்பாராத விதமாக அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட சடுதியான மாற்றம் காரணமாக ஆப்கான் பிரச்சினையில் தலையிடுவதில்லை என அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் இணங்கி கொண்டன. இந்த உடன்பாட்டின் பிரகாரம். இவ்வாண்டு ஜனவரி முதல் ஆப்கான் அரசாங்கத்திற்கும் கரந்தடிப்படையினருக்கு நேரடியாக வழங்கிய சகல உதவிகளையும் அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் நிறுத்திக் கொண்டன.

இந்த நிலையில் நஜிபுல்லாவின் ஆட்சிபடிப்படியாக ஆட்டம் காணத் தொடங்கியது. இதே வேளையில் ஐக்கிய நாடுகளின் சமாதான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வந்தது

கடந்த திங்கள் நடுப்பகுதியில் கடும் தாக்குதல்களை முடுக்கிவிட்ட ஜமயத் இஸ்லாமி, பலகேந்திர இடங்களை கைப்பற்றியது. தளபதி அகமது சா மசூத் தலைமையில் நடத்தப்பட்ட இத்தாக்குதல்களால் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் கிளர்ச்சிப் படைகளிடம் வீழ்ச்சியடைந்தது.

நாட்டைவிட்டு தப்பியோட முயன்று தோல்விகண்ட ஜனாதிபதி நஜிபுல்லா காபூலிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைப் பணியகத்தில் இரகசியமாக தஞ்சமடைந்தார். அவரின் தற்பேதைய நிலை இன்னும் தெளிவாகத் தெரியவில்லை

இதே வேளையில் ஹெஸ்ப்-இ-இஸ்லாமி என்ற மற்றுமொரு ஆற்றல் வாய்ந்த குழு காபூலின் தென் பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது இதன் தலைவராக குல்புதீன் கெக்மத்தயார் ஓர் அடிப்படைவாதி. தீவிர இஸ்லாமியக் கொள்கைகளைத் தன்னில் வரித்துக்கொண்டவர்.

கெஸ்ப்-இ-இஸ்லாமி இயக்கத்தைத் தவிர்ந்த ஏனைய ஐந்து குழுக்களும் ஜமயத் இ-இஸ்லாமியுடன் இணைந்து பணியாற்ற இசைந்தன.

நாட்டை ஆட்சி செய்ய 50 பேரை உள்ளடக்கிய இடை கால ஆட்சி சபையொன்று நிறுவப்பட்டது. கெஸ்ப்-இ-இஸ்லாமி இயக்கத்தைத் தவிர்ந்த ஏனைய ஆறு குழுக்களும் இதில் அங்கம் வகிக்கின்றன. இக்குழுக்களின் பிரதிநிதிகளாக 30 பேரும் இஸ்லாமிய மத அறிஞர்கள் பத்து பேரும் மற்றும் பத்து அரசியல்வாதிகளும் ஆட்சி சபையில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்தச் சபையின் தலைவராக பேராசிரியர் சிப்கத்துல்லா முஜாதிதி பொறுப்பேற்றுள்ளார் ஜமய-இ-இஸ்லாமி இயக்கத்தின் தலைவராக இருவக்கு வயது 63. காபூல் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத்துறை பேராசிரியராகக் கடமையாற்றிய இவர் அரசியல் நெருக்கடியால் 20 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறிப் பாகிஸ்தானில் வாழ்ந்துவந்தார்.

பாகிஸ்தானிலிருந்து தனது படைகளுடன் திரும்பிவந்த பேராசிரியர் முஜாதிதி கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். நஜிபுல்லாவின் வடான் கட்சியின் ஆட்சிச் சபையிடமிருந்து ஆட்சியைப் பொறுப்பேற்ற எளிமையான வைபவம் காபூல் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இவ்வேளை இந்த இடைக்கால ஆட்சி சபையில் அங்கம் வகிக்காத கெஸ்ப்-இ- இஸ்லாமி காபூலில் தாக்குதல்களை ஆரம்பித்தது. ரொக்கட்டுக்கள், சிறிய ஏவுகணைகள் என்பவற்றால் காபூலின் அநேக இடங்கள் தாக்குதலுக்குள்ளாகின. ஆயிரக் கணக்கானவர்கள் காயமடைந்தனர். பலர் மாண்டனர். பல கட்டிடங்கள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதல் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுதும் அதைப் பொருட்படுத்தாமல் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் காபூலுக்கு முதல் வெளிநாட்டுத் தலைவராக நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டார். புதிய காபூல் அரசாங்கத்திற்கு அபிவிருத்திக்கான அன்பளிப்பாக 2- மில்லியன் அமெரிக்க டாலர்களையும் வழங்கினார்.

இரண்டு ஆண்டுகளில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றவாக்குறுதியின் பேரிலேயே இடைக்கால ஆட்சிச் சபை நிறுவப்பட்டுள்ளது. மே ஐந்தாம் திகதி இடைக்கால ஜனாதி

பதி முஜாதிதி 36 அமைச்சர்களை நியமித்தார். நஜிபுல்லாவின் ஆட்சியை வீழ்த்தக் காரணமான அமத்சா மசூத் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜெனரல் ரகீம் வர்டாஃ இராணுவத்தளபதியாக நியமனம் பெற்றுள்ளார்.

இதேவேளை தொடர்ந்தும் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த கெக்மத்தயார், இடைக்காலச் சபையுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒரு தூதுக்குழுவை காபூலுக்கு அனுப்பினார். பேச்சுவார்த்தையின் விபரம் வெளியிடப்பட வில்லை.

ஆனால் மே ஆறாம் திகதி பிரகடனம் செய்யப்படாத ஒரு போர் நிறுத்தம் ஏற்பட்டது. கெஸ்ப் இ- இஸ்லாமி தாக்குதலை நிறுத்திக் கொண்டதற்கு எந்தவிதமான உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவில்லையென்று ஆட்சிச் சபை அறிவித்துள்ளது.

போர் நிறுத்தத்தை உறுதி செய்ய குல்புதீன் கெக்மத்தயாரினால் சமர்ப்பிக்கப்பட்ட கடைசியான மூன்று நிபந்தனைகளையும் பாதுகாப்பு அமைச்சர் அமத்சா மசூத் நிராகரித்துள்ளார் என பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இடைக்கால ஜனாதிபதி முஜாதிதியைப் பதவியிலிருந்து அகற்றவேண்டுமென்பதும் இடைக்கால அரசாங்கத்தை குறைக்க வேண்டுமென்பதுமே அந்த மூன்று நிபந்தனைகளுமாகும்.

பஷ்தூன், தஜிகி, உஸ்பெக் ஆகிய மூன்று ஆப்கானிஸ்தானிய இனங்கள் பாரம்பரிய பெரும்பான்மை இனங்கள்.

உஸ்பெக் வீரர்கள் கம்யூனிஸ்ட் ஆட்சியை எதிர்த்துப் போராடியதில் பெரும் பங்காற்றியவர்கள் என்பதால் அவர்களது இராணுவ அணியைப் புறக்கணிக்கும் ஆலோசனைக்கு இடமேயில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் அமத்சா மசூத் கூறியுள்ளார்.

கெஸ்ப் இஸ்லாமிய கரந்தடிப்படையினர் தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சர் மசூத் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

காபூலில் வாழும் இருபது லட்சம் மக்களும் செய்வதறியாது பயப்பிராந்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இடைக்கால அரசாங்கத்திற்கும் கெஸ்பி கரந்தடிப்படையின

ருக்கும் இடையில் சண்டை மூண்டால் ஏற்படப் போகும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் எண்ணியே அவர்கள் கவலையும், கலக்கமும் அடைந்துள்ளனர்.

பொது எதிரியை வீழ்த்துவதில் வெற்றி கண்ட முஜாகிதீன் இயக்கங்கள் பொது இணக்கமொன்றைக் காண முடியாத நிலையிலிருப்பது துரதிஷ்டம்என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

துப்பாக்கி வேட்டுக்கள், குண்டு வெடிப்புக்கள், ஏவுகணைத் தாக்குதல்கள் என்பற்றிடையே 14 ஆண்டுகள் சிக்கித் தவித்த ஆப்கான் மக்கள், நஜிபுல்லாவின் ஆட்சியின் வீழ்ச்சியுடன் விடிவு வந்ததாக எண்ணிய எண்ணம் நிறைவேறவில்லை.

ஆப்கானிஸ்தானில் உள்ளூர் போர் புதிய பரிணாமத்தில் கருக் கொண்டுள்ளது. அமைதிக்காக ஏங்கித் தவிக்கும் ஆப்கானிஸ்தான் மக்களின் எண்ணம் ஈடேறுமா? அன்றேல் அழிவுகளும் அனர்த்தங்களும்தான் தொடர்கதையாகுமா?

அடுத்து வரும் சில வாரங்களில் இக்கேள்விகளின் விடைகளை அறிந்துவிடலாம். ★

எந்த இலக்கியமும்
முழுமையானதல்ல —
எழுதப்பட்டிருக்கும்
அந்த மொழி செத்து
ஒழிந்தால் ஒழிய.

—ஹென்றி லாங்ஃபெல்லோ

# சிறுபான்மையினருக்கு சுயாட்சி

— அட்றியன் வியேமான்ன —

(டெயிலி நியூஸ் 12-5-92)

இறைமையுள்ள ஒரு நாட்டில் தங்களுக்கென தனித்துவமானதும், தன்னாதிக்கம் கொண்டதுமான ஒரு அரசை அந்த நாட்டுச் சிறுபான்மை இனம் கோருவது ஒன்றும் புதிதல்ல. இப்படியான கோரிக்கைகள் முன்னைய காலங்களிலும் முன்வைக்கப்பட்டுள்ளன. பிரித்தானிய அரசுகளுக்கும் அதன் மக்களுக்கும் இது நன்கு தெரியும். 1600ஆம் ஆண்டிலிருந்து இந்த நாடு ஒற்றையாட்சி முறையைக் கொண்டிருந்து வந்துள்ளது. என்பதைப் பிரித்தானியாவில் தற்பொழுது வாழ்ந்துவரும் இலங்கையர்கள் நன்கறிவார்கள்.

இந்த நாட்டுப் பிரசைகளாகத் தங்களுடைய தீவில் வாழ்ந்துவந்த ஐரிசு (Irish) மக்கள், தங்களுக்கென ஒரு தனி நாடு வேண்டி முன்வைத்த கோரிக்கையைப் பதவிக்கு வந்த ஒவ்வொரு பிரித்தானிய அரசாங்கங்களும் நிராகரித்தமையால் அவர்கள் தங்களுடைய சுதந்திரத்துக்காகப் போராடினர்.

தற்பொழுது அயர்லாந்துக் குடியரசு (Republic of Ireland) என அமைக்கப்படும் ஐரிசு சுதந்திர அரசின் சுதந்திரத்தை 1922ம் ஆண்டில் அன்றைய பிரித்தானிய அரசாங்கம் அங்கீகரித்ததன் காரணமாக ஒற்றையாட்சியாகவிருந்த நாடு இரண்டு நாடுகளாக பிளவுபட்டு அங்கு நீண்டகாலமாக நடைபெற்றுவந்த கரந்தடிப் போர் ஒரு முடிவுக்கு வந்தது.

உலகில் பெரிய பேரரசின் தாய்நாடாகவும், கைத்தொழிலில் மிகவும் முன்னேற்றமடைந்த நாடாகவும் முதலாவது உலகப் போரின்பின் வெற்றிவாகை சூடி எழுச்சிபெற்ற நாடாகவும் பிரித்தானியா 1922ஆம் ஆண்டில் விளங்கியது என்பதை நினைவுகூருவது அறிவு பூர்வமானதாகும்.

நாட்டைப் பிரித்து சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென்று முடிவு ஐரிசு கரந்தடிப் படையினரின் இராணுவ வெற்றியால் ஏற்பட்ட ஒன்றல்ல. இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஒரு தேசிய இயக்கத்தை ஒடுக்கிவிடமுடியாதென எல்லோரும் மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டமையாலேயே இது சாத்தியமானது.

இது நடந்த எழுபது ஆண்டுகளின் பின்னர் ஸ்கொட் (Scots) மக்களின் இதைப்போன்றதொரு கோரிக்கைக்கு பிரித்தானியா தற்பொழுது முகங்கொடுக்க வேண்டியுள்ளது. சுதந்திர மான இறைமையுள்ள ஒரு அரசைக் கோருவதே ஸ்கொட்டிசு தேசியக் கட்சியின் (Scotish National Party) முக்கிய குறிக்கோளாக விளங்குகின்றது.

இப்படியானதொரு கோரிக்கையை விடுவதற்கு ஒரு அரசியல் கட்சிக்கு உரிமை உண்டு எனப் பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்கள் உட்பட அகில உலகிலும் வாழும் மக்கள் கருதுகின்றார்கள்.

அரசியல் யாப்புத் திருத்தங்களால் இக்கட்சி தடைசெய்யப் படாததுடன் இதன் வெளிப்படையான செயற்பாடுகள் சட்டத்தாலோ அல்லது பொதுசன அபிப்பிராயத்திலோ சட்டவரம்புக் கப்பாற்பட்டவையென தடைசெய்யப்படவுமில்லை.

பிரித்தானியாவில் தற்போது நடந்துமுடிந்த தேர்தலின் போது ஸ்கொட்லாந்தின் சுதந்திரம் மிகவும் முக்கிய விடயங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. இரண்டு முக்கிய கட்சிகளான கொன்சர்வேட்டிவ் கட்சி (Conservative Partyயும்,) தொழிற் கட்சி (Labour Party)யும் இந்த விடயத்தில் வெவ்வேறான கொள்கைகளைக் கொண்டிருந்தன.

ஸ்கொட்லாந்துப் பாராளுமன்றத்துக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்று தேர்தல் பிரச்சாரங்களின்போது தொழிற் கட்சி வற்புறுத்தி வந்த அதே வேளையில் அப்படிக் கூடுதலான அதிகாரம் வழங்கப்படுவதன் மூலம் பிரித்தானியா பிளவுபடுவதையும் அது இரண்டு சுதந்திரமான நாடுகளாக மாறுவதையும் தவிர்க்கமுடியாது எனக் காரணங்காட்டி கொன்சர் வேட்டிவ் கட்சி இதை எதிர்த்தது.

தற்பொழுது இருப்பதுபோல் இனிமேலும் பிரித்தானியாவில் ஒற்றையாட்சி நிலவவேண்டும் என்றும் அப்படி இருப்பது ஸ்கொட்லாந்து மக்களின் நீண்டகால நலன்களுக்கு நன்மை

பயப்பதாக இருக்குமென்றும் அவர்களுக்கு எடுத்துக்கூறி, அவர்களை அதை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும் என்பதே கொன்சர்வேட்டிவ் கட்சியின் கொள்கையாகும். இருந்தபோதிலும் ஸ்கொட்லாந்து மக்கள் தங்களுக்கு முழுமையான சுதந்திரமான நாடு ஒன்று வேண்டுமென வாக்களிப்பார்களாயின் பிரித்தானிய அரசு அதை எதிர்க்காதெனவும், நாடு பிரிக்கப்படும் எனவும் பிரதம மந்திரி ஜோன் மேஜர் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்த நாட்டில் வாழும் 56 மில்லியன் மக்களின் ஒருவர் தானும் ஸ்கொட்லாந்து மக்களின் சுதந்திரக் கோரிக்கையை ஒடுக்குவதற்காக போரில் ஈடுபடவோ அல்லது மற்றவர்களை அதில் ஈடுபடச்செய்யவோ தங்கள் கனவிலும் விரும்பமாட்டார்கள்.

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு இலங்கையருக்கும் இது பொருந்தும். தாங்கள் வாழும் நாடு இரண்டு சுதந்திரமான இறைமையுள்ள நாடாகப் பிரிக்கப்படுவதை இங்குள்ள ஒவ்வொருவரும் பெருந்தன்மையுடன் நோக்குகின்றார்கள்.

மேற்கூறியவை யாவும் இலங்கைக்கும் பொருத்தமானதாகும். தமிழ்த்தேசியவாதத்தை இராணுவ பலத்தைக்கொண்டு அடக்கிவிடலாம் என்ற அபிப்பிராயம் பரவலாக இலங்கையில் நிலவுகின்றது.

இதைப்போன்றே பிரித்தானிய அரசாங்கம் சென்ற முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஐரிசு தேசியவாதத்தை ஒடுக்க முயன்றும் அதனால் அதைச் செய்யமுடியவில்லை. பங்காள தேசத்துக்குச் சுதந்திரம் வேண்டும் என்று தேசியவாதிகள் முன்வைத்த கோரிக்கையைப் பலம் பொருந்திய பாகிஸ்தான் படைகளாலும் அடக்கமுடியவில்லை.

இப்படியான நடவடிக்கைகள் பயனற்றவை என்பதற்கு மேலும் பல சான்றுகள் உள்ளன.

20ம் நூற்றாண்டின் வரலாற்றை எழுதுகையில், 1917 ம் ஆண்டில் சார் (Czar) ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து சோவியத் ஒன்றியத்தை உருவாக்கக் காரணமாயிருந்த அக்டோபர் புரட்சியைவிட 1922ம் ஆண்டில் பிரித்தானியாவை இரண்டாகப் பிரித்த ஐரிசு தேசியவாதம் முக்கியம் வாய்ந்ததாகக் கருதக்கூடியதாக விருக்கின்றது.

இரண்டாம் உலகப் போர் முடிவுக்காலம் வரை தொடர்ந்து இருந்து வந்த காலனித்துவ ஆட்சியின் முடிவே ஜரிசு சுதந்திரத்துக்கு வித்திட்டது எனலாம்.

அதிகாரப் பரவலாக்கலும், ஆட்சியுரிமையும் தேசிய வேட்கைகளை நிறைவு செய்து முழுச் சுதந்திரத்துக்கான வேட்கையைத் தணிக்குமெனப் பலதரப்பட்ட மக்கள் எண்ணுவதாகப் பத்திரிகை வாயிலாக அறிய முடிகின்றது. ஆனால் எங்கள் வரலாறு மட்டுமல்லாது அண்மைக்கால உலக வரலாறுகள் யாவும் இதற்கு எதிர்மாறாகவே விடயங்கள் நடந்திருப்பதை எடுத்துக்காட்டியுள்ளன.

உள்ளூர் அரசியல் வாதிகளுக்குக் கூடிய செயலுரிமைகளையும் பொறுப்புகளையும் வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள், குடியேற்ற அந்தஸ்துள்ள ஒரு நாடு என்ற திருப்தியுடன் அவர்களை இருக்கச் செய்வதற்குப்பதிலாக அவர்களின் விடுதலை வேட்கையை வளர்க்க உதவியதை இலங்கை ஒரு பிரித்தானிய குடியேற்றநாடாக இருந்த காலத்திலிருந்து வாழ்ந்துவருபவர்கள் நினைவு கூருவார்கள்.

செயலுரிமை எவ்வளவுக்குக் கூடுதலாகப் பரவலாக்கப்படுகின்றதோ அவ்வளவுக்குக் கூடுதலாக முழுமையான சுதந்திரத்தை நாங்கள் வேண்டி நின்றோம். இப்படியான சுதந்திர வேட்கையின் சிறப்பையிட்டு நாம் பெருமைப்பட்டோமேயல்லாது அதை ஒரு குற்றச் செயலாக கருதவில்லை.

நாம் சுதந்திரமடைந்த காலத்திலிருந்து பல துன்பகரமான சம்பவங்கள் நடந்திருந்தும் அதையிட்டு இன்றும் நாங்கள் வருந்தப்படவில்லை. தாய்மையை எட்படி உலகம் மதிக்கின்றதோ அதைபோன்று சுதந்திரத்தையும் அன்றும் இன்றும் மதிக்கின்றது.

செயலுரிமை பரவலாக்கல் செய்யின் தனிநாடு கோரும் வேட்கைகளை கொண்ட மக்கள் தங்கள் தனித்துவமான, சுதந்திரமான இறைமையுள்ள நாட்டுக்கான கோரிக்கையைக் கைவிட்டு விடுவார்கள் என்று நினைக்கின்ற மயக்கநிலையை நாங்கள் எக்காலத்திலும் கொண்டிருக்கக் கூடாது.

ஸ்கொட்லாந்து மக்களின் சுதந்திரம் சம்பந்தமாகக் பிரித்தானியாவிலுள்ள கன்சர் வேட்டிவ் கட்சி இப்படியான ஒரு மயக்கநிலையைக் கொண்டிருக்கவில்லை.

தமிழ் மக்கள் ஆயுதமேந்தியிருப்பதாலும், ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாலும், இலங்கையில் நடந்தேறிய விடயங்களை நோக்குமிடத்திலும் செயலுரிமைப்பரவலாக்கல் பயனற்றதாயுள்ளது. இரண்டு இராணுவங்களைக் கொண்ட ஒற்றையாட்சி இருக்கமுடியாது. ஒரு இராணுவம் இருப்பதே கட்டாய தேவையாகும்.

தமிழ் மக்களுக்கு முக்கியமானவர்களாக விளங்கும் ஆயுதமேந்திய விடுதலைப்புலிகளை ஒன்றில் ஆயுதங்களைக் கைவிடும்படி அவர்களை இணங்கவைக்கவேண்டும் அல்லது இராணுவ நடவடிக்கை மூலம் சரணடையச் செய்தல் வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைக்க வைத்தது போன்ற சனநாயக வழியில் பெறமுடியாத பல நன்மைகளை ஆயுதப் போராட்டம் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்டபடியால் அவர்களை ஆயுதப்போராட்டத்தைக் கைவிடும்படி இணங்க வைப்பது தற்போது முடியாத விடயமாகும்.

இராணுவ நடவடிக்கை மூலம் அவர்களைத் தோற்கடிப்பதே ஒரேவழியாகும். இப்படியான நடவடிக்கையால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் தாக்கங்களையும் இலங்கையிலுள்ளவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. மீண்டும் இது விடயத்தில் பிரித்தானியாவில் நடக்கும் சம்பவங்கள் எங்களுக்குப் புத்திபுகட்டுவதாக இருக்கின்றன.

கடந்த இருபத்திநான்கு ஆண்டுகளாக வட அயர்லாந்திலுள்ள ஐ. ஆர். ஏ. (IRA) எனப்படும் ஐரிசு குடியரசுப் படையுடன் ஒரு கரந்தடி வீரனுக்கு 100 இராணுவம் என்ற அடிப்படையில் கரந்தடிப் போரை நடாத்தியபோதும் பிரித்தானிய அரசாங்கத்தால் அதில் வெற்றிபெற முடியவில்லை.

வடஅயர்லாந்திலிருந்து பிரித்தானியத் துருப்புக்களை விரட்டி அயர்லாந்தை ஒரு நாடாக்கும் நோக்கில் ஐரிசு குடியரசுப்படை பிரித்தானிய துருப்புக்கள் மீதும், அவர்களுடைய அரசாங்க ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல்களை நடாத்திவருகின்றது. ஐரிசு குடியரசுப் படையைத் தோற்கடித்து ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சியில் பிரித்தானியத் துருப்புக்கள் நவீன ஆயுதங்களையும் கரந்தடிப் போர் எதிர்ப்பு நவீன யுத்திகளையும் பாரிய அளவில் கையாண்டு வந்துள்ளார்கள்.

இராணுவத்துக்குத் தேவையான சகல வசதிகளை அளித்திருந்த போதிலும் இந்தப் போர் ஒரு முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை.

இலங்கையில் ஒரு கரந்தடி வீரனுக்கு பத்து இர ணுவத்தினர் என்ற விகிதத்தில் உள்ளன, இலங்கையில் நடக்கும் பேரச்சம் தரும் சண்டையை நோக்குமிடத்து வடஅயர்லாந்தில் கரந்தடிப் படை வீரர்களுக்கு இருக்கும் வெற்றிவாய்ப்பிலும் பார்க்க இலங்கையில் கரந்தடிப்படையினருக்கு வெற்றிவாய்ப்பு அதிகமாகவுள்ளது. ஐரிசு குடியரசுப் படையினருக்கு இருக்கும் ஆதரவிலும் பார்க்க விடுதலைப் புலிகளுக்கு அனைத்துலக ரீதியாக அமோக ஆதரவுண்டு.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்துச் சரணடையச் செய்யவேண்டுமாகில் இப்பொழுது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் பாரிய அளவிலான நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும். இப்படியான முயற்சி நிதி மற்றும் இராணுவத் தளபாடங்களில் பாரிய செலவை ஏற்படுத்துவதுடன் அரசியல் ரீதியிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும்.

இப்படிப்பட்ட பாரிய விலையைக் கொடுத்தபோதிலும் இந்தப் போர் நீண்டகாலத்துக்கு நீடிப்பதுடன் ஈற்றில் இதனால் ஏற்படும் விளைவுகள் எதிர்பார்த்த மாதிரி அமையாதுபோகலாம்.

இந்த விடயத்தில் உண்மையான நிலை இதுவாகும். மக்களுடைய செல்வமும் வாழ்வும் ஆபத்தை எதிர்நோக்குவதால் நான் எடுத்துக்கூறிய விடயங்களை வாசகர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.

இந்த விடயத்தில் பொதுமக்களிடையே தற்போது காணப்படாத விழிப்புணர்ச்சியும் பகிரங்க கலந்துரையாடலும் அவசியமானது. இந்த நிலைக்குப் பரிகாரம் காணுவதில் பத்திரிகைகள் பெரும் பங்களிப்பை ஆற்றமுடியும். ★

2232 C.C

★—★—★—★—★—★—★—★—★—★—★—★—★—★—★

# தோழர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 10வது வெளியீடாகும்.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறுபட்ட எண்ணங்களை சரியாக ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும்.

இக்கட்டுரைகளில் உள்ள தகவல்கள் எல்லாம் சரியானவையல்ல.

தாய்லாந்தில் இராணுவத் தலைவர் பிரதமராக நியமிக்கப் பட்டார் என்ற கட்டுரையில் நியமிக்கப்பட இருந்த பிரதமர் அசிந்தா 10வது வெளியீடு வெளிவரும் வேளையில் பதவியை இழந்து விட்டார்.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் மேலும் ஊக்குவிக்கும்.

★—★—★—★—★—★—★—★—★—★—★—★—★—★—★

# அலையே நீ பொங்காதே!

அலையே நீ பொங்காதே - என்
இலக்கினை நீயும் மறைக்காதே
கருவியை ஏந்திக் கரையினிலே- பகைப்
படகினை உடைக்கவே நிலையெடுத்தேன்.
அலையே நீ பொங்காதே -என்
இலக்கினை நீயும் மறைக்காதே.

சிலைபோல் இப்போ திருக்கின்றேன்
சிங்களம் வந்தால் சிதைத்திடுவேன்
திரையே நீ ஏன் ஒலிக்கின்றாய்
திரைபோட் டிலக்கினை மறைக்கின்றாய்

மாவீரர் கனவை நனவாக்க -அவர்
கனவொடு கருவியும் கைப்பிடித்தேன்
கத்தாதே அலையே கணப்பொழுது - ஒரு
சத்தம் கேட்குதே கடல்மீது

வேதனை கொண்டுதான் ஒலித்தாயா -வேங்கை
வீழ்ந்ததால் வேகம் பெற்றாயா
சற்றே அமைதியாய் இருந்துவிடு -பகை
முற்றையும் பொடிபோலாக் கிடலாம்,

- உதய இலட்சுமி

தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.